நகர சபை, மன்னார்
பெப்ரவரி, 2012

# மன்னாரின் மறுமலர்ச்சி 2022

# மக்கள் திட்டம்

## எதிர்காலத்தை கனாக் காணல், எங்கள் பாரம்பரியத்துக்கு புத்துயிரளித்தல்



உள்ளடக்கம்:

நன்றி நவிலல் .......... 4
பகுதி I .......... 5
1. அறிமுகம் .......... 5
1.1 எதிர்காலத்திற்கான பார்வை .......... 5
1.2 மன்னாரின் உபாயரீதியான இட அமைவு .......... 5
1.3 மன்னார் மாவட்டத்திற்கான அபிவிருத்தி சந்தர்ப்பங்கள் .......... 5
1.3 திட்டத்தில் மக்களை ஒன்றிணைத்தல் .......... 6
2. முக்கிய சாரம்சம் .......... 8
2.1 முழுமையான தெரிவு .......... 8
2.2 தமக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் சமுதாயம் .......... 8
2.3 மக்கள் என்ன சொல்கின்றார்கள் .......... 9
2.4 நீங்கள் நகர சபையின் தலைவராக இருப்பின்… .......... 11
2.5 மக்களின் திட்டம் .......... 13
3. தொலைநோக்கு செயற்பாடு .......... 17
3.1 சமுதாய தொலைநோக்கு .......... 17
3.2 மன்னாரின் சமுதாய தொலைநோக்கு .......... 17
3.3 ஆய்வு .......... 17
3.4 சமுதாய செயலமர்வுகள் .......... 19
3.5 சமுதாய அரங்கம் .......... 19
பகுதி II .......... 22
4. பெறுபேறுகள் விளக்கமாக .......... 22
4.1 அறிமுகம் .......... 22
4.2 மன்னாரின் மனநிலை – மக்கள் தற்போது எங்குள்ளனர்? .......... 22
4.3 மன்னாரின் சந்தர்ப்பங்கள் - மன்னாரை நோக்கி வருவது என்ன? .......... 28
4.4 மன்னாரின் தொலைநோக்கு – மன்னாரிற்கான மக்களை மையமாகக் கொண்ட எதிர்காலம் என்ன? .......... 30
4.5 மன்னாரின் நடவடிக்கைகள் - நாம் அதனை எவ்வாறு யதார்த்தமாக்குவது? .......... 38

–

பகுதி III ........................................................................................................ 48
பிற்சேர்க்கைகள் ........................................................................................................ 48
மன்னாரின் மறுமலர்ச்சி 2022 சுவரொட்டி ........................................................................ 49
செயலமர்வு மற்றும் அரங்கம்: மாதிரி சித்திரங்கள் மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்கள் .................. 50
கிராம செயலமர்வுகள் மற்றும் சமுதாய அரங்கு என்பவற்றின் முழுமையான குறிப்புக்கள் .................. 52
ஆய்வு மற்றும் மறுசீரமைப்புக்கள் ........................................................................................ 69







# நன்றி நவிலல்

மன்னாரின் மறுமலர்ச்சி 2022 என்ற சமுதாய பார்வை செயற்றிட்டம், அபிவிருத்தி வழிகளுக்கான பத்து வருட தொலைநோக்கு மற்றும் மன்னார் நகரத்தின் அபிருத்திக்கான பாதையாக, மன்னார் நகர சபையினால் உருவாக்கப்பட்டத் திட்டமாகும். இந்த திட்டமானது நகர சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடலில் அப்பகுதி மக்களினால் கவரப்பட்ட அணுகுமுறைக்கு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலாவதாக, மன்னாரில் வசிக்கும், பணிபுரியும் மற்றும் கல்வி கற்கும் மக்கள் மற்றும் மன்னாரின் மறுமலர்ச்சி நடவடிக்கைகளில் பங்குபற்றியவர்கள் அனைவருக்கும் நகர சபை தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவர்களுடைய செயற்றிறன் மிக்க பங்களிப்பின் ஊடாக, மன்னாரின் அபிவிருத்தியில் ஆர்வத்துடன் பங்குபற்றுவதுடன், தமது நகரம் மீதான உண்மையான அர்ப்பணிப்பு மற்றும் அன்பினை அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். நகர சபை ஊழியர்களினால் வழங்கப்பட்ட பங்களிப்பும் இந்த நிகழ்வின் வெற்றிக்கு வழியமைத்துள்ளமையை விசேடமாக சுட்டிக்காட்ட வேண்டும்.

இரண்டாவதாக, தமது ஆசிகளை வழங்கிய மன்னார் மாவட்டத்தின் அரசாங்க அதிபர், திரு. சுரத் ரவீந்திர, இந்த செயற்றிட்டத்தினை களப்படுத்திய செயற்குழு உறுப்பினர்கள், ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பங்குபற்றுவதனை உறுதி செய்வதற்கு, கிராம சேவகர்களை பயனுறுதி மிக்க வகையில் ஒருங்கிணைத்த 6ெ 3பிரதேச செயலாளர், திருமதி. ஸ்டென்லி டீ மெல் ஆகியோருக்கும் நகர சபை நன்றிகளை தெரிவிக்க விரும்புகின்றது. மகிழ்வுடன் கலந்து கொண்டமை மற்றும் பெறுமதி மிக்க பங்களிப்பினை வழங்கியமைக்காக கொழும்பிலிருந்து வந்திருந்த திட்டமிடல் நிபுணர்களான திரு. லலித் முத்துகுமாரன, செல்வி சச்சிதானந்தம், நிர்மலா டீ மெல் மற்றும் பேராசிரியர் சிறி ஹெட்டிகே ஆகியோருக்கும் நகர சபை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

நிதிப் பங்களிப்பு வழங்கியமைக்காக கொழும்பு, Exxon Mobilஇற்கும் நகர சபை தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவர்களுடைய பங்களிப்பு இல்லையெனில், இந்த நிகழ்ச்சி சாத்தியமாகியிருக்காது.

மூன்றாவதாக, தமது நம்பிக்கை, ஆவல் மற்றும் விரிவான வலையமைப்பு ஆதரவு என்பவற்றை வழங்கிய மன்னார் பிரஜைகள் குழுவைச் சேர்ந்த திரு. சின்கிளயார் பீட்டர், மன்னார் மக்களுக்கான நேர்மை மற்றும் தலைமைத்துவத்தினை வழங்கிய முன்னாள் அரசாங்க அதிபர் சவேரியன் மரியதாசன் குருஸ், இந்த செயற்றிட்டம் மீதான நம்பிக்கை, அயர்ச்சியற்ற உரைபெயர்த்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆதரவு என்பவற்றை வழங்கிய திரு. ஜே. கமல் ராஜ், நிபுணத்துவமான ஒழுங்குபடுத்தலை வழங்கிய திரு. சுசிலன் மயூரன், பாரிய தொடர்களாக இடம்பெற்ற சமுதாய அரங்கில் பங்குபற்றுநர்களுக்கு தரமான தகவல்களை வழங்குவதனை உறுதி செய்த வளவாளர்கள் மற்றும் அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெறுவதற்கு தமது உழைப்பினை உறுதி செய்த பல இளம் பங்களிப்பாளர்களான, ஏ. சயான் கான், பீ. பிரதீபா, எல்.எம்.டீ.பீ. ஜோய்ஸ் மேரி மற்றும் எஸ். ஷெரீன் துரம் ஆகியோர் உள்ளடங்கலாக கடுமையாக உழைத்த மற்றும் இந்த செயற்றிட்டம் கனிவதற்கு ஆவலாக இருந்த பலருக்கும் நகர சபை நன்றியுடையதாக உள்ளது.

இறுதியாக, திரு. ஜெரமி லியனகேயிற்கும், டயஸ்போரா லங்காவிற்கும் (அவுஸ்திரேலியா) செயற்றிட்டத்திற்காக வழங்கிய ஆதரவு, ஊக்கம் மற்றும் நகர சபைக்கு தொடர்ச்சியான உதவி தொடர்பிலான உறுதி என்பவற்றிக்காக நகர சபை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கான நீண்ட கால அர்ப்பணிப்பை கொண்டுள்ள அனைத்து இன மற்றும் மதக் குழுக்களைச் சேர்ந்த இலங்கையர்களை டயஸ்போரா லங்கா உள்ளடக்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| ............................................................. | ............................................. | ................................................ |
| திரு. சந்தனப்பிள்ளை ஞானப்பிரகாசம் | திரு. ஜேம்ஸ் ஜேசுதாசன் | திருமதி. பேர்னாட் குருஸ் |
| **தலைவர்** | **உபத் தலைவர்** | **செயலாளர்** |

மன்னார் நகர சபை
பெப்ரவரி, 2012

## பகுதி I

# 1. அறிமுகம்

### 1.1 எதிர்காலத்திற்கான பார்வை

மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற முரண்பாட்டிற்குப் பின்னர், வடக்கு மாகாணத்தின் பொது மக்களின் வாழ்க்கை நிலை மெதுவாக இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றது. அண்மையில் இடம்பெற்ற தேர்தலினைத் தொடர்ந்து, உள்ளூர் அதிகாரிகளிடம் நிர்வாகப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளமை இந்த நிலைமாற்றத்திற்கான ஆதாரமாக உள்ளது. உள்ளூர் நிர்வாகத்தின் நிலை இவ்வாறிருக்கையில், மக்களை அரசாங்கத்துடன் மேலும் நெருக்கமாக்கும், தமது பணிகளுக்கு மக்களை மையமாகக் கொண்ட பார்வை மற்றும் வழிகாட்டலை கட்டமைக்கும் பொது மக்கள் பங்குபற்றல் அணுகுமுறையான மன்னாரின் மறுமலர்ச்சி 2022 என்ற நிகழ்ச்சியை மன்னார் நகர சபை திட்டமிட்டு, செயற்படுத்தியுள்ளது. புதிதாக தெரிவு செய்யப்பட்ட சபையின் ஆறு மாத செயற்பாடுகள் என்ற சக்கரத்திற்குள் 2011ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பரில் இந்த நிகழ்ச்சி பொறுப்பேற்கப்பட்டது. தமது பதவிக்காலத்தை ஆரம்பிக்கும் போது, தமது ஆட்சிப் பகுதியில் உள்ள மக்கள் புதிய நிர்வாகத்திடமிருந்து எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்ற கருத்துசார் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதற்காக, உலகெங்கிலும் உள்ள பல நகர சபைகள் உள்வாங்கிய சமுதாய தொலைநோக்கு பார்வை செயற்பாட்டு நடவடிக்கையின் தொடர்ச்சியாக இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னாரின் மறுமலர்ச்சி 2022 செயற்பாடானது, டயஸ்போரா லங்கா அவுஸ்திரேலியாவின் ஆதரவுடன் மன்னார் நகர சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மன்னார் நகரப் பகுதியின் அபிவிருத்திக்கான நகர சபையின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளினை அடிப்படையாகக் கொண்டு இது தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டில் மன்னார் நகர பிரஜைகள், செயற்குழுவின் உதவியுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான உபப் பிரிவுகளும் உள்ளடங்கியுள்ளன. இலங்கை அரசாங்கத்தின் ***வடக்கின் வசந்தம்*** அபிவிருத்தி நிகழ்ச்சி மற்றும் ***தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை 2011-2030***[1] (NPPPP 2011-2030) என்பவற்றின் பரந்த அளவுருக்களுக்கு உட்பட்டதாக இந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.2 மன்னாரின் கேந்திர இடஅமைவு

இலங்கையின் வடமேற்குப் பகுதியில் மன்னார் மாவட்டம் அமைந்துள்ளது. கேந்திரம் முக்கியத்துவம் மிக்கதாக மன்னார் மாவட்டம் அமைந்துள்ள புவியியல் சூழமைவானது ஆசியாவின் புவியியல்சார் அரசியலில் முக்கியமான இடத்தை மன்னாருக்கு அளித்துள்ளது. பிரதானமான இந்திய துணைக் கண்டம் மற்றும் சீனா என்பன இதில் சிறப்பு பெறுகின்றன. மேலதிகமாக, மன்னார் தீவின் வடமுனையில் அமைந்துள்ள தலைமன்னாரிலிருந்து, இந்தியாவிற்கு கடல் வழியாக 18 கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ளது. அத்துடன் இந்தியாவிற்கு வெகு அருகில் அமைந்துள்ளமையானது, வர்த்தகம், சுற்றுலா மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பவற்றில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கேந்திர மையமாக அமைந்துள்ளது. அரச படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (எல்.ரீ.ரீ.ஈ) இடையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தினால் மோசமாக பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் ஒன்றாக இது உள்ளது. சுமார் மூன்று தசாப்தங்கள் நீடித்த முரண்பாட்டு இராணுவ இடையீட்டின் மூலம் 2009ஆம் மே மாதம் முடிவிற்கு வந்தது. மோதலுக்குப் பின்னரான இந்த காலப்பகுதியில், தமது **தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம்** என்பவற்றின் ஊடாக, வளர்ந்து வரும் வணிக நடவடிக்கைகளுக்கான மையமாக மற்றும் நாடு முழுவதனையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்கிற தேசிய ஆர்வத்தின் ஒரு அங்கமான சமூக நடவடிக்கையாக மீளக்கட்டியெழுப்புவதற்கான அரசாங்க மூலோபாயமாக இது உள்ளது.

### 1.3 மன்னார் மாவட்டத்திற்கான அபிவிருத்தி சந்தர்ப்பங்கள்

NPPPP 2011- 2030இற்கு அமைய, ஆசிய நெடுஞ்சாலை மற்றும் டிரான்ஸ் ஆசியன் ரயில்வே செயற்றிட்டங்களினால் அபிவிருத்திக்கான விசேட நோக்கம் கொண்ட நகரமாக மற்றும் இலங்கையின் போக்குவரத்து மையமாக மன்னார் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளை மற்றும் இந்திய துணைக் கண்டத்தை இணைக்கும் நுழைவாயிலாக தலைமன்னார் உள்ளது. தென்னிந்தியாவிற்கு மிக

---

[1] இலங்கை ஜனநாயகக் சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி, EXTRAORDINARY, இல.1729/15, ஒக்டோபர் 27,
2011

அண்மையில் மன்னார் அமைந்துள்ளமையும், அம்பாந்தோட்டைக்கான பிரேரிக்கப்பட்ட நெடுஞ்சாலையும், திருகோணமலைக்கான ரயில் பாதை இணைப்பு மற்றும் உத்தேசிக்கப்பட்ட உள்ளக விமான சேவை என்பன யதார்த்தமாக மாறும் போது, இந்திய துணைக்கண்டத்திற்கும், தெற்காசிய அயல் நாடுகளுக்கும், இலங்கையின் பல பகுதிகளுக்குமான போக்குவரத்து நேரமும், செலவும் ஆச்சரியமிக்க வகையில் குறையும்.[2]

இந்தோ-இலங்கை போக்குவரத்து வலையமைப்பின் ஊடாக இந்த அபிவிருத்தி முயற்சிகள் அதிகரித்த எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள், வர்த்தக பிரமுகர்கள் மற்றும் யாத்திரிகர்களினை கவர்ந்து, மன்னாரிற்குள் சிறந்த தங்குமிட வசதிகள், வர்த்தக உதவி சேவைகள், புற சமையல் இடங்கள் மற்றும் பொழுபோக்கு நடவடிக்கைகள் என்பவற்றிற்கான கேள்வியை அதிகரிக்கும். இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ், புதுப்பிக்கப்பட்ட துறைமுகம், பிராந்திய கரையோர எரிவாயு மற்றும் பெற்றோல் ஆய்வு, உத்தேசிக்கப்பட்ட ஏற்றுமதி பதனிடல் வலயம் மற்றும் 24 ஏக்கர் கைத்தொழில் பேட்டை என்பனவும் திட்டமிடப்பட்டு, குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கான சாத்தியத் தன்மையை உருவாக்கியுள்ளன.[3]



## 1.3 திட்டத்தில் மக்களை ஒன்றிணைத்தல்


மன்னாரிற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை தமது பகுதியின் அபிவிருத்திக்கு செயற்றிறன் மிக்க வகையில் பங்களிப்பதற்கான மற்றும் இலங்கையின் இந்த தனித்துவமான பகுதிக்கு தமக்கு விருப்பமான எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் மன்னார் மக்களுக்கு வழங்கப்படவில்லை. அதேவேளை, மன்னாரில் உள்ள பெரும்பாலான மக்கள் யுத்தத்தில் இருந்து மீளும், தமது பிள்ளைகளை கற்பிக்கும் மற்றும் வாழ்வாதாரங்களை கட்டியெழுப்பும் நிலையில் இன்றும் ‘பதுங்கியிருத்தல் மனநிலையை’ கடைப்பிடிப்பதனை உணரக் கூடியதாகவுள்ளது. எனவே, தமது பகுதியின் எதிர்காலம் குறித்த ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் ஏற்படுத்தக் கூடிய இடையீடு ஒன்று அவசியமாகும்.

மன்னார் மக்களின் தொலைநோக்குப் பார்வையை மேம்படுத்தல், சாதகமான எதிர்காலத்தை அடையாளம் காண்பதற்கு மற்றும் தழுவுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் மன்னார் நகர சபையினால் மன்னாரின் மறுமலர்ச்சி 2022 (MM2022) என்ற நிகழ்ச்சி உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன், நகர

[2] ibid
[3] ibid

சபையின் முதலாவதும், நடப்பு காலத்தில் நகர சபையின் செயற்பாட்டிற்கான தெளிவான நிகழ்ச்சி நிரலை வடிவமைப்பதும் இந்த நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாக உள்ளது. தொலைநோக்கு இல்லாதவர்கள், அழிந்து போவார்கள்' என்ற பழமொழி மன்னார் மக்கள் மற்றும் அவர்களது பொதுத் துறை ஊழியர்களைப் பொறுத்தவரையில் உண்மையாக இருக்கின்றது.

கிராம செயலமர்வுகள், பாரிய சமுதாய அரங்குகள் மற்றும் ஆய்வுகளை உள்ளடங்கிய MM2022 நிகழ்ச்சி, நகர சபை மற்றும் பிரஜைகளுக்கு இடையில் ஆக்கப்பூர்வமான பணியாற்றல் உறவுமுறையை ஏற்படுத்தல், நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியை இயலுமாக்கல், மன்னாரின் அளப்பரிய பாரம்பரியத்தை பாதுகாத்தல் மற்றும் 21ஆம் நூற்றாண்டு உலகமயமாகியுள்ள உலகில் மக்கள் மனவுறுதியுடன் ஈடுபடுவதற்கு தயார் செய்தல் போன்ற நோக்கங்களை கொண்டதாக உள்ளது.



## 2. முக்கிய சாரம்சம்

### 2.1 முழுமையான தெரிவு

மன்னார் மாவட்டம் யுத்தத்தில் இருந்து மெதுவாக எழுந்து வரும் நிலையில், யுத்தத்தில் இருந்து அமைதிக்கும், வீழ்ச்சியிலிருந்து வளர்ச்சிக்கும் நிலைமாற்றம் அடைவதில் அம்மாவட்டத்தின் மக்கள் தயங்கிய நிலையிலேயே உள்ளனர். என்ன முன்னேற்றம் உள்ளது என்பது தொடர்பில் நிச்சயின்மை மற்றும் பயம் குறித்த உணர்வுகள் என்பன நாளாந்த வாழ்க்கை மற்றும் கடந்த துயரங்கள் மீதும் கவனம் செலுத்தி வருகின்றது. தமது எதிர்காலம் என்பது காணாமல் போய்விட்டது, வேற்று மக்களின் திட்டங்கள் மற்றும் வடிவமைப்புக்களின் பலிக்கடாக்களாக மாறிவிட்டோம் என்ற உணர்வை அவர்கள் கொண்டுள்ளனர். அவ்வாறான உணர்வுகள் இருப்பதனை புரிந்து கொள்ள முடிந்தாலும், மாவட்டத்திற்காக அரசாங்கம் மற்றும் தனியார் துறையின் திட்டங்களின் விளைவாக அவர்களை நோக்கி வரும் குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களின் பலன்களை அவர்கள் பெற முடியாதவாறு தடை செய்கின்றது. இந்த நீண்ட தொலைவை எட்டிப் பிடிக்கும் திட்டங்களின் விளைவாக தமக்கு கிடைக்கக் கூடிய பலன்களை அடைவதற்கு பணியாற்றுவதற்கான அல்லது தமது அன்புக்குரிய மன்னார் சமூக மற்றும் பொருளாதார ஒதுக்கலுக்கு உள்ளாவதனை காணக் கூடிய சந்தர்ப்பம் மக்களுக்கும் மாவட்டத்திற்கும் கிட்டியுள்ளது. நேர்நிலையான எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கு, புதிய வர்த்தக சந்தர்ப்பங்களை அடையாளம் காணல், தொழில்நுணுக்க புத்தாக்கங்களை உள்வாங்கல் மற்றும் அதேவேளை, தமது கலாசாரம், பண்பாடு மற்றும் வாழ்க்கை முறை பாதுகாத்தல் என்பன தொடர்பான தெளிவான மனநிலை குறித்தும் மன்னார் மக்கள் கவனம் செலுத்தல் வேண்டும். ஈடுபாடின்மை மற்றும் செயற்படாமை போன்ற மாற்றுவழி காட்சியமைப்புக்கள் மேலும் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக ஒதுக்கப்படலுக்கு வழிவகுக்கும். இந்த அமர்வுகளில் கலந்து கொண்ட மக்கள் முன்னிலையில் வைக்கப்பட்ட தெரிவுகளாக இவை இருந்தன.

### 2.2 தமக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் சமுதாயம்

மன்னார் மக்களின் அவல நிலையை போக்கி, 'தமது விதியை நிர்ணயிப்பவர்களாக' அவர்களை மாற்றுவதற்கு வலுவூட்டும் வகையில், மன்னார் மறுமலர்ச்சி 2022 என்ற சமுதாய தொலைநோக்கு செயற்றிட்டம் என்பது, மன்னார் நகர சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 30 வருடங்களாக செயலிழந்து காணப்பட்ட மன்னார் நகர சபை, தேர்தலினால் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், நகர சபையின் எதிர்கால பாதை மற்றும் முன்னுரிமைகளை தீர்மானிப்பதற்கு மக்களின் எண்ணங்களை ஒன்றிணைப்பதில் ஆர்வமாக உள்ளது. அதனை புரிவதற்கு, தமது எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு பங்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்கியுள்ளதுடன், மக்களின் அபிலாஷைகளை புரிந்து கொள்ள விரும்புகின்றது. சர்வதேச ரீதியில் சிறந்த பயிற்சிகளின் அடிப்படையில் பார்க்கும் போது, இந்த தொலைநோக்கு செயற்பாடு என்பது நகர சபை திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சி வடிவமைத்தலில், விசேடமாக நகர சபையின் முதலாவது பதவிக் காலத்தில் மிகவும் முக்கியமானதாக உள்ள பொது மக்கள் பங்களிப்பிற்கான சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளது.

***மன்னாரின் மறுமலர்ச்சி 2022 (***MM2022***)*** என்ற செயற்றிட்டம் உபாய ரீதியாக, ***வடக்கின் வசந்தம்*** மற்றும் ***தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2011-2030 (***NPPPP 2011-2030***)*** [4] போன்ற இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களுடன் இணைந்ததாக உள்ளது. அத்துடன், ***மன்னார் நகரசபை வளக் கோவை 2008***இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள உள்ளூர் திட்டமிடல் முயற்சிகளின் அடிப்படையில் இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்புக்கள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் முக்கியமான பாத்திரங்களாக மன்னார் மக்களை வைத்திருக்கும். பல தசாப்தங்களாக பின்தங்கியுள்ள மன்னாரை முன்னிலைக்கு கொண்டு வருதல் மற்றும் ஒரு காலத்தில் பெருமைக்குரியதாக மற்றும் வளம் நிறைந்த பகுதியாக இருந்த மன்னாரை பழைய நிலைக்கு கொண்டு வருதல் என்பவற்றை நோக்கிய முதலாவது படியாக மன்னாரின் மறுமலர்ச்சி 2022 காணப்படுகின்றது.

***மன்னாரின் மறுமலர்ச்சி 2022இல்,*** மன்னாரில் வசிக்கும், பணிபுரியும் மற்றும் கல்வி கற்கும் 210 பேரின் ஆய்வு, கிராமம் மட்டத்திலான நான்கு செயலமர்வுகள் மற்றும் பாரிய சமுதாய அரங்கு என்பன உள்ளடங்கியுள்ளன. தமது நேசத்திற்குரிய மன்னார் நகரம் குறித்த பொதுவான பார்வை கொண்ட ஆர்வமுடைய, விவாதம் புரிந்த மற்றும் பேரம் பேசிய பரந்த குறுக்கு வெட்டு மக்கள் உள்ளமையை இந்த மாறுபட்ட நடவடிக்கைகள் உறுதி செய்கின்றன. திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சி வடிவமைத்தலில் மக்களை மையப்படுத்திய அணுகுமுறையை நகர சபை பின்பற்றுவதற்கான தெளிவான வழிகாட்டலை கீழே தரப்பட்டுள்ள முடிவுகளின் சாரம்சம் வழங்குகின்றது.

---

[4] ibid

## 2.3 மக்கள் என்ன சொல்கின்றார்கள்.

ஆய்வு, கிராம செயலமர்வுகள் மற்றும் சமுதாய அரங்கு என்பவற்றில் பங்குபற்றியவர்களினால் எட்டு பிரதான கருப்பொருள்கள் சுட்டிக்காட்டப்பட்டன. எட்டு கருப்பொருள்களில் ஆறு நகரசபையின் பொறுப்புக்களின் ஆரம்ப உத்திகளாக உள்ளன – சுற்றுச் சூழல், நகரத் திட்டமிடல் (நகர சபை சேவைகள், பொது வசதிகள், கழிவுநீர் வடிகால், குப்பை மற்றும் வீதிகள்), சமுதாய நிகழ்ச்சிகள், பெண்கள் அபிவிருத்தி, சுற்றுலாத் துறை மற்றும் நிதி. மற்றைய இரண்டு கருப்பொருள்களான கல்வி மற்றும் வர்த்தக அபிவிருத்தி என்பன, உள்ளூர் அரசாங்கத்தின் வீச்செல்லைக்கு வெளியில் இருக்கின்ற போதிலும், ஏனைய அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. 2022ஆம் ஆண்டில் முன்மாதிரியான சமுதாயம் ஒன்றை உருவாக்கும் ஆர்வத்துடன், அனைத்து நடவடிக்கைகளிலும் உற்சாகத்துடன் பங்குற்றுநர்கள் கலந்து கொண்டனர். காரசாரமான விவாதம், மகிழ்ச்சியான நொடிகள் மற்றும் பல நல்ல விடயங்கள் அமர்வுகளில் உள்ளடங்கியிருந்தன. சுருக்கமாகச் சொல்வதாயின், அடுத்த பத்து வருடங்களில் தமது நகரத்தின் அபிவிருத்தி மீது பொறுப்புள்ளவர்களாக இருக்கும் மன்னார் மக்களின் பிரதான செய்திகளாக கீழே உள்ளவை விளங்குகின்றன.

### அ. கல்வி

விசேடமாக, 30 வயது வரையான இளைஞர்களுக்காக அடிக்கடி வலியுறுத்தப்படும் விடயமாக கல்வி உள்ளது. அது மாத்திரமின்றி, மன்னாரின் எதிர்காலத்திற்கான உறுதியான அஸ்திவாரத்தை அமைப்பதற்கு அத்தியாவசியமானதாகவும் கல்வி பார்க்கப்படுகின்றது. போதிய மூன்றாம் நிலை கல்வி வசதிகள் இன்மையினால் மன்னாரைச் சேர்ந்த இளைஞர்கள், வேறிடங்களுக்கு செல்வதனை அவதானிக்கக் கூடிய நிலை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பின்வருவன அமைக்கப்படுதல் மிகவும் முக்கியமானதாகும்:

- சகல தொழில் நுணுக்க வசதிகளுடனும், தொழில் நுட்பக் கல்லூரிகள்
- பல்கலைக்கழக வளாகம்
- ஆய்வு மற்றும் புத்தாக்கத்தில் முதலீடு
- ஆங்கில மற்றும் சிங்கள மொழி கற்கை
- விசேடமாக உயர் தரம் கற்கும் மாணவர்களுக்கு கல்வி உதவி சேவைகள் மற்றும் புலமைப்பரிசில்கள்

### ஆ. வர்த்தக அபிவிருத்தி

மீன்பிடியுடன் சார்ந்த வர்த்தக அபிவிருத்தி தொடர்பில் அதிக முக்கியத்துவம் இருந்தாலும், வேறு பகுதிகளான சுற்றுலாத் துறை (தனியாக உள்ளடக்கப்பட்டுள்ளது), விவசாயத் துறைக்கான 'பெறுமதி சேர்' சந்தர்ப்பங்களுக்கான தேவை மற்றும் அனைத்து துறைகளினதும் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி சார்ந்த நோக்கம் என்பனவும் சுட்டிக்காட்டப்படுகின்றன. எதிர்கால எண்ணெய் அகழ்வு நடவடிக்கையினால் தமது மீன்பிடி மற்றும் கடலட்டை இருக்கும் பகுதிகளுக்கான பிரவேசம் பாதிக்கப்படலாம், இந்திய மீனவர்கள் மற்றும் மன்னாருக்கு வெளியில் இருந்து சிங்கள, முஸ்லீம் மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக போதிய நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் அதனால் அவர்களுடைய எதிர்கால வாழ்வாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், கட்டுப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திர முறை, ஓரளவு தொழில் நுணுக்க மேம்பாடு அல்லது தமது தொழிலில் 'பெறுமதி-சேர்' மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தடை என்பன உள்ளடங்கலாக மீனவர்கள் பல விடயங்களை முன்வைத்தனர்.

மன்னாரின் ஒட்டுமொத்த வர்த்தக அபிவிருத்திக்கு, பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன:

- குளிர்சாதன வசதிகள் மற்றும் மீன் சேகரித்தல் நிலையங்கள் (வாடி வீடுகள்) உள்ளடங்கலாக பாரிய மற்றும் தொழில் நுணுக்க ரீதியாக நவீன மீன் சந்தை நிர்மாணம்.
- பாரிய படகுகள் மற்றும் இயந்திர படகுகளுக்கான வசதிகளுடன் சௌத் பார், கீரி மற்றும் தாழ்வுப்பாடு பகுதியில் துறைமுகம் மற்றும் மீன்பிடி துறைகளை புதுப்பித்தல்.
- வர்த்தக திட்டமிடல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தில் பயிற்சி மற்றும் உதவியும், நவீன தொழில் நுட்பம் குறித்த விழிப்புணர்வும்
- மீன் பண்ணைகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட கடலுணவு தொழிற்சாலைகள் நிர்மாணம்
- செழித்தோங்கும் ஆடை தொழில் துறைக்கு ஆதரவு வழங்கல்
- புத்துணர்வூட்டப்பட்ட குடிசைத் தொழில் துறைக்கு, விசேடமாக தச்சு வேலை, துணி வெளுத்தல் மற்றும் தையல், தெங்கு உற்பத்திகள், கள் தயாரிப்பு, பரவலாக்கப்பட்ட மற்றும் நவீன பனைத் தொழில் மற்றும் உப்புக்கான ஜிப்சம் உற்பத்தி போன்றவற்றிற்கு கவர்ச்சிகரமான அரசாங்க ஊக்குவிப்பு
- குறிப்பிட்ட வர்த்தக எல்லை உருவாக்கம்

### இ. சுற்றுச் சூழல்

மன்னார் மக்கள் தமது வாழ்க்கைக்கான முழுமையான சார்ந்திருக்கும் தன்மைக்கு இயற்கை சூழலில் தங்கியுள்ளனர். எதிர்காலத் தலைமுறைகளுக்காக தமது சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கு அதிக ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர். மணல் அகழ்தல், அதிக மீன்பிடியை உறுதி செய்வதற்கு முருகைக் கற்பாறைகள் அகழ்தல் மற்றும் நகரத்தின் இயற்கையான வடிகால் அமைப்புக்களில் அபாயகரமான பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் வீடமைப்புக்காக பாரம்பரிய குளங்களை மூடுதல் என்பவற்றிற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

எவ்வாறாயினும், கடல் நீரின் மட்டம் அதிகரித்தல் சார்ந்ததாக மக்களின் அச்சம் பிரதானமானதாக உள்ளது. மன்னார் தீவு முழுமையும் மூழ்கிவிடும் என்ற அபாயமும் அவர்களிடம் உள்ளது. அவர்களின் கோரிக்கையாக இருப்பது:

- கடல் நீர் மட்டங்கள் அதிகரிப்பதனை தடுப்பதற்கு பலவீனமான பகுதிகளைச் சூழ்ந்ததாக கல் வேலிகளை அமைத்தல்
- மணல் அகழ்வினால் ஏற்படும் அரிப்பினை தவிர்ப்பதற்கு மணல் மற்றும் மண்ணிற்கான மாற்று வளங்களை கண்டறிதல்.
- இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படக் கூடிய விளைவுகளை தணிப்பதற்கு கட்டட குறியீடுகளை திருத்தல் மற்றும் கட்டுப்பாடான வலயங்களை அறிமுகப்படுத்தல்
- இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ள தயாராவதற்கு பயனுறுதி மிக்க முன்னெச்சரிக்கை முறைகள் மற்றும் போதிய நிகழ்ச்சிகளை உருவாக்கல்
- மண்ணரிப்பை தடுப்பதற்கும், பிரதேசத்தின் அழகை மேம்படுத்துவதற்கு மேலும் அதிக மரங்களை நடுதல்
- இயற்கை குளங்களை மீண்டும் அமைப்பதன் ஊடாக இயற்கை வடிகால் அமைப்புக்கு வழி வகுத்தல்.

**ஈ. நகரத் திட்டமிடல்** (நகர சபை சேவைகள், பொது வசதிகள், வடிகால், குப்பை, வீதிகள்)
தமது அன்புக்குரிய மன்னார் நகரம் தொடர்பில், அங்கு வசிப்பவர்கள் அனைவரும் அர்ப்பணிப்பு மற்றும் நேர்மையுடன் இருக்கின்ற போதிலும், அப்பகுதியின் ‘தோற்றம் மற்றும் உணர்வு’ தொடர்பில் மக்கள் அதிருப்தியை வெளியிடுகின்றனர். நகரம் மிகவும் மோசமான வகையில் திட்டமிடப்பட்டு, சிக்கலாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் உணர்கின்றனர். மோசமான வடிகால் வசதியினால் வெள்ளம் நிறைந்த வீதிகளின் நிலையான பிரச்சினைகள், தனிப்பட்ட ஒன்றிற்கான அபிவிருத்தி, வேறு நபர்களின் நிலத்தின் மீது சட்டவிரோத ஆக்கிரமிப்பு, குடிநீர் வசதி பற்றாக்குறை, தவறான கழிவுநீர் அமைப்பு முறை, ஒழுங்கற்ற மின்சார விநியோகம், மிகப் பழைய பொது வசதிகள் மற்றும் சேவைகள், மேடும், பள்ளமுமான வீதிகள் மற்றும் வெகுசில பொழுதுபோக்கு வசதிகள் (விசேடமாக சிறுவர்களுக்கு) போன்ற பல உதாரணங்களை அவர்கள் முன்வைக்கின்றனர்.

தமது எண்ணங்களை பூர்த்தி செய்யும் வகையில் முறையான நகரத் திட்டமிடலே, அவர்களின் ஆர்வமாக உள்ளது. பல ஆலோசனைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர்:

- நகரத்தின் மீள் வடிவமைப்பு – ஒரே எல்லைக்குள் அனைத்து அரசாங்க அலுவலகங்களும், வசதிகளும் மன்னர் நகரத்தை அழகானதாக்கும். அனைவருக்கும் அணுகக் கூடிய வீடமைப்பு, தரை கீழ் வடிகாலமைப்பு, கழிவு நீர் மற்றும் மின்சார வயர்கள், கீரியில் இருந்து அல்லாது, முருங்கனில் இருந்து குடிநீர், முறையான வடிகால் மற்றும் கழிவு நீர் முறைகள், மற்றும் வீதி விளக்குகள்
- மக்களை மையமாகக் கொண்ட நகரத் திட்டத்தை மன்னாருக்கு வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து பணியாற்றல்.
- நவீனமயமான வசதிகள் - நவீன பொது வைத்தியசாலை, நவீன சந்தைக் கட்டடம், நகர சபை கட்டடத் தொகுதி, புதிய மீன் சந்தை மற்றும் துறைமுகம், சந்தியில் மணிக்கூட்டு கோபுரம், பயனுறுதி மிக்க ரயில் முறை, தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் நவீன நூலகம், மற்றும் சுற்றுலாப் பயணிகள் வசதிகள்
- சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான பராமரிப்பு – நீச்சல் தடாகத்துடன் பெரிய நவீன விளையாட்டு அரங்கம், சிறுவர் பூங்காக்கள், குளிரூட்டப்பட்ட அறைகளுடன் நவீன திரையரங்குகள்,
- பயனுறுதி மிக்க போக்குவரத்து வசதிகளை அறிமுகப்படுத்தல் - பொது மலசலகூட வசதிகளுடன் நவீன ரயில் மற்றும் பேருந்து தரிப்பிடங்கள்

**உ. சமுதாய நிகழ்ச்சிகள்**
செழிப்புள்ளவர்களுக்கு மாத்திரமல்லாது, குறிப்பாக வயதானவர்கள், யுத்தத்தினால் கணவனை இழந்தவர்கள், நிர்க்கதியானவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான சமுதாய சேவை நிகழ்ச்சிகளை நகர சபை ஆரம்பிப்பதனை எதிர்பார்த்துள்ள குறிப்பிடத்தக்களவு மக்கள் உள்ளனர். இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு பங்களிப்பதற்கு ஆர்வமாக உள்ளமையை பங்குபற்றுநர்கள் பலர் வெளிப்படுத்தினர். யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், தமது சமூகத்தின் தார்மீக வடிவத்தில் ஏற்பட்டுள்ள துரித சீர்குலைவு குறித்தும் பலர் கவலை வெளியிட்டனர். உள்ளக வன்முறையின் அதிகரிப்பு, சிறுவயதில் கர்ப்பமடைதல், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், யுத்தத்தினால் விதவையானவர்கள் துஷ்பிரயோகத்திற்கு இலக்காதல் மற்றும் மது, போதைப் பொருளுக்கு அடிமையாதல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளமையை காணக் கூடியதாக உள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

பின்வரும் நலன்புரி நடவடிக்கைகள் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன:

- முதியவர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கு உதவும் அவர்களின் தேவைகளை அடையாளம் காணல் மற்றும் நிகழ்ச்சிகளை வடிவமைத்தல்
- மன்னாரின் பிரதான இடத்தில் மதுபானக் கடை அமைக்கப்பட்டுள்ளமையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு சட்ட மன்ற உறுப்பினரின் ஆதரவை நாடல் உள்ளடங்கலாக மது மற்றும் போதைப் பொருள் சார் நிகழ்ச்சியை உருவாக்கல்
- சிறு வயது கர்ப்பம் தரித்தல், உள்ளக வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல்
- சரிவடையும் ஒழுக்க மற்றும் மதத் தரங்களை அடையாளம் காணும் நிகழ்ச்சிகளை தூண்டுதல்

**ஊ. மகளிர் அபிவிருத்தி**
தனியான மகளிர் அபிவிருத்தி சங்கம் ஒன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனவே, பெண்களின் விடயங்கள் மற்றும் அபிலாஷைகள் புறந்தள்ளப்படாது அல்லது ஒதுக்கி வைக்கப்படாது ஏனைய

முன்னுரிமைகளுடன் இணைந்ததாக பார்க்கப்படும். பெண்கள் சார்ந்த விடயங்களில் அதிகம் பேசப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:

- பெண்களுக்கான சுயவேலைவாய்ப்பு சேவைகள், விசேடமாக யுத்தத்தினால் கணவனை இழந்தவர்களுக்கு வாழ்வாதாரங்கள்
- புதிய களங்களில் வருமானம் ஈட்டும் சந்தர்ப்பங்களை கண்டறிதல்
- பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களை இலக்கு வைத்த சமுதாய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

**எ. சுற்றுலாத் துறை**

தொலைநோக்குச் செயல்முறை முழுவதிலும், பிரதேசத்திற்கு சுற்றுலாத் துறையின் மூலம் கிடைக்கும் பயன்கள் மற்றும் மோசமான விளைவுகளை குறைப்பதற்கு அவற்றின் கட்டுப்பாட்டை தாமே வைத்திருப்பது என்பவற்றை அப்பகுதி மக்கள் ஆராய்ந்தனர். சிறிய அளவிலான, கலாசார ரீதியாக கூருணர்வான, பொருளாதார ரீதியாக நிலையான மற்றும் சுற்றுச் சூழலுக்கு இயைபான அணுகுமுறைகளை அவர்கள் முன்மொழிந்தனர். தமது பாரம்பரியங்களை பாதுகாத்து, தமது தனித்துவமான உள்ளூர் அறிவினை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளும் சுற்றுலாத் துறை அணுகுமுறை தொடர்பிலும் அவர்கள் கதைத்தனர். எவ்வாறாயினும், விசேடமாக பொது இடங்களில் இருந்து இராணுவ பின்வாங்கல் சம்பந்தப்பட்டதாக பிரதான அக்கறை இருந்தது. ஏனெனில், இராணுவச் சூழல் காணப்படும் இடங்கள் மகிழ்ச்சியான பொழுதை விரும்பும் சுற்றுலாப் பயணிகளை கவராது.

மன்னாரில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு அவர்கள் பல எண்ணங்களை முன்வைத்தனர்:

- பொது மற்றும் தனியார் பேருந்து தரிப்பிடம் மற்றும் நவீனமயமான ரயில் நிலையத்தினை நிர்மாணித்தல்
- தள்ளாடி முகாமிலிருந்து இராணுவம் வெளியேறுவது குறித்த அக்கறை, அதன் மூலம், முகாமினை உள்ளக விமான நிலையமாக மாற்ற முடியும்.
- சிறந்த தரமான சுற்றுலா-நியமமான விடுதிகள், கலாசார ரீதியாக கூருணர்வான கடற்கரை வீடுதிகள் மற்றும் ஹோட்டல்கள், பாலத்திற்கு அருகில் சுற்றுலாப் பயணிகளை கவரும் நட்சத்திர அந்தஸ்து ஹோட்டல்கள் உள்ளடங்கலாக கவர்ச்சிகரமான சுற்றுலா வசதிகளை வடிவமைத்தல்.
- பின்வரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் இடங்கள் மற்றும் தளங்களை புதுப்பித்தலும், மீளமைத்தலும் - மடு திருத்தலம், திருக்கேதீஸ்வரம் கோவில், சிலாவத்துறை கடல் (முத்துக்குளித்தல்), மன்னார் கோட்டை, அல்லிராணிக் கோட்டை, பள்ளிமுனை பெருக்கமரம், புதுக்குடியிருப்பு வெளிச்ச வீடு, தலைமன்னார் துறைமுகம், தோட்டவெளி மற்றும் பாரிய நீர் தாங்கி
- சுற்றுலாப் பயணிகளுக்கு மன்னாரில் கிடைக்கக் கூடிய விடயங்கள் தொடர்பில் கவர்ச்சிகரமான பிரசாரம் செய்தல்.

**ஏ. நிதி**

அதேவேளை, நிதிச் சங்கம் ஒன்று அமைப்பது தொடர்பான விசேட கோரிக்கை எதுவும் மக்களால் முன்வைக்கப்படவில்லை. மக்களின் பத்து வருட 'விருப்பு பட்டியலை' நிறைவேற்றுவதற்கான நிதி கையாளுகை தொடர்பில் நிதி மூலோபாயத்தினை வடிமைப்பதற்கு இவ்வாறான சங்கம் ஒன்று முக்கியமானது என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

நிதிச் சங்கத்தின் மேலதிக விசாரணைகள் தேவையென்பதற்கு பின்வரும் பொறுப்புக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன:

- அரசாங்க நிறுவனங்களின் வழிகாட்டல் சபையில் ஏற்கனவே உள்ள மக்கள் முயற்சிகளை தீர்மானித்தல். இதன் மூலம், பங்காளித்துவ ஒழுங்குகளை பேரம் பேசலாம்.
- முன்னுரிமை கொண்ட செயற்றிட்டத்திற்கு பயன்படுத்தக் கூடிய மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களின் நிதி ஒதுக்கீடுகளை அடையாளம் காணல்.
- வெளியக முதலீட்டை கவரக் கூடிய திட்டங்களை தயாரித்தல்
- நகர சபையின் தற்போதைய வருமானம் ஈட்டல் மூலோபாயங்களை மீளாய்வு செய்வதன் மூலம், அதனை எவ்வாறு விஸ்தரிக்க முடியும் என கண்டறிதல்.

### 2.4 நீங்கள் நகர சபையின் தலைவராக இருப்பின்…

சமுதாய அரங்கின் இறுதி பயிற்சியாக, நகர சபையின் தலைவராக இருப்பின் எந்த அடிப்படையில் முன்னுரிமைகளை தரப்படுத்துவீர்கள் என பங்குபற்றுநர்களிடம் கேட்கப்பட்டது. நகர சபையின் வழமையான பொறுப்புக்கள் சில அட்டையொன்றில் பட்டியலிடப்பட்டு, சுவரில் மாட்டப்பட்டது. ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் மூன்று பச்சை நிற ஒட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டு, நகர சபையின் நடவடிக்கைக்கான முன்னுரிமைகள் எதுவாக இருக்கும் என்பதன் அடிப்படையில் ஒன்று, இரண்டு அல்லது மூன்று என ஒட்டுமாறு கோரப்பட்டது. 'வடிகால் திட்டம்' என்பதே அதிகளவிலானோர் தெரிவு செய்தனர். அத்துடன், 'நகரத் திட்டமிடல்' மற்றும் 'வீதிகள் என்பனவும் முக்கியமான கவனம் செலுத்தப்பட வேண்டியவையாக இருந்தன. இதனை கவனத்தில் கொண்டு, முறையான நகரத் திட்டமிடல் தொடர்பில் மன்னாரில் வதியும் மக்கள் எத்தனை முக்கியத்துவத்தினை வழங்குகின்றார்கள் என்பதனை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. தரப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதன் மூலம், யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அவர்களுக்கு அதிக அழுத்தத்தை ஏற்படுத்தும் பிரச்சினை எது என்பதனை அறிந்து கொள்ள முடிந்தது. வாக்களிப்பின் முடிவுகள் பின்வருமாறு:

1. **வடிகால் திட்டம் - 79 வாக்குகள்**
2. **நகரத் திட்டமிடல் - 62 வாக்குகள்**
3. **வீதிகள் - 40 வாக்குகள்**

4. குப்பை – 30 வாக்குகள்
5. சுற்றுச் சூழல் பராமரிப்பு – 22 வாக்குகள்
6. நூலகம் - 22 வாக்குகள்
7. பொழுதுபோக்கு பூங்கா – 12 வாக்குகள்
8. சமூக சேவை/தன்னார்வப் பணி – 12 வாக்குகள்
9. சமுதாய ஒருமைப்பாடு – 11 வாக்குகள்
10. சுற்றுலாத் துறை – 5 வாக்குகள்



## 2.5 மக்களின் திட்டம்

மன்னாரின் மறுமலர்ச்சி என்ற கவர்ச்சிகரமான தலைப்பு, மன்னார் நகரைச் சேர்ந்த இளைஞர் கமல் ராஜினால் உருவாக்கப்பட்டது. இந்த தலைப்பிற்கு உடனடி அங்கீகாரம் கிடைத்ததுடன், பெரும்பாலான உள்ளூர் மக்களின் நாவில் அடிக்கடி புரளும் வார்த்தையாக மாறியுள்ளது. இந்த நகரத்தின் எதிர்காலத்திற்கான கனவுகள் மற்றும் அபிலாஷைகளுக்கான நம்பிக்கை சார் வாகனமாக மன்னாரின் மறுமலர்ச்சி மாறியுள்ளது. மொத்தமாக, ஐநூறிற்கும் அதிகமாக மக்கள், மன்னார் நகரப் பிரிவுக்கான பத்து வருட தொலைநோக்கு குறித்து பேச்சுவார்த்தையில் பங்குபற்றினர். அவர்களின் ஒட்டுமொத்த செய்தி தெளிவாக உள்ளது. தமது கனவுகளை நனவுகளாக மாற்றும் கோட்பாடுகளின் தொகுதி மற்றும் பெருமளவான நடவடிக்கைகள் இணைந்த தொலைநோக்கினை அவர்கள் முன்வைத்தனர்.

**தொலைநோக்கு அறிக்கை**
**"மன்னாரின் மறுமலர்ச்சி – எதிர்காலத்தை கனாக் காணல், எங்கள் பாரம்பரியத்திற்கு புத்துயிரளித்தல்'**

**கோட்பாடுகள்**

- நன்கு திட்டமிடப்படல்
- கவர்ச்சிகரமான உணர்ச்சி
- பாரம்பரியத்தை பாதுகாத்தல்
- முன்னோக்கிய சிந்தனை
- சுற்றுச் சூழல் ரீதியாக வலுவான
- பன்முகத் தன்மை உறுதிப்படுத்தப்படல்
- தூண்டல் மிக்க தலைமைத்துவம்

**நடவடிக்கை குறிக்கோள்கள்**

- மன்னாருக்கு வலுவான கல்வி பாதையை உருவாக்கல்
- பொறுப்பான வர்த்தக அபிவிருத்தியை முன்னெடுத்தல்
- சுற்றுச் சூழல் ரீதியாக நிலையான அபிவிருத்தியை உறுதி செய்தல்
- பயனுறுதிமிக்க நகரத் திட்டமிடல் தீர்வுகளை அனுசரித்தல்
- பலவீனம் நிறைந்தவர்களின் தேவைகளை மேம்படுத்தும், சமுதாய நிகழ்ச்சிகளை வடிவமைத்தல்
- பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள், வகிபாகங்கள் மற்றும் பங்களிப்பினை உறுதி செய்தல்
- கலாசார ரீதியாக கூருணர்வு மிக்க மற்றும் சுற்றுச் சூழல் சிநேகப்பூர்வமான சுற்றுலாத் துறை அபிவிருத்தியை முன்னெடுத்தல்
- ஒழுங்கான மற்றும் மன்னாரை மேம்படுத்தும் நிதித் திட்டமிடலை உறுதி செய்தல்

சமுதாய தொலைநோக்கு செயற்றிட்டம் தொடர்பில் இரண்டு பங்குபற்றுநர்களின் பிரதிபலிப்புக்களை இந்த பிரிவு உள்ளடக்கியுள்ளது. தொலைநோக்கு பயிற்சியின் ஊடாக, பிரகாசமான எதிர்காலத்திற்கான ஒரே நம்பிக்கை குறித்த சந்தேகத்திலிருந்து, தாம் பிரதான வகிபாகத்தை கொண்டுள்ள மன்னார் நகர மக்களின் பயணத்தை ஒவ்வொன்றும் விளக்குகின்றது.

**பாதிரியா விக்டர் சூசை,** Vicar General, கத்தோலிக்க தேவாலயம், மன்னார்.

"மன்னாரில் நடைபெறும் கூட்டத்திற்கு நான் வந்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். வாழ்க்கையின் வேறுபட்ட மட்டங்களைச் சேர்ந்த, செல்வந்தர் மற்றும் வறியவர், முஸ்லீம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், கற்றவர்கள் மற்றும் கல்லாதவர்கள், பெண்கள் மற்றும் ஆண்கள், சின்னக்கடையைச் சேர்ந்த செல்வந்த மக்கள் மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்த சாதாரண மக்கள் என பரந்த தரப்பிலானவர்கள் இங்கு வந்துள்ளனர்.

தமது நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கான மற்றும் மேலும் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளைப் பெறுவதற்கான இந்த செயற்பாட்டில் மிகுந்த மகிழ்ச்சியுடன், கலந்து கொள்வதற்கான மிகு விருப்புடனும் சிறுவர்கள் உள்ளனர். புதிய தொழில்நுணுக்கங்களின் முக்கியத்துவம் மற்றும் கிடைக்கக் கூடியத் தன்மை தொடர்பிலும் அவர்கள் கலந்துரையாடினர்.

மக்கள் செய்தியை புரிந்து கொண்டனர். தமது நகரம் எவ்வாறு இருக்க வேண்டும் மற்றும் எதிர்காலத் தலைமுறைக்கு எவ்வாறானதாக இருக்க வேண்டும் என தாம் விரும்பும் வகையில், தமது விருப்பங்கள் மற்றும் கோரிக்கைகளை வெளிப்படுத்துவதற்கு மக்களுக்கு இது சிறந்த சந்தர்ப்பமாகும்."

**திரு. சின்கிளயார் பீட்டர்,** உறுப்பினர், மன்னார் பிரஜைகள் குழு


"செயலமர்வுகளின் ஆரம்பத்தில் மக்கள் அத்தனை ஆர்வமாக இருக்கவில்லை. அரசாங்கத்தின் தலையீட்டினால், தமது விருப்பங்களுக்கு ஏற்ப எதனையும் புரிய முடியாது என மக்கள் எண்ணினர். முன்வைக்கப்பட்ட அனைத்து அபிவிருத்தி திட்டம் தொடர்பிலும், அவர்கள் எதிர்மறையான எண்ணங்களை கொண்டிருந்தனர். செயலமர்வின் பின்னரே அனைவருக்கும் எதிர்காலம் குறித்த நம்பிக்கை தோன்றியுள்ளது. அவர்கள் இப்போது எதிர்மறையான அல்லது பாதகமான எண்ணம் கொண்டவர்களாக இல்லை. அவர்களுடைய சிந்திக்கும் முறை மாற்றமடைந்துள்ளது. இந்த செயலமர்வுகள் அவர்களுடைய கண்களை திறந்து விட்டுள்ளது. தமது எதிர்காலத்தை சிந்திக்கவும், திட்டமிடவும் அவர்களுக்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

கதைப்பது மாத்திரம் போதியது அல்ல என அவர்கள் நம்புகின்றனர். அபிவிருத்தி செயற்பாடுகளில் தாமாகவே ஈடுபடுவதற்கு அவர்கள் விரும்புகின்றனர். அனைத்து சாதகமான வழிகளிலும் பங்களிப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தனர். நகர சபை மற்றும் ஜெரமியின் நிறுவனம் (டயஸ்போரா லங்கா) போன்ற நிறுவனங்கள் தொடர் கவனிப்பை முன்னெடுத்து, இந்த ஏற்பாடுகள் முன்னோக்கிச் செல்வதற்கும், விசேடமாக மக்கள் இந்த செயற்பாடு குறித்து அறிந்து கொள்வதற்கும் உதவ வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்.





பல்வேறு கிராம செயலமர்வுகள் மற்றும் அரங்குகளின், சித்திரங்கள் மற்றும் குழு படைப்புக்கள் பின்வருமாறு:












# 3. தொலைநோக்குச் செயற்பாடு

## 3.1 சமுதாய தொலைநோக்கு

சமுதாய தொலைநோக்கு என்பது இலாபத்திற்காக அல்லாது, எதிர்காலத்திற்காக பாதுகாப்பான, திடமான இடத்தினை குடியிருப்பாளர்கள், அரசாங்கம், வர்த்தகங்கள் என்பவற்றுக்கு வழங்குகின்றது. வேறுபாடுகளை தீர்க்கவும், எதிர்காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய மாறுபாடான விடயங்களை அடையாளம் காண்பதற்கான மூலோபாயங்களை வடிவமைப்பதற்கும் பல்வேறுபட்ட எண்ணங்களை கொண்டுள்ள மக்கள் ஓரிடத்துக்கு கொண்டு வரப்பட்டனர். பொது ஆழ்ந்தாராய்வுகள் மற்றும் ஒருமித்த கட்டியெழுப்பல் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு மக்களுக்கு இந்த நிகழ்வு சந்தர்ப்பத்தை அளிக்கின்றது.

மக்கள் மற்றும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களின் செயற்பாடுகள் என்பவற்றுக்கு இடையிலான இடைவெளியை நிரப்பும் பாலமாக சமுதாய தொலைநோக்கு செயற்பாடு காணப்படுகின்றது. உலகெங்கிலும் உள்ள பல நகர சபைகள் இந்த தொலைநோக்கு பயிற்சிகளை, தமது சேவைக் காலம் ஆரம்பிக்கும் போது மக்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பரந்த கருத்துசார் புரிந்துணர்வு மற்றும் வழிகாட்டல் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு பயன்படுத்துகின்றன. நகர சபை இதனை தமது வேறுபட்ட வர்த்தக செயற்பாடுகளாக நிலைமாற்றுகின்றது. இது பொதுவாக நகர சபையின் முறைசார் குழுக்களின் ஆலோசனையுடன் முன்னெடுக்கப்படும்.

இந்த செயற்பாட்டில் மூன்று அடிப்படை நிலைகள் உள்ளடங்கியுள்ளன:

1. செயற்பாட்டின் மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைத்தலுக்கு பொறுப்பான செயற்குழுவினை அமைத்தல்.
2. எதிர்காலத்திற்கு மக்களுக்கு என்ன தேவை என்பதனை கண்டறிவதற்கு சமுதாய செயலமர்வுகள் மற்றும் பொதுக் கூட்டங்களை நடத்தல்.
3. சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியமான விடயங்கள் தொடர்பில் செயற்படும் சிறிய குழுக்களிலான பணிக் குழுக்களை நியமித்தல்.

இயலுமான வரையில், அனைத்து சமுதாய தொலைநோக்கு நடவடிக்கைகளும்:

- இன, சாதி, மத, பால்நிலை, கல்வி மற்றும் அந்தஸ்து வேறுபாடு தொடர்பில் உள்ளடக்கமாக இருத்தல்.
- பகிரங்க உறுப்புரிமையுடன், சமுதாயம், பொது மக்கள், தனியார் மற்றும் இலாப நோக்கற்ற துறைகளை சென்றடைதல்
- வேறுபட்ட கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை அரவணைத்தல்
- எதிர்கால நோக்குடன் இருத்தல், கடந்த காலத்தில் தேங்கிவிடக் கூடாது.

## 3.2 மன்னாரின் சமுதாய தொலைநோக்கு

2011ஆம் ஆண்டு நவம்பரில், மன்னார் நகர சபை, மன்னாரின் மறுமலர்ச்சி 2022 நிகழ்ச்சிக்கான செயற்குழுவினை உருவாக்கியது. அதில் அரசாங்க அதிபர், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் பிரதிநிதிகள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், சமுதாயம் சார் நிறுவனங்கள், மத மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள், இளைஞர்கள், பிரஜைகள் மற்றும் நகர சபை ஊழியர்கள் ஆகியோர் உள்ளடக்கப்பட்டனர். நகர சபையின் தலைவர் மற்றும் உபதலைவரினால் கூட்டங்கள் வசதியளிக்கப்பட்டிருந்தன. கூட்டங்களில், புவியியல் எல்லை, தொலைநோக்கு நடவடிக்கைகள், வளவாளர்கள், விருந்தினர்கள் மற்றும் ஏனைய ஒழுங்கு வசதிகள் என்பன விவாதிக்கப்பட்டன.

தரவு சேகரிப்பதற்கான மூன்று ஆரம்ப வழிகள் தெரிவு செய்யப்பட்டன. இதில் ஓரளவு கட்டமைக்கப்பட்ட சமுதாய ஆய்வு, நான்கு கிராம செயலமர்வுகள் மற்றும் பாரிய சமுதாய அரங்கு என்பன இடம்பெற்றிருந்தன. பரந்த அளவிலான கருத்துக்கள் ஒப்பிடப்பட்டு, வேறுபாடு காணப்படுவதனை உறுதி செய்வதற்கு, தரவுகளை முக்கோண முறை அளவீடு செய்வதற்கு மூன்று முறைகள் உள்வாங்கப்பட்டன.


## 3.3 ஆய்வு

மன்னார் தொடர்பில் மக்கள் விரும்புவது என்ன, எதனைப் பெற்றுக் கொள்ள அவர்கள் விரும்புகின்றனர் மற்றும் எதனை மாற்ற வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர் என்பவற்றை அடையாளம் காண்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். நகர சபையின் அக்கறை மற்றும் நடவடிக்கை தொடர்பில் பிரதான மூன்று முன்னுரிமைகள் என எவற்றை அவர்கள் அடையாளம் காண்பார்கள் என்றும் அவர்களிடம் கேட்கப்பட்டது. ஓரளவு கட்டமைக்கப்பட்ட ஆய்வில், திறந்த மற்றும் மூடப்பட்ட கேள்விகள் இணைந்து இருந்தன. தரவு சேகரித்தலின் இந்த அளவு முறை செயலமர்வுகள் மற்றும் அரங்கின் மேலும் தர அடிப்படையிலான அணுகுமுறைகளை வரவேற்கும் முகமாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்த ஆய்வு ஆங்கில மொழியில் வடிவமைக்கப்பட்டு, பின்னர் தமிழிற்கு மொழிபெயர்க்கப்பட்டது. 20 இளம் தன்னார்வ ஊழியர்களை உள்ளடக்கிய குழுவினால் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. அவர்களே இந்த ஆய்வின் கணக்கெடுப்பாளர்களாகவும் கலந்து கொண்டனர். ஆய்வின் பரீட்சார்த்த நடவடிக்கையொன்றும், இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டு, அவர்களின் பின்னூட்டங்கள் புதிய ஆய்வினை மெருகேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டன. போதிய நேரமின்மையால் இறுதி அத்தியாயம் களத்தில் பரீட்சிக்கப்படவில்லை. திருத்தப்பட்ட முறை மற்றும் ஆய்வு நடத்துவதற்காக மன்னார் மாவட்டத்தின் குறிப்பிட்ட துறைகளை நியமிப்பதற்கு முன்னர் எவ்வாறு அதனை நிர்வகிப்பது என்பது தொடர்பில், இளைஞர்களுக்கு சுருக்கமான


விளக்கம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு கணக்கெடுப்பாளரும் பத்து தொடக்கம் பதினைந்து படிவங்களை பூர்த்தி செய்து, மொத்தமாக 146 படிவங்களை பூர்த்தி செய்திருந்தனர். சமுதாய அரங்கிற்கு வந்திருந்தவர்களுக்கும் ஆய்வு படிவங்கள் வழங்கப்பட்டன. 56 பேர் அங்கேயே படிவங்களைப் பூர்த்தி செய்தனர். இதன் போது, படிவங்களை பூர்த்தி செய்வதற்கு அவர்களுக்கு உதவி வழங்கப்படவில்லை. ஆய்வுப் படிவங்களை பூர்த்தி செய்தவர்களில் 55%ஆனவர்கள் ஆண்கள். 45%ஆனவர்கள் பெண்கள்.

ஆய்வுப் படிவங்களை பூர்த்தி செய்தவர்கள் தொடர்பான சில பின்னணித் தகவல்களை இந்த இரண்டு உருக்களும் விளக்குகின்றன. அதில் வயது மட்டம், மன்னாரில் தங்கியுள்ள கால அளவு என்பன விளக்கப்பட்டுள்ளன.




**உரு 1: கலந்து கொண்டவர்களின் வயது**

ஆய்வில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வயதுப் பிரிவினைச் சேர்ந்தவர்களாவர். 18 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் ஆய்வில் உள்ளடக்கப்படவில்லை. அண்ணளவாக சம அளவில் கலந்து கொண்ட வயதுப் பிரிவுகளாக 30 வயதுக்கு குறைந்தவர்கள் (29%) மற்றும் 40 வயதுக்கு குறைந்தவர்கள் (31%). மூன்றாவது நிலையில் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இருந்தனர்.




**உரு 2: மன்னாரில் வதியும் கால அளவு**

இந்த ஆய்வுக் கேள்விக்கு பதிலளித்தவர்களில் அண்ணளவாக 63%ஆனவர்கள், மன்னாரில் நீண்ட காலமாக வசிப்பவர்களாகவும், மன்னாரில் 20 வருடங்களுக்கு அதிகமாக வசித்து வருபவர்களாகவும் இருந்தனர். 73%ஆனவர்கள் இந்தப் பகுதியில் 10 வருடங்களுக்கு அதிகமாக வசித்து வருகின்றனர். 9%ஆனவர்களே ஐந்து வருடங்களுக்கும் குறைவான காலம் வசித்து வருகின்றனர். குறைந்த நடமாட்ட முறைகள் காணப்படுகின்றமையானது, மிகவும் குறைந்த புற செல்வாக்கு கொண்ட பகுதியாக இது இருப்பதனை வெளிப்படுத்துகின்றது. இது நேர்மை மற்றும் பிரதேசம் மீதான பற்றினை வெளிப்படுத்தும் அதே சந்தர்ப்பத்தில்,

சமூக தனிமைப்படுத்தல் மற்றும் சிந்தித்தலிலும், செயற்படுவதிலும் தீவிரமான தன்மை என்பன சார்ந்த சவால்கள் காணப்படுகின்றமையையும் வெளிக்காட்டுகின்றது.

### 3.4 சமுதாய செயலமர்வுகள்

ஐந்து கிராமங்களில், நான்கு கிராம செயலமர்வுகள் நடத்தப்பட்டன. மன்னார் நகர சபை எல்லைக்குள் வரலாற்று சிறப்புத் தன்மையின் அடிப்படையில் இந்த கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. கிராம சேவகர்கள் ஊடாக செயலமர்வுகள் குறித்து பிரசாரம் செய்வதற்கு பிரதேச செயலாளரின் உதவி பெறப்பட்டது. உப்புக்குளம் (கிழக்கு), பள்ளிமுனை (வடக்கு), பனங்கட்டுகொட்டு (தெற்கு) மற்றும் பெட்டாவும், சின்னக்கடையும் (மத்திய) ஆகிய கிராமங்களில் இருந்து அதிக எண்ணிக்கையில் மக்கள் பங்குபற்றுவதனை கிராம சேவகர்கள் உறுதி செய்தனர்.

பரவலாக, பள்ளியமுனை மக்கள் போர்த்துக்கேயர்களின் தலைமுறையாக கருதப்படுகின்றனர். பனங்கட்டுகொட்டு என்பது அதிக சனநெருக்கடி நிறைந்த பகுதி. சில பகுதிகளில் வறியவர்கள் அதிகமாக உள்ளனர். உப்புக்குளத்தில் பெரும்பான்மையாக முஸ்லீம்கள் வசிக்கின்றனர். 1990களில் இடம்பெயர்ந்தவர்கள், அண்மையிலேயே மீள்குடியேறியுள்ளனர். பெட்டா மற்றும் சின்னக்கடை ஆகிய பகுதிகளில் நகரத்தின் பிரதான மையங்களாக உள்ளன. இப்பகுதிகளிலேயே செல்வாக்கு நிறைந்த, கற்ற மக்கள் அதிகம் உள்ளனர். கிராம செயலமர்வுகளின் விளக்கங்கள் பின்வருமாறு:

| திகதி/நேரம் | நிகழ்வு | இடம் | சமூகமளித்தோர் |
|---|---|---|---|
| நவம்பர் 29, செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 – 5.00 | கிராமச் செயலமர்வு #1 பனங்கட்டிக்கொட்டு | புனித செபஸ்தியன் கிறிஸ்தவ தேவாலய மண்டபம் | 35 |
| நவம்பர் 30 புதன்கிழமை பி.ப 2.30 – 5.00 | கிராமச் செயலமர்வு #2 பள்ளிமுனை | மறுமலர்ச்சி சமுதாய மண்டபம், பள்ளிமுனை | 38 |
| டிசம்பர் 1, வியாழக்கிழமை பி.ப 2.30 – 5.00 | கிராமச் செயலமர்வு #3 உப்புக்குளம் | கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம், பள்ளிமுனை வீதி | 42 |
| டிசம்பர் 10, சனிக்கிழமை மு.ப 10.00 – பி.ப 12.00 | கிராமச் செயலமர்வு #4 பெட்டா, சின்னக்கடை | பெட்டா சனசமூக நிலைய கட்டடம் | 28 |

**அட்டவணை 1: சமுதாய செயலமர்வு அட்டவணை**

சமுதாய செயலமர்வுகள் இரண்டு பிரதான கேள்விகளை இலக்காகக் கொண்டிருந்தன. முதலாவது, 'அடுத்த பத்து வருடங்களில் மன்னாருக்கு என்ன நடக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?' என்ற கேள்வி வருடாந்த கூட்ட பின்னணியில் வினவப்பட்டது. 'அடுத்த பத்து வருடங்களில் மன்னார் எப்படி இருக்க வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்?' என்ற இரண்டாவது கேள்விக்கு, பங்குபற்றுநர்கள் சிறு குழுக்களாக பிரிந்து, நகர் விளக்கப்படத் தாளில் தமது பதிலை வரைந்து வெளிப்படுத்துமாறு கோரப்பட்டனர். அதன் பின்னர் ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர், குறித்த சித்திரத்தில் உள்ள விடயங்களை விளக்குமாறு கோரப்பட்டார்.

### 3.5 சமுதாய அரங்கு

மன்னாரில் வசிக்கும் பரந்தளவிலானோரை ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலுக்கு உள்ளிழுப்பதற்கு ஒன்றிணைக்கும் நோக்குடன் சமுதாய அரங்கு ஒழுங்கமைக்கப்பட்டது. மக்கள் கூட்டத்தை, திணைக்களங்களின் தலைவர்கள், நிபுணர்களில் இருந்து தனியாக பிரித்து, குடியிருப்பாளர்களுக்கு தனியான கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என ஒழுங்கமைப்புக் குழுவின் மீது அழுத்தம் செலுத்தப்பட்ட போதிலும், மன்னார் சமூகத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளின் ஒருங்கிணைக்கப்பட்ட ஆரோக்கியமான கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு இடம் உருவாக்கப்பட வேண்டும் என இறுதியில் தீர்மானிக்கப்பட்டது. அரங்கிற்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் இரண்டு பங்குபற்றல் கிராமப்புற மதிப்பீட்டு கருவிகளினால் திட்டமிடப்பட்டன. அவை மன்னாரிற்குள் உள்ள பலங்கள் மற்றும் பலவீனங்களை ஆவணப்படுத்துவதற்கான வளப்பதிவேடு (SWOT பகுப்பாய்வின் ஒரு அங்கமாகவும் இது உள்ளது) மற்றும் பலங்களில் இருந்து பிரகாசமான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான கனவு வரைபடம் ஆகியவையாகும்.

அறிமுகம் மற்றும் சம்பிரதாயங்களுக்குப் பின்னர், பாரிய குழுவானது பத்து சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் வளவாளர் நியமிக்கப்பட்டு, ஏழு தொனிப்பொருள்களில் ஒவ்வொன்று வழங்கப்பட்டன. ஆய்வின் மூலம் வெளியான பிரதான தொனிப்பொருட்களின் அடிப்படையில் அவை தெரிவு செய்யப்பட்டன.

1. இயற்கை வளங்கள் (நிலம், கடல், நீர், சுற்றுச் சூழல்)
2. மக்கள் மற்றும் திறன்கள் (உறவுகள், கல்வி, சுற்றுலாத் துறை)
3. வாழ்வாதாரம் (வருமானம், வேலைவாய்ப்பு, வர்த்தகம்)

4. கட்டப்பட்ட சூழல் (கட்டடங்கள், வீதிகள், வசதிகள்)
5. முக்கியமான இடங்கள் (மன்னாரை தனித்துவமானதாகக் காட்டு விடயங்களும், இடங்களும்)
6. போக்குவரத்து (தனியார் மற்றும் பொது போக்குவரத்தும், வசதிகளும்)
7. பொழுதுபோக்கு (ஓய்வு நடவடிக்கைகள், விளையாட்டு, பொழுதுபோக்குகள்)

அதிகளவிலான பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையின் காரணமாக, 8, 9 மற்றும் 10ஆம் குழுக்கள் முதல் மூன்று தொனிப்பொருள்களை முறையே பகிர்ந்து கொண்டன.

சிறு குழு அமைப்புக்களில் பகுப்பாய்வின் ‘சந்தர்ப்பங்கள்’ மற்றும் ‘அச்சுறுத்தல்களை’ பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஒவ்வொரு குழுவினதும் நீளமான மற்றும் உணர்ச்சிகரமான அறிக்கையிடலின் காரணமாக ஏற்பட்ட நேரம் போதாமையினால், ஒருங்கிணைக்கப்பட்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலில், தம்மை நோக்கி வரும் சந்தர்ப்பங்களுக்கு தாம் எவ்வாறு தயாராவது என்பது குறித்து கதைத்தனர். அமர்வு நிறைவடையும் வரை, இந்த உத்வேகத்தின் தொடர்ச்சியினை தக்க வைத்துக் கொள்வதற்கு மன்னாரின் மறுமலர்ச்சி 2022 சங்கத்தினை உருவாக்குவதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டு, உள்வாங்கப்பட்டது. சங்கத்தில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் பதிவு மேசையில் தமது பெயர்களை பதிவு செய்யலாம் என்ற பகிரங்க அறிவிப்புடன் அமர்வு நிறைவு பெற்றது.

சமுதாய அரங்கு நிறைவடைந்தமையைத் தொடர்ந்து இடம்பெற்ற முதலாவது கூட்டத்தில் அண்ணளவாக 40 பேர் கலந்து கொண்டனர். தாம் பங்குபற்றுவதற்கு ஆவலாக உள்ள குழுக்கள் தொடர்பில் பங்குபற்றுநர்கள் விருப்பம் வெளியிட்டனர். எட்டு குழுக்களில், கல்வி மற்றும் வர்த்தகம் ஆகிய இரண்டு குழுக்கள் மாத்திரம் நகர சபையின் சட்டவாக்கத்தின் கீழ் செயற்படாது. சங்கங்களின் அமைப்பு குறித்த கடுமையான தீர்மானம் மற்றும் இந்த சங்கங்களை அமைப்பதில் எந்தவொரு உத்தியோகப்பூர்வ கட்டமைப்பையும் நகலெடுக்கக் கூடாது என்ற எச்சரிக்கை என்பன எஞ்சியுள்ள ஆறு பிரிவுகளுக்கும் (நகரத் திட்டமிடல், சுற்றுச் சூழல் பராமரிப்பு, சமுதாய நிகழ்ச்சிகள், மகளிர் அபிவிருத்தி, சுற்றுலாத் துறை மற்றும் நிதி) நகர சபையின் முறைசார் சங்கங்களின் உருவாக்கத்தின் போது பெறப்படும், நகர சபையின் சான்றுபடுத்தலை பெற வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தின.

நகர சபையின் பணிகளுக்கு ஆதவரளிக்கும் வகையில் மேலதிக பொறியமைப்புக்களும் உருவாக்கப்பட்டன. மன்னாரின் மறுமலர்ச்சி ஆலோசனைக் குழுவில், மன்னார் நகரம் மற்றும் மாவட்டத்திற்கு தமது ஆதரவை வழங்கத் தயாராக இருந்த தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல், பாதுகாப்பு, நகர வடிவமைப்பு, சுற்றுச் சூழல் மற்றும் சுற்றுலாத்துறை போன்ற பல்வேறு தளங்களில் கொழும்பைச் சேர்ந்த நிபுணர்கள் உள்ளடக்கப்பட்டனர். அவுஸ்திரேலியாவின், மெல்போர்ன் நகரில் இதேபோன்ற சிந்தனைக் குழுவை அமைக்கவும் திட்டமிடப்பட்டது. தேவையான சந்தர்ப்பங்களில் இந்த குழுவிடமிருந்து நிபுணத்துவம் மற்றும் அறிவுசார் வசதிகள் வழங்கப்படும். மன்னாரினை தேசிய ரீதியாக மற்றும் சர்வதேச ரீதியாக இணைத்தல் என்பது, தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மன்னாரின் பெரும்பாலான மக்கள் மத்தியில் உள்ள உணர்வினை மாற்றும். அத்துடன், இன, மத, தேசிய மற்றும் உலகளாவிய எல்லைகளுக்கு வெளியே முக்கியமான நல்லிணக்க பணிகளுக்கும் உதவியளிக்கும். ஒட்டு மொத்தமாக மன்னாரின் மறுமலர்ச்சி 2022 நிகழ்ச்சிக்கு, மன்னார் மக்கள் சாதகத் தன்மையுடனும், உத்வேகத்துடனும் பிரதிபலித்தனர். இதன் நடவடிக்கைகளுக்கு தமது தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதற்கும் அவர்கள் உறுதியளித்தனர்.


ORIGINAL
AUTHENTIC
BRAND



## பகுதி II

## 4. பெறுபேறுகள் விளக்கமாக

### 4.1 அறிமுகம்

இந்தப் பகுதியில், ஆய்வின் முடிவுகளில் இருந்து, கிராம செயலமர்வுகள் மற்றும் சமுதாய அரங்கிலிருந்து பெறப்பட்ட பாடங்கள் வரை, பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் சமுதாய தொலைநோக்கு செயல்முறையின் அனைத்து அம்சங்களும் விளக்கமாக ஆராயப்படும்.

A. **மன்னாரின் மனநிலை** – மக்கள் தற்போது எங்குள்ளனர்?

B. **மன்னாரின் சந்தர்ப்பங்கள்** - மன்னாரை நோக்கி வருவது என்ன?

C. **மன்னாரின் தொலைநோக்கு** – மன்னாரிற்கான மக்களை மையமாகக் கொண்ட எதிர்காலம் என்ன?

D. **மன்னாரின் நடவடிக்கைகள்** - நாம் அதனை எவ்வாறு யதார்த்தமாக்குவது?

### 4.2 மன்னாரின் மனநிலை – மக்கள் தற்போது எங்குள்ளனர்?

> ''நீர் பற்றாக்குறை மற்றும் மோசமான சுகாதார வசதியுள்ளது. மழைக் காலத்தில் வெள்ளத்தினால் நிறைந்து, மோசமான உள் வீதிகள் மற்றும் வடிகாலமைப்புடன் காட்சியளிக்கும். மின்சாரம் இல்லை. – அனைத்தும் குழம்பியுள்ளது''

''அடுத்த பத்து வருடங்களில் மன்னாரிற்கு என்ன நடக்கும் என நினைக்கின்றீர்கள்?'' என்ற கேள்வியை எழுப்பிய போது, அனைத்து நான்கு கிராம செயலமர்வுகளிலும் பங்குபற்றியவர்கள் தமது எதிர்காலம் குறித்து பகிர்ந்து கொண்ட பதில்களில் பொதுவான தோல்வி மனப்பான்மை இருந்தமையை உணரக் கூடியதாகவிருந்தது. யதார்த்தத்திலும், கற்பனையிலும் அவலங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. மோசமான உள்ளக வீதிகள் மற்றும் மோசமான மின்சார விநியோகங்கள், வீதி நாய்கள், மாடுகள் மற்றும் கழுதைகள் தொடர்பில் பராமரிப்பு இன்மை என்பவற்றுடன் இந்த பகுதியானது விகாரமாக, ''குப்பைகள் நிறைந்த'' நகரமாக காட்சியளிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். மழைக்காலங்களில் இந்த பகுதியானது தொடர்ந்தும் வெள்ளத்தால் மூழ்கடிக்கக் கூடிய அபாயம் உள்ளதாகவும், கடல் நீரின் மட்டம் அதிகரித்து வருவதனால் மன்னார் தீவே நீரில் மூழ்கக் கூடிய அபாயம் உள்ளதாகவும் அவர்கள் அஞ்சுகின்றனர். எண்ணெய்க்கான அகழ்வின் காரணமாக ஏற்படக் கூடிய சுற்றுச் சூழல் மாசடைதல் தொடர்பில் அவர்கள் கவலை கொண்டுள்ளனர். அத்துடன், மீன்பிடிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளினால், மீன்பிடி கிராமங்கள் அழிந்து போகக் கூடும் எனவும் அவர்கள் கவலை கொண்டுள்ளனர். சூறாவளிகள், சுனாமிகள், கடல் நீர் மட்டம் உயர்தல் மற்றும் வெள்ளப் பெருக்குகள் போன்ற இயற்கை அனர்த்தங்கள் தமது வாழ்க்கை அழிந்து போவதற்கு வழி வகுக்கலாம் என்பது அவர்களது உணர்வாக உள்ளது. மன்னார் என்பது ஒரு திட்டமிடப்பட்ட நகரமாக இன்மையால், எதிர்காலத்தில் மேலும் பல இயற்கை அனர்த்தங்கள் இடம்பெறக் கூடிய நிலை உள்ளதாக அவர்கள் அஞ்சுகின்றனர்.

> ''அனைவரும் அபிவிருத்தி குறித்து கதைக்கின்றனர். ஆனால் எதுவும் நடப்பதில்லை. கடந்த 58 வருடங்களாக மன்னாரில் வசிக்கும் எனது அனுபவம் இது. எதுவுமே மாறவில்லை''

சுற்றுலாத் துறையினால் உள்ளூர் கலாசாரம் அழிக்கப்படலாம் எனவும் அவர்கள் கருதுகின்றனர். அத்துடன், மேற்கத்தைய கலாசாரம் தமது கலாசார பாரம்பரியத்தை குறைத்து மதிப்பிடுவதற்கான மற்றும் தமது வாழ்க்கை ஒழுக்கத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என அவர்கள் கருதுகின்றனர். நெட் கபேக்கள், திரைப்படங்கள், இணையத்தளம், தொலைக்காட்சி, ஆடைக் குறைப்பு மற்றும் கையடக்கத் தொலைபேசி தொழில்நுட்பம் என்பவற்றிற்கான இலகுவான பிரவேசம் ஊடாக இது இலகுவாக இடம்பெறலாம். யுத்தம் நிறைவடைந்த பின்னரும், இன்னொருவருக்கு அடிமையாக இருப்பதனைப் போல், பத்து வருடங்களுக்குப் பின்னர், வேறு ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் அடிமைகளாக இருக்கலாம் என அவர்கள் உணர்கின்றனர். பத்து வருடங்களின் பின்னர் சிங்கள அல்லது முஸ்லீம் மக்கள் தமது பகுதிகளை ஆக்கிரமித்து, அவர்களே தமது தலைவர்களாக இருக்கலாம் என்ற அச்சமும் அவர்களிடம் உள்ளது. மக்களின் பொருளாதார வாய்ப்புக்கள் மிகவும் மோசமாக இருப்பதனால் மற்றும் மன்னாரில் முதலீடு செய்வதற்கான அவர்களுடைய இயலுமை குறைவாக இருப்பதனால், வெளிநபர்கள் இங்கு வந்து கட்டுப்பாட்டினை எடுத்துக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. வறுமையின் காரணமாக தமது பூர்வீக இடங்களை வெளிநபர்களுக்கு குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தற்போது, இராணுவ முகாம்களுக்கு அருகில் வசித்தவர்களை, வீடுகளை விட்டு வெளியேறுமாறு இராணுவத்தினர் அழுத்தம் கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. சிலர் மிகவும் குறைந்த வாடகைக்கு இராணுவத்தினருக்கு தமது வீடுகளை வழங்கிவிட்டு, வேறிடத்தில் அதிகளவு வாடகை வழங்கி தங்கியுள்ளனர். அவர்களுடைய தற்போதைய நிலை இவ்வாறிருக்கின்ற போது, எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பது குறித்து சிந்திப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை.

"இந்த நிலையில் சென்றால், பத்து வருடங்களின் பின்னர், நாம் தற்போது மாதம் ஒன்றிற்கு சம்பாதிக்கும் அளவு ஒரு நாளுக்கு மாத்திரமே போதியதாக இருக்கும்."

விரல் விட்டு எண்ணக் கூடிய எண்ணிக்கையிலானவர்களே, அதிகரித்த தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள், அதிக வீடுகள், வர்த்தகங்கள் மற்றும் பொது வசதிகள், கல்வி மற்றும் கல்வி வசதிகளில் முன்னேற்றம், சிறந்த நிலையில் வீதிகள் மற்றும் துரித மக்கள் தொகை வளர்ச்சி என்பன காரணமாக சாதகமான எதிர்காலம் உள்ளதாக கருதினர் (மேலதிக தகவல்களுக்கு, பிற்சேர்க்கை 3இல் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்குமான செயலமர்வு குறிப்புக்களை பார்க்கவும்).

கீழே இருப்பது, "அடுத்த பத்து வருடங்களில் மன்னாரிற்கு என்ன நடக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்" என்ற கேள்விக்கு நான்கு கிராம செயலமர்வுகளிலும் ஒவ்வொரு பங்குபற்றுநர்களாலும் வழங்கப்பட்ட பதில்களின் முழுமையான பட்டியலாகும். சமூகம் ஒன்று தமது எதிர்காலம் குறித்து இத்தனை நடுக்கத்துடன் சிந்திப்பது என்பது கவலைத் தரக் கூடிய விடயமாகும்.



**கிராமச் செயலமர்வு – பனங்கட்டிகொட்டு**

- மன்னார் ஒரு நகரமாக மாறும்
- பத்து வருடங்களின் பின்னர் நாம் அடிமைகளாக உணர்வோம். இன்றுப் போலவே, வேறு யாருடைய கட்டுப்பாட்டின் கீழாவது இருப்போம். யுத்தம் முடிந்த பின்னரும் நமக்கு சுதந்திரம் இல்லை.
- மன்னார் என்பது விகாரமான, குப்பைகள் நிறைந்த நகரமாக இருக்கும்.
- எண்ணெய் அகழ்வு காரணமாக மீன்பிடி மற்றும் கடலட்டை வர்த்தகம் என்பன கட்டுப்படுத்தப்படும். அனுமதிப் பத்திர முறைகளும் மிகவும் சிக்கலுக்குரியதாக இருக்கும்.
- எண்ணெய் குதங்கள் மற்றும் நான்காயிரம் அடி ஆழத்திற்கு அகழ்தல் என்பன மீன்பிடியை தடை செய்யும். மன்னார் தீவு அழிந்து போகும்.
- மன்னாரின் புறத்தோற்றம் அழகாக இருக்கும். ஆனால், மக்கள் சிதைந்து போயிருப்பர்.
- அதிகரிக்கும் கடல் நீர் மட்டம் எம்மை வேறிடத்திற்கு கொண்டு செல்லும்.
- மன்னார் நகரம் அழகானதாக மாறும். ஆனால், மீனவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மறைந்து போகும்.

- நீர் பற்றாக்குறை மற்றும் மோசமான சுகாதார வசதி என்பன காணப்படும். வெள்ள நீர், மோசமான வீதிகள் மற்றும் வடிகாலமைப்பு, மின்சாரமின்மை என்பவற்றால் நகரம் சிதைவடைந்து காணப்படும்.
- சுற்றுலாத் துறையின் காரணமாக உள்ளூர் கலாசாரம் மற்றும் பாரம்பரியம் என்பன அழிவடையும்.
- சிறந்த வீதிகள் மற்றும் ஒழுங்கைகளை நாம் அமைக்கலாம். ஆனால், வீதி நாய்கள், கழுதைகள் மற்றும் மாடுகள் தொடர்பில் நாம் அக்கறை செலுத்த மாட்டோம்.
- மேலும் அதிக இயற்கை அனர்த்தங்கள் இடம்பெறும். வசதிகள் மற்றும் கட்டடங்களின் அமைவுகள் இந்த அனர்த்தங்களை கவனத்தில் கொள்வதில்லை. இயற்கை அனர்த்தங்களுக்கு முன்னாயத்தம் இல்லை.
- தொழிற்சாலைகள் மூலமான அதிக வேலைவாய்ப்பு சாதகமான விடயமாகும்.
- இந்த விடயங்கள் தொடர்பில் நாம் அக்கறை செலுத்தி, அவற்றுக்கு நடவடிக்கை எடுத்தால் நல்லது இடம்பெறலாம்.
- நாம் ஏதாவது செய்தால் நல்லது நடக்கும்.



**கிராமச் செயலமர்வு – பள்ளிமுனை**

- கல்வி மற்றும் கல்வி வசதிகளில் முன்னேற்றம்.
- வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கும். அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கினால் மாத்திரமே உங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
- கடல் நீர் மட்டம் அதிகரித்தல் எமக்கு பாதிப்பை ஏற்படுத்தும், வடிகாலமைப்பிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.
- பாரிய அபிவிருத்திகள், பாரிய வீடுகளின் நிர்மாணம் என்பன காணப்படும்.
- கல் வீதிகள் நல்ல நிலையில் இருக்கும். தார் வீதிகள் உருவாகும்.
- இதற்கு முன்னரும் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 10 வருடங்களின் பின்னரும் இதே நிலையே நீடிக்கும்.
- 10 வருடங்களில் மீனவர்கள் மீது மேலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.
- இந்த பகுதியின் 80%ஆனவர்கள் மீனவர்கள். கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளன. எமது பிரதிநிதிகள் தமிழர்கள்.
- 10 வருடங்களின் பின்னர் சிங்களவர் அல்லது முஸ்லீம்கள் இங்கிருப்பர். அவர்கள் எமது தலைவர்களாக இருப்பர்.
- 10 வருடங்களின் பின்னர் எம்மால் தலைநிமிர முடியாது.
- மூன்று வருடங்களுக்கு முன்னர் யுத்தம் நிறைவடைந்தது. இராணுவத்தினரால் 13 வீடுகள் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. எமக்கு அந்த வீடுகள் மீண்டும் வேண்டும். அவர்கள் எமது வீட்டுக்கு சேதம் விளைவிக்கின்றனர்.

- இராணுவ முகாமிற்கு அருகில் வசித்த 10 வீட்டு உரிமையாளர்கள், அச்சம் காரணமாக இராணுவத்தினரிடம் வீட்டை ஒப்படைத்து வெளியேறியுள்ளனர். படையினர் இந்த வீட்டுக்கு மாதாந்தம் ரூ 600 வழங்குகின்றனர். ஆனால், குறித்த வீட்டு உரிமையாளர்கள் வெளியில் மிக அதிக வாடகைக்கு வசிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அரசாங்க அதிபருக்கு அறிவித்தும் பயனில்லை. ஏனெனில், உத்தரவுகள் மேலிடத்தில் இருந்து வருகின்றன.
- ஏனைய கடலோரப் பகுதிகளில், தமது நிலங்களை விற்குமாறு கடற்படையினரால் மக்கள் அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். இவர்களில் பல அதிகாரிகள் கடந்த ஐந்து வருடங்களாக மன்னாரில் இருப்பவர்கள்.
- இந்த நிலையில் பத்து வருடங்களின் பின்னர், மாதம் ஒன்றிற்கு நாம் சம்பாதிக்கும் பணம், ஒரு நாள் தேவைக்கு மாத்திரமே போதுமானதாக இருக்கும்.
- பத்து வருடங்களின் பின்னர் மன்னார் நீரில் மூழ்கியிருக்கும்.



**கிராமச் செயலமர்வு – உப்புக்குளம்**

- உப்புக்குளம் ஒரு விசேடமான இடம்.
- கடல் நில மட்டத்திற்கு நெருங்கி வருவதனால் பத்து வருடங்களின் பின்னர் மன்னாரின் பல பகுதிகள் நீரில் மூழ்கியிருக்கும்.
- அரசாங்க கட்டடங்கள் மற்றும் நலிவுற்ற நிலங்களுக்கு இடம் வழங்கி மக்கள் வேறு இடங்களுக்கு பெயர நேரிடும்.
- கல்விக்காக மாணவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கொழும்புக்குச் செல்வதால் கல்விநிலை பாதிக்கப்படும்.
- மத முரண்பாடுகள் அதிகரித்தல்.
- நாளாந்த வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கும், குடும்பங்கள் கீழ் நிலைக்குத் தள்ளப்படும்
- மகளிர் விடயங்கள் எழுப்பப்படும் - அவர்களது வாழ்வாதாரம், துஷ்பிரயோக விபத்துக்கள், இன்னபிற
- தனியார் கல்வி துறை முன்னேற்றம் ஏற்பட்டு, அரச பாடசாலைகளின் தரம் வீழ்ச்சியடையும்
- மக்களின் பொருளாதார வாய்ப்புக்கள் மோசமாக இருப்பதனால், மன்னாரில் முதலீடு செய்வதற்கான அவர்களின் இயலுமை குறைவு. எனவே, வெளியாட்கள் வந்து முதலீடு செய்து, செல்வாக்கு செலுத்த வாய்ப்பளிக்கும்.
- போதிய முதல் இன்மையால், மக்கள் தமது பூர்வீக நிலங்களை வெளியாட்களுக்கு அதிக விலைக்கு விற்கின்றனர். ஏனெனில், மக்களுக்கு பணம் தேவை.

- நகர மக்கள் தொகை துரிதமாக அதிகரிப்பதனால், மருத்துவ சேவைகளின் தரம் குறைவதற்கு வழி வகுக்கும்.




**கிராமச் செயலமர்வு – பெட்டா மற்றும் சின்னக்கடை**

- கட்டடங்களும், உட்கட்டமைப்பும் அதிகரிக்கும்
- வீதிகள் நன்கு பேணப்படும்
- துரிதமான மக்கள் தொகை வளர்ச்சி காணப்படும். மக்கள், வீதிகள் மற்றும் வசதிகளால் நகரம் நிறைந்து காணப்படும்.
- எல்லாம் குழம்பி காணப்படும், வீடுகளை நிர்மாணிப்பதற்கு இடமிருக்காது. எதுவுமே திட்டமிடப்பட மாட்டாது.
- அனர்த்த அச்சுறுத்தல்கள் அதிகரிக்கும் - சூறாவளிகள், சுனாமிகள், கடல்நீர் மட்டம் அதிகரித்தல், கடல் வெள்ளப்பெருக்கு மற்றும் மழை வெள்ளம் என்பன மண்ணரிப்புக்கு வழி வகுக்கும்.
- பத்து வருடங்களுக்கு முன்னர் இங்கு பாலம் இல்லை. நாம் அதனை சிந்திக்க வேண்டும். தற்போது இங்கு பாலம் உள்ளது.
- அனைவரும் அபிவிருத்தி குறித்து கதைக்கின்றனர். ஆனால், எதுவும் நடக்கவில்லை. மன்னாரில் கடந்த 58 வருடங்கள் வாழ்ந்த என்னுடைய அனுபவம் இது. எதுவுமே மாறவில்லை.
- பெட்டாவில் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் மற்றும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் வசிக்கின்றனர். ஆனால் வடிகாலமைப்பு இல்லை.
- மக்கள் தொகை அதிகரிக்க, வாழ்க்கைத் தரங்கள் வீழ்ச்சியடையும்
- வேலைவாய்ப்பு இல்லை. வாழ்க்கைத் தரங்களை பேணுவதற்கு போராட வேண்டும்.
- மோசமான வடிகாலமைப்பினால் ஏற்கனவே டெங்கு நோய்த் தாக்கம் உள்ளது. எனவே, சனத்தொகை அதிகரிக்க இந்த நிலை மேலும் மோசமடையும்.
- வெளிநாட்டு கலாசாரங்கள் வந்து எமது கலாசாரத்தை அழிக்கும். மேற்கத்தைய கலாசாரம் எமது ஒழுக்கத்தினை பாதிக்கின்றது. நெட்கபேக்கள், திரைப்படங்கள், இணையத்தளம், தொலைக்காட்சி அலைவரிசைகள், ஆடைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளின் அபிவிருத்தியின் ஊடாக இது இடம்பெறுகின்றது.

திரு. கமல்ராஜ், செயற்குழு உறுப்பினர், மன்னார் பிரதேசவாசி மற்றும் செயற்றிட்ட உதவியாளர், MM2022 நடவடிக்கைகள் அனைத்திலும் கலந்து கொண்டவர், அவர் தெரிவித்த கருத்து….

> “மக்கள் மத்தியில் சோர்வு, எதிர்மறை எண்ணம் மற்றும் தமது எதிர்காலம் குறித்து போதிய கட்டுப்பாடு இன்மை சார்ந்த உணர்வே எமது அனைத்து நான்கு செயலமர்வுகளினதும் பொது அம்சமாக வெளிப்பட்டது. சுற்றுச் சூழல் மாசடைதல், தமது தனித்துவமான கலாசாரத்தின் அழிவு தொடர்பான அச்சத்தையும், தொழில்நுட்ப வளர்ச்சி இளைஞர்களை துஷ்பிரயோகம் செய்யும் மற்றும் தமது மாவட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்ட கல்வி சந்தர்ப்பங்களினால் மாணவர்கள் வேறிடங்களுக்கு பெயர்ந்து செல்லல் போன்ற அச்சங்களையும் அவர்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தினர்.
>
> இதன் போது குறுக்கிட்ட ஜெரமி (வளவாளர்), தாம் வாழ்வதற்கு உகந்த இடமாக மன்னார் இல்லையெனில், ஏன் மன்னாரை விட்டு அவர்கள் வெளியேறாது உள்ளனர் என்ற கேள்வியை எழுப்பினார்.
>
> எதிர்காலம் குறித்த கவலைகளில் சோர்ந்துவிடாது, தமது தலைவிதியை நிர்ணயிப்பவர்களாக மாறுவதற்கு மக்களுக்கு ஊக்கம் அளிக்கப்படல் வேண்டும். செயலமர்வின் இறுதியில் அவர்கள் நம்பிக்கையுடன் சென்றனர்.”



## 4.3 மன்னாரின் சந்தர்ப்பங்கள் - மன்னாரை நோக்கி வருவது என்ன?

மன்னார் இனிமேலும் தமது சொந்த சாதனங்களுடன் தேங்கியிருப்பதற்கு இடமளிக்கப்படாது என்பதே உள்ளூர் சமன்பாட்டின் முக்கிய அம்சமாக இருக்கின்றது. அறிமுகத்தில் சுட்டிக்காட்டியதனைப் போன்று, பல்வேறு குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன அல்லது ஆரம்பிக்கப்படவுள்ளன:

- மதவாச்சியிலிருந்து, தலைமன்னார் வரையான ரயில் பாதை இணைப்பு மற்றும், தேசிய ரயில் வலையமைப்புடன் அதனை இணைத்தல். புதிய ரயில் நிலையங்களும், வசதிகளும் இந்த அபிவிருத்தி நடவடிக்கைக்கு துணை புரியும்.

- தலைமன்னாரின் துறைமுக வசதிகளை மீளமைத்தல். இந்தியாவுக்கான படகு சேவையை ஆரம்பித்தல். இதன் மூலம், பிரதேசத்தின் வர்த்தகம், சுற்றுலாத் துறை மற்றும் தல யாத்திரை என்பன மேம்படும்.

  மன்னார் உப்பளத்தில் தொகுதி 1இல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அகழ்வு நிறைவடைந்தவுடன், மன்னார் நீர்ப்பகுதியில் பெற்றோலிய அகழ்வு ஆரம்பிக்கப்படும். தொகுதி எட்டாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொகுதி 8இற்கான அகழ்வு 4,995 சதுர கிலோமீற்றர்களாக உள்ளது. மன்னாரில் அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன், பொருட்கள், சேவைகள் மற்றும் தொழிலாளருக்கான கேள்வி உடனடியாக அதிகரிக்கும். அத்துடன், பிரதேசத்தின் வங்கிச் சேவை, காப்புறுதி, நிர்மாணம், போக்குவரத்து, பயன்பாட்டு சேவைகள், தொழில்நுட்ப மற்றும் வேறு உட்கட்டமைப்பு சம்பந்தப்பட்ட சேவைகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான இணைப்பை உருவாக்கும்.[5]

- தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2030 (NPPP 2011-2030)இற்கு அமைய சனத்தொகை இரண்டு மடங்கு அதிகரிக்கக் கூடிய வாய்ப்புள்ள இரண்டு விசேட நோக்கம் கொண்ட நகரங்களில் ஒன்றாக மன்னார் உள்ளது. மன்னாரிலிருந்து, அம்பாந்தோட்டைக்கான துரிதகதி பாதை மற்றும் ரயில் பாதை இணைப்பு, மன்னாரிலிருந்து திருகோமணமலைக்கு புதிய ரயில் பாதை, உள்ளக விமான நிலையம் மற்றும் மாவட்டத்தை முக்கியமான போக்குவரத்து மையமாக மாற்றும் டிரான்ஸ் ஏசியன் ரயில் பாதை உள்ளடங்கலாக பல அபிவிருத்தி நடவடிக்கைகள் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்தியாவின், இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கான நிலவழி பாலம் அமைப்பது குறித்த உத்தேசத் திட்டம் மாத்திரம், மன்னாருக்கு சிறந்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும். ஏனெனில், இந்த பாலம் துரிதமாக வளர்ந்து வரும் தென்னிந்திய மாநிலங்களான கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகாவுடன் இணைப்பை ஏற்படுத்துகின்றது[6]

- தலைநகர் மற்றும் யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்கான புதிய பாதை நிர்மாணம், போக்குவரத்து நேரத்தை குறைக்கும்.

- இலாபகரமான சுற்றுச் சூழல் சுற்றுலாத் துறைக்குள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பங்கள். ராம்சார் தளங்கள் போன்ற இடங்கள், புலம்பெயர் பறவைகளுக்கு உகந்த இடமாக விளங்குகின்றன. அத்துடன், மத்திய-தென் ஆசிய விமானப் பாதையின் இறுதி நிறுத்தல் இடமாகவும் இது காணப்படுகின்றது. இந்த இடத்தில் மாத்திரம் அண்ணளவாக 4800 ஹெக்டேயரில் 20,000இற்கும் அதிகமான பறவைகள் வந்து செல்கின்றன[7]. வில்பத்து தேசியப் பூங்கா அருகில் உள்ளமையும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விடயமாக இருக்கும்.

ஏற்கனவே, தென் பகுதி மக்கள் மன்னார் நோக்கிச் செல்கின்றனர். பல கொழும்பு நிறுவனங்கள் மன்னாரிற்குள் வந்து, அதிநவீன செயற்பாடுகளை ஸ்தாபித்து வருகின்றன. அவர்கள் தம்முடன் ஊழியர்களை அழைத்து வருவதனால், இலாபங்கள் மாவட்டத்தை விட்டுச் செல்கின்றன. மேலே பட்டியலிடப்பட்ட சந்தர்ப்பங்களும், நகரம் மற்றும் மக்களுக்கு குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு துணை புரியும். ஒரு காலத்தில் உறங்கிக் கிடந்த, தனிமைப்படுத்தப்பட்ட இந்த இடம் அபிவிருத்தி மற்றும் நாடுகடந்து செல்வதற்கான பிரதான மையமாக மாற்றம் அடையும். இந்த அபிவிருத்தி செயற்பாட்டில் தவற விடப்படும் விடயமாக, மன்னார் மக்களின் ஈடுபாடின்மை காணப்படுகின்றது. தமது நகரத்தின் எதிர்காலத்திற்கு மன்னார் மக்கள் உழைக்க வேண்டும். 30 வருட சிவில் யுத்தம், பல இடப்பெயர்வுகள் மற்றும் கணிசமான இழப்பு என்பவற்றில் இருந்து தப்பியுள்ள மன்னார் மக்கள் பின்னடைவில் இருந்து வெளிவருதலை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த போராடும் குணமும், தப்பியிருத்தல் மனநிலையும் அவர்களுடைய எதிர்காலப் பயணத்திற்கு மிகவும் முக்கியமானது என மீண்டும் நிரூபணமாகியுள்ளது. மன்னாரின் மறுமலர்ச்சி 2022 தொலைநோக்கு பயிற்சி, பிரதேசவாசிகளின் நம்பிக்கையற்ற கண்ணோட்டத்திற்கு சவாலாகவும், நகரம் மற்றும் மக்களின் நலனுக்காக ஊக்கமளிக்கும் மருந்தாகவும் நோக்கப்படுகின்றது. அதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு கிட்டியுள்ளது.

இந்த தவிர்க்க முடியாத அபிவிருத்தியை சிறந்ததாக மாற்றி மன்னார் குடியிருப்பாளர்களை சிறந்த நிலையில் வைத்திருப்பதற்கு தேவை என்ன என்பதனை சமுதாய அரங்கில், கடைசிக் கேள்வி அடையாளப்படுத்தியது. பங்குபற்றுநர்கள் மீண்டும், மீண்டும் விரக்தியுடன் சிந்தித்தமையினால், இது ஆரம்பத்தில் மிகவும் சிக்கலாக இருந்தது. இவற்றின் மத்தியில், ஏனையோர் தொலைநோக்கு குறித்து புரிந்து கொண்டு, யதார்த்தமான முயற்சிகளை முன்வைக்க ஆரம்பித்தனர். உதாரணமாக, சுற்றுலாத் துறையை முன்னேற்றுவதற்கான மற்றும்

---

[5] பிரசான், ஜுன், *இலங்கையின் வடமாகாண நகர வரிசையில் மன்னார் நகரம், ப33*

[6] ibid p34

[7] Ibid p37

வழிகாட்டிகளை பயிற்றுவிப்பதற்கான உபாயம், ஆங்கில மற்றும் சிங்கள மொழி நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படல் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் பயிற்சி மற்றும் மன்னார் கணனிமயமாக்கப்படல் போன்ற விடயங்களை குறிப்பிடலாம். மீன்பிடித் துறைக்கு தொழில்நுட்ப பயிற்சி வசதிகளை ஸ்தாபித்தல், மீன்பிடி மற்றும் விவசாயத் துறைகளை 'பெறுமதி-சேர்' துறைகளாக விருத்தி செய்தல் மற்றும் காகித தொழிற்சாலை உள்ளடங்கலாக புதிய தொழில்களின் உருவாக்கம் போன்ற திட்டங்களையும் அவர்கள் முன்வைத்தனர். இந்தப் பணிகளை தொடர்வதற்கு மன்னாரின் மறுமலர்ச்சி 2022 குழுவின் உருவாக்கம் குறித்தும் பரிந்துரைக்கப்பட்டதுடன், நன்கு ஆதரவும் அளிக்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட சில பொதுவான கருத்துக்கள் பின்வருமாறு:

> "எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கு நாம் உண்மையாக தயாராக உள்ளோமா?"
>
> "எமது மத மற்றும் கலாசார பாரம்பரியங்களின் அடிப்படையில் எதிர்கால அபிவிருத்திக்காக நாம் ஒன்றிணைய வேண்டும். இல்லையெனில் நாம் பல சமூக சிக்கல்களை எதிர்கொள்வோம்"

அனைத்து கலந்துரையாடல்கள், கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளின் பின்னரும், பங்குபற்றுநர்களின் மத்தியில் முன்னேறிச் சென்று, மன்னாரின் எதிர்கால அபிவிருத்தியின் பொறுப்பை எடுப்பதற்கு, அதன் பொருட்டு குரல் எழுப்புவதற்கு மற்றும் கலாசார பாரம்பரியங்கள் அழியாது எதிர்கால அபிவிருத்தியை உறுதி செய்யும் ஊக்கத்திற்கான உறுதித் தன்மை உணர்வு காணப்பட்டது.



## 4.4 மன்னாரின் தொலைநோக்கு – மன்னாரிற்கான மக்களை மையமாகக் கொண்ட எதிர்காலம் என்ன?

மன்னாருடன் மக்களுக்கான தொடர்பின் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு மன்னார் தொடர்பில் மக்கள் விரும்புவது என்ன என்பது குறித்த கேள்வியும், ஆய்வில் உள்ளடக்கப்பட்டிருந்தது. கிராம செயலமர்வுகளில் வழங்கப்பட்டவற்றிலும் பார்க்க, அதிக குறிக்கோள் வாய்ந்ததாக அவர்களது பதில்கள் இருந்தன. அங்கு, தமது கவலைகள் மற்றும் அக்கறைகளை வெளிப்படுத்துவதற்கு பங்குபற்றுநர்கள் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டனர். இருப்பினும், இந்த பகுதியில் மக்கள் விரும்புவது என்ன என்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அவர்கள் கேட்கப்பட்ட போது, தமது பதில்கள் தொடர்பில் மிகுந்த எச்சரிக்கை கொண்டவர்களாக, சமமானவர்களாக, மன்னார் வாழ்க்கை தொடர்பில் பல விடயங்களை அவர்கள் வரவேற்பதாக அங்கீகரிப்பவர்களாக இருந்தனர். சமுதாய அரங்கில், மன்னாரின் 'பலங்கள்' மற்றும் 'பலவீனங்களை' பகுப்பாய்வு செய்யுமாறு பங்குபற்றுநர்கள் கோரப்பட்டனர். இடம் தொடர்பில் மக்களின் சாதகமான நடவடிக்கைகளுடன் ஆரம்பிக்கும் இந்த பகுதி, அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்த பதில்களுடன் நிறைவடைகின்றது.

**மன்னார் தொடர்பில் நீங்கள் விரும்புவது என்ன?**

| பதில்கள் | அளவு | வீதம் |
|---|---|---|
| இயற்கை சுற்றுச் சூழல் | 49 | 23.7 |
| சிறந்த மாற்றங்கள், அபிவிருத்தி மற்றும் கேந்திர தோற்றம் | 39 | 18.9 |
| வாழ்க்கை தரங்கள் மேம்படல் | 28 | 13.5 |
| விசேட கட்டடங்கள் மற்றும் தலங்கள் | 25 | 12.1 |
| தனித்துவமான/கலாசார பாரம்பரியம்/வரலாற்றுச் சிறப்பு | 14 | 6.8 |
| அமைதியான, பிணைக்கப்பட்ட மக்கள் | 13 | 6.3 |
| சமூக பல்வகைத் தன்மை | 12 | 5.8 |
| சிறந்த வசதிகள் | 8 | 3.9 |
| வேறு | 8 | 3.9 |
| நன்கு கற்ற, மதிப்புக்குரிய மக்கள் | 4 | 1.9 |
| மன்னாரிலிருந்து வருவது பெருமையானது | 4 | 1.9 |
| யுத்தத்திற்கு பின்னரான அமைதி | 3 | 1.5 |
| **மொத்தம்** | **207** | **100** |

**அட்டவணை 2: மன்னார் தொடர்பில் மக்கள் விரும்புவது**

செயலமர்வுகளிலும், அரங்கிலும் மொத்தமாக கால் பங்கினர், இயற்கை சுற்றுச் சூழல் தொடர்பில் தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர். இயற்கை சூழலில் தங்கியுள்ளவர்கள் என்பதனை ஒப்புக் கொண்டனர். அதன் பாதுகாப்புக்கு அவர்கள் பல வேண்டுகோள்களை முன்வைத்தனர். ஒட்டுமொத்தமாக, நிலமும், கடலும் அவர்களுடைய வாழ்க்கையில் முக்கிய இடத்தை பிடித்துள்ளன. யுத்தம் நிறைவடைந்துள்ளமையானது, சாதகமான மாற்றங்களை கொண்டு வந்துள்ளதாக பங்குபற்றுநர்கள் தெரிவித்தனர். முக்கியமாக, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார தோற்றம், புதிய அபிவிருத்தி திட்டங்கள் (19%) மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை தரம் (14%). வரலாற்று சிறப்பு மற்றும் மத தலங்களின் அமைவு குறித்த பிரதேசத்தின் தனித்துவத்தினையும், நிரந்தரமான கலாசார பாரம்பரியத்தையும் அவர்கள் விரும்புகின்றனர் (19%). இன மற்றும் மத முரண்பாடுகள் தொடர்பில் அவர்கள் விழிப்புணர்வுடன் இருக்கின்ற போதிலும், மன்னாரின் கலாசார மற்றும் மத பல்வகைத் தன்மையை அவர்கள் மதிக்கின்றனர். மொத்தத்தில் அவர்கள் அமைதியை விரும்பும், ஒன்றிணைந்த மக்களாக உள்ளனர் (12%).

பிரசேதத்தின் பலங்களை அடையாளம் காணுமாறு கோரிய போது இந்த உணர்வுகளில் பல சமுதாய அரங்கிலும் விளக்கமாக பிரதிபலித்தன. பெரும்பான்மையானவர்களால் பேசப்படும் ஒரே மொழியான தமிழ்மொழி காரணமாக, இலகுவான தொடர்பாடல், சமூக ஒருங்கிணைப்புக்கான அர்ப்பணிப்பு மற்றும் பிரதான மதங்கள் மத்தியில் இயற்கையான உறவு குறித்த அங்கீகாரம் மற்றும் சிறந்த மத ஒழுக்கங்களை பின்பற்றலின் காரணமான உயர்தரமான நடத்தை என்பன உள்ளடங்கலாக பலவற்றை அவர்கள் விளக்கினர். அனைத்து களங்களிலும் கற்ற மக்களை கொண்டுள்ளதாகவும், எழுத்தறிவு வீதம் அதிகமாக காணப்படுவதாகவும் மன்னார் மக்கள் தெரிவித்தனர். பல விளையாட்டு வீரர்களும், விளையாட்டு அறிவுறுத்துனர்களும் மன்னாரிலிருந்து உருவாகியுள்ளதாகவும், சர்வதேச ரீதியில் சிறந்த அங்கீகாரத்தை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர். மீண்டும், ஆய்வு முடிவுகளைப் பார்க்கும் போது, மன்னாரில் விசேடமாக மீன்பிடித் துறை மற்றும் தச்சு வேலை, துணி வெளுத்தல் மற்றும் தையல், தெங்கு மற்றும் பனை உற்பத்தி போன்ற குடிசைத் தொழில்களில் சிறந்த வாழ்வாதாரங்களை எட்டுவதற்கு அவர்களுக்கான சந்தர்ப்பங்களை அரங்கின் பங்குபற்றுநர்கள் புரிந்து கொண்டனர். மன்னாரில் உயர் திறன் மிக்க தொழிலாளர் வலு, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அரசாங்க சேவைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் உண்மையான ஆதரவு என்பன உள்ளதாக அவர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

மடு மாதா தேவாலயம், திருக்கேதீஸ்வரம், மன்னார் நகரில் உள்ள டச்சு கோட்டை, சிலாவத்துறை அரிப்பு அல்லிராணிக் கோட்டை, பள்ளிமுனை பெருக்கமரம், புதுக்குடியிருப்பு வெளிச்ச வீடு, தலைமன்னார் துறைமுகம், தோட்டவெளி, பாரியத்தாங்கி மற்றும் உள்ளூர் மீன்பிடி மற்றும் விவசாயம், மன்னார் உப்பளங்கள், தள்ளாடியிலிருந்து பண்பாட்டுசார் மூலிகைகள் மற்றும் சிலாவத்துறை முத்துக்கள் ஆகியன உள்ளடங்கலாக மன்னாரின் தனித்துவமான மற்றும் குறிப்பிடத்தக்க வரலாற்று தளங்களே அடிக்கடி வலியுறுத்தப்பட்டது.





**மன்னாரின் எந்த பௌதீக அம்சங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்?**

காப்பாற்றப்பட வேண்டிய மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய பௌதீக அம்சங்கள் எவை என்பது தொடர்பான கேள்விக்கான பதிலாக, மேலே குறிப்பிட்டதைப் போல் சுற்றுச்சூழல் (53%) மற்றும் தொல்லியல், மத மற்றும் கலாசார தளங்கள் (33%) முன்மொழியப்பட்டன. சுற்றுச் சூழல் சார்ந்த பதில்களில் கடல் மற்றும் கரையோர பாதுகாப்பு, தீவின் குடிநீர் வளங்களை பாதுகாத்தல், இயற்கை காடுகளை அழிக்காது இருத்தல் மற்றும் கனிமம் அடங்கிய மணல் அகழ்வை தடுத்தல், மன்னாரை கடல் மட்டத்தில் உயரமாக்கல், முருகைக்கற்பாறைகள், கடல் மற்றும் கடல்வாழ் உயிரினங்களை பாதுகாத்தல் என்பன சார்ந்தததாக காணப்பட்டன. பெருக்கமரம் மற்றும் பறவைகளின் சரணாலயங்கள் என்பனவும் சுட்டிக்காட்டப்பட்டன.

| பதில்கள் | அளவு | வீதம் |
|---|---|---|
| சுற்றுச் சூழல்/இயற்கை வளங்கள் | 175 | 53.2 |
| தொல்லியல்/சுற்றுலாத் தளங்கள் | 81 | 24.6 |
| கலாசார மற்றும் வழிபாட்டுக்கான இடங்கள் | 28 | 8.5 |
| பொதுக் கட்டடங்கள், வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு | 20 | 6.1 |
| குடிசைக் கைத்தொழில் | 18 | 5.5 |
| தனித்துவமான அம்சங்கள் | 7 | 2.1 |
| **மொத்தம்** | **329** | **100** |

**அட்டவணை 3: பௌதீக அம்சங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்.**




**அட்டவணை 3: பாதுகாக்கப்பட வேண்டிய பௌதீக அம்சங்கள்**


**பாதுகாக்கப்பட வேண்டிய சமூக காட்சிப் பண்புகள் எவை?**

செயலமர்வுகள் மற்றும் அரங்கில் கதைக்கப்பட்ட விடயங்கள் இந்த கேள்விகளுக்கான பதில்களாக பிரதிபலித்திருந்தன. அதிகமாக குறிப்பிடப்பட்ட பதிலாக கலாசார பாரம்பியத்தை பாதுகாத்தல் (33%) குறிப்பிடப்பட்டது. வரலாற்று புத்தகங்களை, கிறிஸ்தவ கலாசாரத்தை, பண்பாட்டு பழக்கங்களை, கா்நாடக சங்கீத மற்றும் கலைகளை, நாட்டுக் கூத்து, நாடகம் மற்றும் தமிழ் கலாசாரத்தை பாதுகாத்தல் குறித்த பதில்களும் தெரிவிக்கப்பட்டன. வெளி கலாசாரங்களின் திணிப்பு தொடா்பில் பலா் வெறுப்பு வெளியிட்டிருந்தனா். தமிழ் கலாசாரத்தை பாதுகாத்தல் எனும் பெயரில் மேற்கத்தைய கலாசாரங்களின் திணிப்பும் நிறுத்தப்பட வேண்டும் என அவா்கள் குறிப்பிட்டனா்.

| **பதில்கள்** | **அளவு** | **வீதம்** |
|---|---|---|
| கலாசார பாரம்பரியம் | 103 | 32.8 |
| நன்னடத்தை, ஒழுக்கம், உரிமைகள் | 73 | 23.3 |
| சமுதாய ஒருமைப்பாடு | 72 | 22.9 |
| வேறு | 24 | 7.6 |
| எதிர்கால மன்னார் குறித்த நம்பிக்கை | 15 | 4.8 |
| தன்னார்வத் தொண்டு/சமூக சேவை | 13 | 4.0 |
| சமுதாய ஒத்துழைப்பு மற்றும் பங்குபற்றல் | 8 | 2.7 |
| சுற்றுச் சூழல் மீதான பராமரிப்பு | 6 | 1.9 |
| **மொத்தம்** | **314** | **100** |

**அட்டவணை 4: பாதுகாக்கப்பட வேண்டிய சமூக காட்சிப் பண்புகள்**

நன்னடத்தை, ஒழுக்கம் மற்றும் உரிமைகள் தொடா்பான விடயம் (23%), அனைத்து தகவல் சேகரிப்பு பயிற்சியிலும் அடிக்கடி எழுந்ததுடன், ஒழுங்கமைப்பாளா்களுக்கு ஆச்சரியத்தையும் அளித்தது. யுத்தத்தின் பின்னா் தமது சமூகத்தின் நன்னடத்தையின் அஸ்திவாரம் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளதாக அவா்கள் மத்தியில் ஒருவித உணா்வு உள்ளூர இருக்கின்றது. இது எங்கு கொண்டு செல்லும் என்பது தொடா்பில் மக்கள் ஆவலாக உள்ளனா். சிறுவா்களுக்கு முறையான ஒழுக்கம் கற்பித்தல், மதுபானக் கடைகளில் இருந்து தப்பியிருத்தல் அல்லது பிரதான இடங்களில் இருந்து ஒதுக்குப்புறமான இடங்களுக்கு மதுபானக் கடைகளை மாற்றல், கடவுளுக்கு பயந்த வாழ்க்கையை உள்வாங்கல், சிறுவா்கள் மீதான சுரண்டலை நிறுத்தல் மற்றும் சிறுவா்களுக்கு எதிரான வன்முறை, கணவனை இழந்த பெண்கள் தவறாக நடத்தப்படலை தடுத்தல், மது மற்றும் போதைப் பொருள் பாவனையை நிறுத்தல், நல்ல சமூகத்தை உருவாக்கல், சமூகத்திற்கு எதிரான நடத்தையை நிறுத்துதல், சட்ட ஒழுங்கை உறுதி செய்தல், முதியவா்களை மதித்தல் மற்றும் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தல் தொடா்பில் வேண்டுகோள்களை முன்வைத்தனா்.




**உரு 4: பாதுகாக்கப்பட வேண்டிய சமூக காட்சிப் பண்புகள்**

ஒரு குறுகிய சமூகரீதியாக இசைவான சமூகம் என்பதே பதிலளிப்பவர்கள் முன்வைத்த மற்றுமொரு விடயமாக இருந்தது. மன்னாரில், முஸ்லீம்கள் மற்றும் தமிழர்களுக்கு இடையிலான, வேறுபட்ட மத குழுக்களுக்கு மத்தியிலான மற்றும் அரசாங்கத்தை நோக்கிய உறவுகள் மன்னாரில் சிறந்த அளவில், சிறந்த உறவினை கொண்டுள்ளதாக 23%ஆனவர்கள் தெரிவித்துள்ளனர். சமுதாயங்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை கொண்டு வரும், இனங்களுக்கு இடையிலான வேற்றுமைகளை ஒழிக்கும் நடவடிக்கைகளை உருவாக்குமாறு தமது சக பிரஜைகளிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர். சமுதாயங்களுக்கு மத்தியில் சிறந்த உறவை மீளகட்டமைப்பதற்கு கிராமத்தில் இணக்கம், மீனவர்களுக்கு மத்தியில் ஒற்றுமையை ஊக்குவித்தல் மற்றும் சமூக, மத கூட்டங்களை ஒழுங்கு செய்தல் ஆகிய நடவடிக்கைகளையும் அவர்கள் விரும்புகின்றனர்.

**மன்னாரை சிறந்த இடமாக மாற்றக் கூடியது எது?**


மன்னார் மக்களின் செய்திகளில் விநோதமான தொடர்ச்சி காணப்படுகின்றது. நகர சபைக்கு மாத்திரமல்ல, செவிமடுக்கும் எவருக்கும் அது அவ்வாறே தோன்றும். முறையான நகரத் திட்டமிடல் (26%), வாழ்வாதாரங்கள் (21%), மேலதிக கல்வி (9%) மற்றும் சமூக இணக்கம் (8%) என்பன தற்போது முக்கியமான தொனிப்பொருட்களாக உள்ளன. போதிய குப்பை சேகரித்தல் இடம்பெறுவதில்லை என குரல் எழுப்பப்படுகின்றன. விரக்தியடையச் செய்யும் வகையில் போதிய அளவில் மின்சார விநியோகம் இன்மை என்பன காரணமாக தொடர்ந்து, மீண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொனிப்பொருட்களையே மன்னார் மக்கள் குறிப்பிட்டு வருகின்றனர்.

| பதில் | அளவு | வீதம் |
|---|---|---|
| நகரத் திட்டமிடல், வசதிகள், உட்கட்டமைப்பு, வீதி | 133 | 25.8 |
| வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி | 107 | 20.7 |
| மேலதிக கல்வி | 48 | 9.3 |
| சமுதாய ஒற்றுமை மற்றும் மக்களின் பங்குபற்றல் | 42 | 8.1 |
| சுற்றுச் சூழல் பராமரிப்பு | 38 | 7.4 |
| மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து | 31 | 6.0 |
| சுத்தமான நகரம் | 21 | 4.1 |
| மின்சாரம் மற்றும் நீர் | 21 | 4.1 |
| சுற்றுலாத் துறை | 19 | 3.7 |
| வேறு (நிலப் பத்திரங்கள் மற்றும் வீடமைப்பு) | 17 | 3.3 |
| சுகாதார வசதிகள் மற்றும் சேவைகள் | 15 | 2.9 |
| நன்னடத்தை/உரிமைகள்/சட்ட விதிகள் | 15 | 2.9 |

| | | |
|---|---:|---:|
| கலை/கலாசாரம்/பொழுதுபோக்கு | 9 | 1.7 |
| **மொத்தம்** | **516** | **100** |

**உரு 5: மன்னாருக்கு ஆலோசிக்கப்படும் முன்னேற்றங்கள்**

புதிய மற்றும் வித்தியாசமான நகரை அமைப்பதன் மூலம் நகரத் திட்டமிடுபவர்கள் மன்னாரை அழகானதாக மாற்ற வேண்டும் என மன்னார் குடியிருப்பாளர்கள் விரும்புகின்றனர். கவர்ச்சிகரமான பொது இடங்கள், கலாசார நிலையங்கள் மற்றும் நவீனமயமான வசதிகள் என்பவற்றுடன் நிலையான அபிவிருத்தியின் அடிப்படையில் மன்னாரை உலகில் பிரபலமான நகரமாக மாற்ற வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். பொது தனியார் பங்காளித்துவங்கள், பாரிய அளவிலான தொழிற்சாலைகள் ஒரு புறமும், குடிசைக் கைத்தொழில்கள் மறுபுறமும் என உள்ளூர் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும், பெண்கள் மற்றும் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதனை இலக்கு வைத்த அபிவிருத்தியுடன் இணைக்கப்பட்ட, சமூக பொறுப்பு வாயந்த பரிமாணம் தேவை என அவர்கள் விரும்புகின்றனர். இலங்கை மீதான இந்தியாவின் ஆதிக்கத்தை குறைத்து, தன்னிறைவுடன், நிதியுதவியாளர்களில் நம்பியிராது மன்னாரை கணனிமயப்படுத்த வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். எல்லாவற்றிற்கும் அப்பால், தேசப்பற்றுடன் இருத்தல் மற்றும் தேசிய ஆர்வத்திற்கு ஆதரவளித்தல், அனைத்து கருத்துக்களுக்கும் மதிப்பளித்தல் மற்றும் சிங்கள/தமிழ்/முஸ்லீம் மக்களுடன் ஒற்றுமையுடன் செயற்படலுடன், நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்திக்குமாறு ஏனைய பிரஜைகளை அவர்கள் ஊக்குவிக்கின்றனர். அவர்களுடைய கோரிக்கை சுயநலமானது அல்ல. இருப்பினும், பொது நலத்தை மேம்படுத்துவதே அவர்களது கோரிக்கையாக உள்ளது. 'மன்னாரில் வசிக்கும் மக்கள் ஒற்றுமையாக வேண்டும். இது எமது இடம் என நாம் எண்ண வேண்டும்' என ஒருவர் தெரிவித்தார். 'அனைத்து மத மக்களும் ஒன்றிணைந்து, மன்னாரின் மறுமலர்ச்சி 2022இற்கு உதவ வேண்டும்'' என மற்றுமொருவர் தெரிவித்தார்.




**உரு 5: மன்னாரை சிறந்த இடமாக மாற்றல்**

தமது கருத்துக்களில், மதங்களுக்கு இடையிலான முரண்பாடு மற்றும் மத கொள்கை வெறி தொடர்பிலும் எச்சரிக்கை விடுத்தனர். தகவல் தொழில் நுட்பம் அல்லது ஆங்கிலம் மற்றும் சிங்களம் போன்ற வேறு மொழிகளை கற்பதற்கான சிறு ஆர்வம் தொடர்பிலும் அவர்கள் கருத்து தெரிவித்தனர். மீனவர்களிடம் உள்ள மீன்பிடி மற்றும் தொழில் நுணுக்க முன்னேற்றங்கள் தொடர்பில் நவீன மற்றும் நிலையான முறைகள் குறித்த சிறு விழிப்புணர்வின் காரணமாக நடப்பு அணுகுமுறைகளை அவர்களால் எதிர்கொள்ள முடியவில்லை. மக்களின் அமைதியான வாழ்க்கையில் அரசியலே குழப்பத்தை தோற்றுவிப்பதாகவும், அரசியல் இடையீடே சமுதாயத்தை பிரிப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர். வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் அரிதாக உள்ளமையினால், கற்றவர்கள் சிறந்த வாய்ப்புகளுக்காக மன்னாரிலிருந்து வெளியேறுகின்றமை தொடர்பில் அவர்கள் அதிக சிரத்தை கொண்டுள்ளனர். உயர் கல்விக்காக யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பினை நோக்கி இளைஞர்கள் படையெடுத்துச் செல்வதிலும் அதே நிலையே காணப்படுகின்றது.

துறைசார் விடயங்களும் அவர்களுக்கு அக்கறையுடையவையாக காணப்படுகின்றன. மீனவர்கள் தொடர்ந்து அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளை பல விதங்களில் சகித்துக் கொள்கின்றனர். ஆழ் கடல் மீன்பிடியில் கட்டுப்பாடுகள், சில குறிப்பிட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்துவதில் தடையானது மன்னாருக்கு

வெளியில் உள்ளவர்களுக்கு நியாயமற்ற சாதகத் தன்மையை வழங்குகின்றது. பயனுறுதியற்ற அனுமதி முறை மற்றும் தொடர்ச்சியான படகு மற்றும் வாகன பரிசோதனை என்பனவும் அதிகரித்த அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. பல்வேறுபட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு இடையிலான மோதலையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இலங்கை கடல் பகுதியில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஏனைய பின்னடைவுகளும் கலந்துரையாடப்பட்டன. திட்டமிடலில் எவ்வித பொது பங்களிப்பும் இன்மை குறித்தும், வீதிகள் விஸ்தரிக்கப்பட வேண்டிய நிலையில் குடியிருப்பாளர்கள் போதியளவில் ஒத்துழைப்பு வழங்காமை குறித்தும் கலந்துரையாடப்பட்டன. நகரத்திற்கான முழுமையான வடிகாலமைப்பு முறை போதியதாக இல்லை. அத்துடன், முறையான மீள்சுழற்சி முறையும் இல்லை. குப்பைகளை சேமிப்பதற்கான இடமும் இல்லை. வேறிடங்களைச் சேர்ந்த பாரிய ஒப்பந்ததாரர்கள், பாரிய அபிவிருத்தி செயற்றிட்டங்களில் பொதுவாக ஈடுபடுவதனால், பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு சந்தர்ப்பம் இல்லாது போகின்றது.

குறிப்பிடப்பட்ட வேறு பலவீனங்களாக, சுற்றுலாப் பயணிகளுக்கு போதிய வசதிகள் இன்மை, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தேக்கத்தை ஏற்படுத்தும் இராணுவத்தினரின் பிரவேசம் என்பன சுட்டிக்காட்டப்பட்டன. உதாரணமாக, மடு மாதா திருத்தலத்தின் மற்றும் திருக்கேதீஸ்வரம் கோவில் பாரிய மத கொண்டாட்டங்கள், முத்து தொழிலை ஊக்குவிக்கும் சிலாவத்துறை என்பவற்றின் மீதான தாக்கங்களை குறிப்பிடலாம். பெறுமதிமிக்க சுற்றுலாத் துறை சொத்தாக விளங்கும், மன்னார் கோட்டை, இராணுவக் கட்டுப்பாடுகள் மற்றும் இராணுவத்தினர் தங்கியிருப்பதனால் பயன்படுத்தப்பட முடியாதுள்ளதாக மக்கள் குறிப்பிடுகின்றனர். மன்னாரின் இளம் தலைமுறைக்கு கோட்டையைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். அதேவேளை, தள்ளாடி முன்னொரு காலத்தில் மூலிகை மருந்துகளுக்கு பிரபலமான இடமாக இருந்தது. தற்போது அது கட்டுப்படுத்தப்பட்ட இடமாக உள்ளது (அரங்கு ஆரம்பிக்கப்பட்டது முதல், இராணுவத்தினர் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளதுடன், கோட்டைக்கான பிரவேசத்தை வழங்கியுள்ளனர்).




**நகர சபைக்கு நீங்கள் கூற விரும்பும் மூன்று முக்கியமான இலக்குகள் எவை?**

நகர சபை முன்னெடுக்க வேண்டும் என தாம் விரும்பும் மூன்று இலக்குகளை முன்னுரிமைப்படுத்துமாறு, பங்குபற்றுநர்கள் கோரப்பட்டனர். தனிநபர்களின் பெறுமதிகள் மற்றும் அவர்களுக்கு முக்கியமானது என்ன என்பது குறித்த புரிந்துணர்வை பெற்றுக் கொள்வதற்காக இந்த கேள்வி எழுப்பப்பட்டது. ஒருவரின் பதிலானது, அவர்கள் எவ்வாறு விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர் என்பதனை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. மன்னார் மக்களுக்கு திரட்டப்பட்ட முக்கியமான முன்னுரிமைகளினை கண்டறிவதற்கு விகிதாசாரங்கள் கணக்கிடப்பட்டன.


| பதில் | முதல் விருப்பு | | | இரண்டாவது விருப்பு | | | மூன்றாவது விருப்பு | | மொத்தம் | மொத்தம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அளவு | % | =%*3 | அளவு | % | =%*2 | அளவு | % | | |
| இயற்கை சுற்றுச்சூழலை பாதுகாத்தல் | 81 | 38.57 | 115.71 | 23 | 10.95 | 21.90 | 28 | 13.33 | 150.94 | 25.1 |
| அடிப்படை உட்கட்டமைப்பை வழங்கல் | 55 | 26.19 | 78.57 | 46 | 21.90 | 43.81 | 31 | 14.76 | 137.14 | 22.9 |
| மிகவும் பலவீனமானவர்களை பராமரித்தல், பொது பங்குபற்றல், தன்னார்வத் தொண்டு | 27 | 12.85 | 38.57 | 44 | 20.95 | 42.11 | 43 | 20.48 | 100.96 | 16.8 |
| நிலைத்திருக்கும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல் | 22 | 10.48 | 31.43 | 48 | 22.86 | 45.71 | 21 | 10.00 | 87.14 | 14.5 |
| சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை மதித்தல் | 4 | 1.90 | 5.71 | 12 | 5.71 | 11.43 | 40 | 19.05 | 36.19 | 6.0 |
| கலாசார பாரம்பரியங்களை கொண்டாடல் | 15 | 7.14 | 21.43 | 15 | 7.14 | 14.29 | 1 | 0.48 | 36.19 | 6.0 |
| பார்வைக்கு கவர்ச்சிகரமான தோற்றம் கொண்ட நகரை உருவாக்கல் | 4 | 1.90 | 5.71 | 13 | 6.19 | 12.38 | 34 | 16.19 | 34.29 | 5.8 |
| புதிய பொழுதுபோக்கு வசதிகளை அறிமுகப்படுத்தல் | 2 | 0.95 | 2.86 | 9 | 4.29 | 8.57 | 12 | 5.71 | 17.14 | 2.9 |
| **மொத்தம்** | 210 | 100 | | 210 | 100 | | 210 | 100 | | 100 |

**அட்டவணை 6: நகரசபைக்கான குடியிருப்பாளர்களின் இலக்குகள்**

கிராம செயலமர்வுகளின் பெறுபேறுகளுடன் இணைந்ததாக, தமது நிலம் மற்றும் கடல் மீதான மன்னார் குடியிருப்பாளர்களின் பிணைப்பு சொற்களில் வெளியானது. 'இயற்கை சுற்றுச் சூழலை பாதுகாத்தல்' என்பதே தமது தனிப்பட்ட பெறுமதிகள் மற்றும் நகர சபைக்கு அவர்கள் தெரிவிக்க வேண்டிய செய்தியின் பிரதான விருப்பமாக அமைந்திருந்தது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பதே ஆதிக்கம் செலுத்தும் மதிப்பாக 25%ஆன பங்குபற்றுநர்களால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்டுக் கூற வேண்டிய மற்றுமொரு முக்கியமான மதிப்பாக இருப்பது, சமுதாய சார்பான நலன்புரி மற்றும் மனித சேவை முயற்சிகளை (16.8%) நகர சபை ஆரம்பிக்க வேண்டும் என்பதாகும். நகர சபை அடிப்படை உட்கட்டமைப்பை பேண வேண்டும் என்பதற்கும் (23%), நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தலுக்கும் (15%) வழங்கப்பட்ட பதில்கள் ஆச்சரியமானவையாக இருக்கவில்லை.




உரு 6: நகர சபைக்கு நீங்கள் சொல்ல விரும்பும் தனிப்பட்ட இலக்குகள்




உரு 7: நகரசபைக்கு நீங்கள் சொல்ல விரும்பும் தனிப்பட்ட இலக்குகள் (விருப்பின் பேரில்)

## 4.5 மன்னாரின் நடவடிக்கைகள் - நாம் அதனை எவ்வாறு யதார்த்தமாக்குவது?

மன்னாரின் மறுமலர்ச்சி 2022 நடவடிக்கைகள் பல முக்கியமான தகவல்களை சேகரித்தது. விசேடமான மற்றும் விழிப்புணர்வு மிக்க நடவடிக்கைகளின் பொதுமைப் பண்புகளை கண்டறிவதே, தொலைநோக்கு செயல்முறையின் முக்கியமான நடவடிக்கையாக உள்ளது. நகர சபையின் நடவடிக்கைக்கான மக்களின் முன்னுரிமைகளை தெளிவுபடுத்திக் கொள்வதற்கான இறுதியான முயற்சியினை இந்த பிரிவு கொண்டுள்ளது. இந்தப் பிரிவின் கடைசியில், மன்னாரின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் செயற்றிறனுடன் பங்களிக்க விரும்புகின்றார்களா என பங்குபற்றுநர்களிடம் கேட்கப்பட்டது. அத்துடன், அவர்கள் தெரிவு செய்வதற்கான பல தெரிவுகளும் முன்வைக்கப்பட்டன.

**நீங்கள் மன்னார் நகர சபையின் தலைவரானால்….**

"நீங்கள் இந்த நகர சபையின் தலைவராக இருந்தால், நடவடிக்கைக்கான மூன்று பிரதான முன்னுரிமைகள் எவை?" என்ற கேள்வி, மக்கள் தமது எண்ணம் மற்றும் இலக்கை கூர்மைப்படுத்திக் கொள்வதற்கு, அவர்களை சாரதி பொறுப்பில் வைத்துப் பார்ப்பதற்கு வினவப்பட்டது. சமுதாய அரங்கில் முன்னெடுக்கப்பட்ட பயிற்சியைப் போன்ற பயிற்சியாகவே இது காணப்பட்ட போதிலும், நகர சபைக்கான மூன்று முன்னுரிமைகளும் (வீதிகள், வடிகாலமைப்பு மற்றும் நகரத் திட்டமிடல்) மாற்றமடையாது இருந்தன. (சமுதாய அரங்கின் பட்டியலில் இருந்து 'சுகாதாரம்' என்ற பிரிவு நீக்கப்பட்டுள்ளமை, இரண்டு பெறுபேறுகளுக்கும் இடையில் நேரடியான ஒப்பீட்டில் சில சிக்கலை தோற்றுவித்துள்ளது)

| ஆய்வு பெறுபேறுகள் | சமுதாய அரங்கு பெறுபேறுகள் |
|---|---|
| 1. வீதிகள் – 22%<br>2. வடிகாலமைப்பு – 20%<br>3. நகரத் திட்டமிடல் – 13%<br>4. சுற்றுச் சூழல் பராமரிப்பு – 11%<br>5. சமூக சேவை/தன்னார்வத் தொண்டு – 11%<br>6. குப்பை – 10%<br>7. சுகாதாரம் – 4%<br>8. பொழுதுபோக்கு வசதிகள் – 3%<br>9. சமுதாய ஒற்றுமை – 2%<br>10. சுற்றுலாத் துறை – 1%<br>11. நூலகம் – 1% | 1. வடிகாலமைப்பு – 27%<br>2. நகரத் திட்டமிடல் – 21%<br>3. வீதிகள் – 14%<br>4. குப்பை – 10%<br>5. சுற்றுச் சூழல் பராமரிப்பு – 8%<br>6. நூலகம் – 8%<br>7. பொழுதுபோக்கு வசதிகள் – 4%<br>8. சமூக சேவை/தன்னார்வத் தொண்டு – 4%<br>9. சமுதாய ஒற்றுமை – 4%<br>10. சுற்றுலாத் துறை – 2%<br>11. (தெரிவுகளில் சுகாதாரம் என்பது உள்ளடக்கப்படவில்லை) |


**அட்டவணை 7: நகர சபைத் தலைவருக்கான முன்னுரிமைகள்**

இதேவகையான, முன்னர் குறிப்பிடப்பட்ட அட்டவணைகளினைப் போல், முதல் விருப்புக்கான வீதம் மூன்று மடங்காகியுள்ளது. இரண்டாவது விருப்பு இரண்டு மடங்காகியுள்ளது. முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்புக்கான பெறுமதி மாற்றமடைந்துள்ளது.




| பதில் | முதலாவது விருப்பு | | | இரண்டாவது விருப்பு | | | மூன்றாவது விருப்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அளவு | % | =% * 3 | அளவு | % | =% * 2 | அளவு | % | மொத்தம் | மொத்த அளவு |
| வீதிகள் | 42 | 28 | 84 | 22 | 16.30 | 32.59 | 16 | 17.39 | 133.98 | 22.4 |
| வடிகாலமைப்பு | 28 | 19 | 56 | 41 | 30.37 | 60.74 | 4 | 4.35 | 121.09 | 20.2 |
| நகரத் திட்டமிடல் | 13 | 8.67 | 26 | 23 | 17.04 | 34.07 | 16 | 17.39 | 77.47 | 12.9 |
| சுற்றுச் சூழல் பராமரிப்பு | 21 | 14.00 | 42 | 7 | 5.19 | 10.37 | 13 | 14.13 | 66.50 | 11.1 |
| தன்னார்வத் தொண்டு/சமூக சேவை | 10 | 6.67 | 20 | 13 | 9.63 | 19.26 | 25 | 27.17 | 66.43 | 11.1 |
| குப்பை | 18 | 12.00 | 36 | 11 | 8.15 | 16.30 | 6 | 6.52 | 58.82 | 9.8 |
| சுகாதாரம் | 8 | 5.33 | 16 | 9 | 6.67 | 13.34 | 5 | 5.43 | 24.1 | 4.0 |
| பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் கலாசார நடவடிக்கைகள் | 4 | 2.67 | 8 | 3 | 2.22 | 4.44 | 3 | 3.26 | 15.71 | 2.6 |
| சமுதாய ஒற்றுமை | 3 | 2.00 | 6 | 4 | 2.96 | 5.93 | 2 | 2.17 | 14.63 | 2.4 |
| சுற்றுலாத் துறை | 1 | 0.67 | 2 | 2 | 1.48 | 2.96 | 2 | 2.17 | 7.14 | 1.2 |
| நூலக மற்றும் நூலக சேவைகள் | 2 | 1.33 | 4 | 0 | 0.00 | 0.00 | 0 | 0.00 | 4.00 | .6 |
| மொத்தம் | 150 | 100 | | 135 | 100 | | 92 | 100 | | 100 |

அட்டவணை 8: நகர சபைத் தலைவருக்கான முன்னுரிமைகள் (விருப்பு மூலம்)




உரு 9: நகர சபைத் தலைவருக்கான முன்னுரிமைகள் (விருப்பு மூலம்)




**உரு 8: நகர சபைத் தலைவருக்கான முன்னுரிமைகள்**




**மன்னாரின் எதிர்கால அபிவிருத்தியில் பங்களிப்பு**

மன்னார் நகரத்தின் அபிவிருத்தியில் பங்களிக்க ஆர்வம் உள்ளதாக இந்த ஆய்வில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் தெரிவித்தனர். பல்வேறுபட்ட தெரிவுகளின் கீழ் பலர் தங்களுடைய பெயரை குறிப்பிட்டனர். சுற்றுச் சூழல் செயற்றிட்டங்களின் பங்களிப்பு (28%) என்பது முதல் இடத்தையும், ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இருத்தல் (21%) மற்றும் சமூக சேவைக்கான தன்னார்வத் தொண்டு (20%) அடுத்த இடங்களையும் பிடித்தன. சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் (11%) மற்றும் கலாசார நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதற்கு நகர சபைக்கு உதவுதல் (8%) என்பன மன்னார் நகரின் அபிவிருத்தியில் முக்கியமான பங்கினை வகிப்பதற்கு மன்னார் மக்கள் ஆர்வமாக உள்ளமையை வெளிப்படுத்துகின்றது.

| பதில் | அளவு | வீதம் |
|---|---|---|
| சுற்றுச் சூழல் செயற்றிட்டங்கள் | 124 | 28.25 |
| ஆலோசனைக் குழுக்கள் | 93 | 21.18 |
| சமூக சேவை தன்னார்வத் தொண்டு | 86 | 19.59 |
| சிரமதானம் | 48 | 10.93 |
| கலாசார நிக்ழவுகள் | 36 | 8.20 |
| தொழில் நுணுக்கம் வழங்கல் | 24 | 5.47 |
| கைவிடப்பட்ட விலங்குகளை பேணல் | 19 | 4.33 |
| வேறு | 9 | 2.05 |
| மொத்தம் | 439 | 100.00 |

**அட்டவணை 9: MM2022 தொடர் கவனிப்பு நிகழ்ச்சியில் இணைதல்**




**உரு 9: MM2022 தொடர் கவனிப்பு நிகழ்ச்சியில் இணைதல்**




BEACH
FACTORYS

## தொலைநோக்கு திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்குப் பின்னர்

2011, டிசம்பர் மாதம் 10ஆம் திகதி, சனிக்கிழமை, மன்னார் நகர சபையில் தொடர் கவனிப்பு கூட்டம் நடைபெற்றது. உப தலைவர், நகர சபை உறுப்பினர்கள், நகர குடியிருப்பாளர்கள் உள்ளடங்கலாக 40 பேர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். மன்னாரின் மறுமலர்ச்சி 2022 செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலில், நகர சபைக்கு உதவும் குழுக்களில் அங்கம் வகிப்பதற்கு அவர்கள் விருப்பம் வெளியிட்டனர். எட்டு MM2022 உப குழுக்களை அமைத்தல் தொடர்பில் நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன. போலி செயற்பாடுகளை தவிர்ப்பதற்கு, நகர சபை சட்டத்திற்கு அமைவாக நகர சபையின் முறைசார் குழுக்களாக சில குழுக்களை நியமிப்பது தொடர்பில் நகர சபை அக்கறை செலுத்தியது. நகர சபை உறுப்பினரின் தலைமையின் கீழ் பின்வரும் ஆறு குழுக்களை உருவாக்குதல் தொடர்பில் மன்னார் நகர சபைக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது:

1. நகரத் திட்டமிடல் (மாநகர சேவைகள் மற்றும் பொது வசதிகள் உள்ளடங்கலாக)
2. சுற்றுச் சூழல் ஸ்திரத் தன்மை
3. சமுதாய நிகழ்ச்சிகள்
4. சுற்றுலாத் துறை அபிவிருத்தி
5. மகளிர் அபிவிருத்தி
6. நிதி

எஞ்சிய இரண்டு குழுக்களுக்குமான தலைவர்கள் நகர சபைக்கு வெளியில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். இருப்பினும், இந்த இரண்டு குழுக்களும், ஏனைய ஆறு குழுக்களின் பங்காளித்துவத்துடன் செயற்படும். அவை பின்வருமாறு:

7. மேலதிக கல்வி
8. வர்த்தக அபிவிருத்தி



**நகர சபையின் செயற்பாடுகள்**

1. ஒவ்வொரு நகரத்திற்கும் நியமிக்கப்பட்ட நகர சபையானது, இந்த சட்டத்தின் மூலம் அல்லது வேறு எழுதப்பட்ட சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு உட்பட்டது. உள்ளுராட்சி அதிகாரம் என்ற வகையில் நகரத்தின் நிர்வாக எல்லைக்குள் மக்களின் மற்றும் நகரத்தின் சௌகரியங்களுக்கான பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுவழிகள், மற்றும் பொதுவாக சௌகரியம், வசதி மற்றும் நலன் என்பவற்றின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு என அனைத்து விடயங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் என அனைத்து விடயங்களும், விதிமுறைகளுக்கு உட்பட்டது. (நகர சபை கட்டளைச் சட்டங்கள், அத்தியாயம் 25, பக்கம் 2, 1988)

29. (1) நகர சபையானது, காலத்துக்கு காலம், சபையின் அதிகாரங்கள், கடமைகள் அல்லது பொறுப்புக்கள், அல்லது நகர சபையின் அக்கறைக்குட்பட்ட வேறு விடயங்கள், தொடர்பில் குறிப்புதவிக்கு நகர சபைக்கும் ஆலோசனை வழங்குதல் என்ற நோக்குடன், நகர சபையின் உறுப்பினர்களைக் கொண்ட அல்லது பகுதியளவில் நகர சபையின் உறுப்பினர்களைக் கொண்ட மற்றும் பகுதியளவில் நகரத்தில் வதிபவர்களைக் கொண்ட குழுக்களை நியமிக்கலாம் மற்றும் காலத்துக்கு காலம், தமது அதிகாரங்கள் அல்லது வகிபாகங்களை கடன் பெறுவதற்கு, விகிதம் விதித்து, அல்லது வரி விதிப்பதற்கு பயன்படுத்தும் குழுக்கள் தவிர்ந்த தேவைகளுக்கு அவ்வாறான அறிவுறுத்தல்கள் அல்லது சூழ்நிலைகள் தீர்மானிக்கப்படலாம்[8].



[8] நகர சபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 25, பக்கம் 9, 1988

**நடவடிக்கைகளுக்கு நெருக்கமாதல்**

இந்த கூட்டத்தின் போது, தமது ஆர்வத்தின் அடிப்படையில் பங்குபற்றுநர்கள் குழுக்களை தெரிவு செய்தனர். அடையாளம் காணப்பட்ட மற்றையவர்கள் குழுக்களில் இணைவதற்கு அழைக்கப்பட்டனர். அதன் பின்னர் ஒவ்வொரு பிரிவுக்கும் பொருத்தமான உபாயங்களை கண்டறிவதற்கு ஆரம்பித்தனர். 2012ஆம் ஆண்டு ஜனவரி ஆரம்பத்தில் தொடர் கவனிப்பு கூட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது. இதன் போது, மன்னாரின் மறுமலர்ச்சி 2022 அறிக்கையில் கண்டறியப்பட்ட விடயங்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

குழுக்களில் கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

**குழு 1: நகரத் திட்டமிடல்**

- மன்னாருக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து நகரத் திட்ட வரைபை பெறல்.
- வீடமைப்பு தொகுதிகள் மற்றும் தொடர்மாடிக் கட்டடங்கள் குறித்து கவனம் செலுத்தல்.
- வடிகால் மற்றும் கழிவுநீர் திட்டங்களை நவீனமயப்படுத்தல்
- பாதுகாப்பான குடிநீர் (கல்சியம் நீக்கல் குறித்து கவனம் செலுத்தல்)
- நன்கு திட்டமிடப்பட்ட வடிகால் திட்டம்.
- கடற்கரை வீதி
- இந்தியாவிலிருந்து மலிவு விலையில் மின்சாரம்
- சுற்றுவளைவுகள்

**குழு 2: சுற்றுச் சூழல் பராமரிப்பு**

- மண்ணரிப்பு
- அதிகரிக்கும் கடல் நீர் மட்டங்கள்
- குடிநீர் மற்றும் நிலக்கீழ் நீர் வளங்கள்
- பனை வளங்கள்

**குழு 3: சமுதாய நிகழ்ச்சிகள்**

- மது மற்றும் போதைப் பொருள் அடிமையாதலை அடையாளம் காணல்
- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான பிரசாரங்கள்
- உறுதியான மத/நன்னடத்தை பெறுமதிகளை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள்
- மதுபானக் கடைகளின் இடங்களை மாற்றல்
- முதியவர்களின் பராமரிப்பு தொடர்பில் அதிக கவனம்

**குழு 4: சுற்றுலாத் துறை**

- பொழுது போக்கு இடங்களை மேம்படுத்தல், உ-ம்: கடற்கரை கூடாரங்கள்
- பறவை சரணாலயம்
- பெருக்க மரத்தினை சுற்றுலாப் பகுதியாக மாற்றல்
- மன்னார் துறைமுகத்தை புனரமைத்தல்

**குழு 5: மகளிர் அபிவிருத்தி**

- சுயவேலைவாய்ப்புக்கான பயிற்சி
- கணவனை இழந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்
- புதிய தளங்களில் வருமானம் ஈட்டல்
- சிறு வர்த்தக சந்தர்ப்பங்கள்

**குழு 6: நிதி**

- இரு தரப்பினராலும் மற்றும் MM2022இனால் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்துடன் பங்காளித்துவம்
- முன்னுரிமை செயற்றிட்டங்களுக்கு மத்திய மற்றும் மாகாண அரசாங்க நிதி ஒதுக்கீடுகளை அடையாளம் காணல்
- புற அபிவிருத்தியை கவர்வதற்கான அபிவிருத்தி திட்டங்கள்
- நகர சபையின் நடப்பு வருமான அதிகரிப்பு உபாயங்களை விஸ்தரித்தல்

**குழு 7: மேலதிக கல்வி**

- தொழில்நுட்பக் கல்லூரி
- ஆங்கிலக் கல்வி பயிற்சி
- தகவல் தொழில்நுட்ப முன்னணியில் மன்னார்

**குழு 8: வர்த்தக அபிவிருத்தி**

- எதிர்கால சந்தர்ப்பங்களில் முதலீடு செய்வதற்கு புதிய சிறு வர்த்தக அபிவிருத்தி
- பெறுமதி சேர் விளைச்சல்

- சுயவேலைவாய்ப்பு
- உள்ளூர் தொழில்களுக்கான தொழில் மையத்தை மேம்படுத்தல்
- கடதாசி தொழிற்சாலை

திட்டம் கனிந்துள்ளது, அதனை நிறைவேற்றுவதே எஞ்சியுள்ளது. மன்னாரின் மறுமலர்ச்சி 2022 பரீட்சார்த்தத்தின் பெறுமதி, முடிவுகளை ஊழியர்கள் மற்றும் நகர சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் மன்னார் மக்கள் எத்தனை தூரத்திற்கு ஏற்றுக் கொள்கின்றனர், நடைமுறைப்படுத்தலில் எத்தனை அளவு ஈடுபடுகின்றனர் மற்றும் அவர்களுடைய ஒருங்கிணைந்த செயற்பாடு, மன்னார் நகர சபையை வித்தியாசமான நகரமாக மாற்றுவதற்கான முயற்சி என்பவற்றில் தங்கியுள்ளது. விருப்புக்குரிய எதிர்காலத்தை எட்டுதல் மற்றும் சிறந்த இடமாக மன்னாரினை மாற்றுதல் என்பவற்றுக்கான பல படிநிலைகளின் முதல் படியாக MM2022 செயற்றிட்டத்தின் பூர்த்தி கருதப்படுகின்றது.







பகுதி **III**

## பிற்சேர்க்கைகள்


1. மன்னாரின் மறுமலர்ச்சி 2022 சுவரொட்டி
2. செயலமர்வு மற்றும் அரங்கு: மாதிரி சித்திரங்கள் மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்கள்
3. கிராம செயலமர்வுகள் மற்றும் சமுதாய அரங்கின் முழுமையான குறிப்புக்கள்
4. மன்னாரின் மறுமலர்ச்சி 2022 ஆய்வு மற்றும் பதில்கள்


**பிற்சேர்க்கை 1**


**மன்னாரின் மறுமலர்ச்சி 2022 சுவரொட்டி**





## செயலமர்வு மற்றும் அரங்கு: மாதிரி சித்திரங்கள் மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்கள்















Group - 03
MANNAR - 2022
Big Bus Stand
Big Bund




Thurs 1 Dec. UPPUKULAM W'shop



## பிற்சேர்க்கை 3

### கிராம செயலமர்வுகள் மற்றும் சமுதாய அரங்கின் முழுமையான குறிப்புக்கள்

diaspora Lanka

# மன்னாரின் மறுமலர்ச்சி 2022

## எமது எதிர்காலத்தின் தொலைநோக்கு, எமது பாரம்பரியத்தை மீட்டெடுத்தல்

**நோக்கம்.**

சிறந்த பாரம்பரியங்களை கொண்டுள்ள, உறுதியான எதிர்காலத்தை நோக்கி விருத்தியடையும், தனித்துவமான மன்னார் மாவட்டத்தில் சாதகமான தொலைநோக்கினை விதைத்தல்.

**குறிக்கோள்கள்**

1. மன்னார் மாவட்டத்தின் எதிர்காலம் தொடர்பில் பகிரப்பட்ட சாதகமான தொலைநோக்கினை நோக்கி பங்களித்தல்
2. மாவட்டத்தின் கலாசார மற்றும் பாரம்பரியத்தின் தனித்துவத்தினை காப்பாற்றல் மற்றும் பாதுகாத்தல்
3. நிலையான சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் அஸ்திவாரங்களின் அடிப்படையில் 21ஆம் நூற்றாண்டின் உலக சூழ்நிலைக்கு ஏற்ற தளத்திற்கு மன்னாரை செதுக்குதல்.

**சவால்**

கடந்த வருடம் மன்னாரில் நடத்தப்பட்ட ஆய்விலிருந்து, மக்கள் எதிர்காலம் குறித்து உறுதியற்ற தன்மையுடன் இருப்பதும், மக்கள் தாழ்வான மனப்பான்மையுடன் இருப்பதும் கண்டறியப்பட்டது. புரிந்துக் கொள்ளக் கூடிய வகையில், இலங்கையில் இருந்து தனியானதாக அபிவிருத்தி செய்யப்படும் வழமையான பயிற்சிகள் சார்ந்ததாக தப்பித்தல் மற்றும் மீள்கட்டுமாண சமுதாய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. மன்னாருக்கான பிரதான சவாலாக இருப்பது, கடந்த கால இன்னல்களை கடந்து, உலகமயமான 21ஆம் நூற்றாண்டு சூழ்நிலைக்கான எதிர்கால சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகும்.

மன்னாருக்கு, பல திட்டங்கள் வரிசையில் காத்திருக்கின்றன. இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான கப்பல் சேவையை மீள ஆரம்பித்தல், தலைநகருடனான மாவட்டத்தின் தொடர்பை நெருக்கமாக்கும் கொழும்பில் இருந்து மன்னாருக்கான கரையோர வீதி நிர்மாணம், இந்தியாவுடன் இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வு, தன்னிறைவு சக்திக்கு காற்றாலைகள், பறவைகள் சரணாலயம் மற்றும் விவசாயத்திலும், கால்நடை அபிவிருத்தியிலும் அதிகரித்த முக்கியத்துவம் என்பவற்றை சிறப்பாக குறிப்பிடலாம். பொது மற்றும் தனியார் துறையினர் இந்த தொலைநோக்கினை புரிந்து கொண்டால் மன்னார் தம்மை திடமானதாக, துடிப்பானதாக, கவர்ச்சிகரமானதாக, வளம் நிறைந்த சமூகமாக வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் வழங்கும்.

முரண்பாட்டுக்கு பின்னரான இந்த காலத்தில், மாவட்டத்தின் நீண்ட கால சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் அபிவிருத்திக்கான அணுகுமுறையுடன், இந்த சமுதாயம் மீளசிந்திப்பதற்கான, மறுசீரமைக்கும் மற்றும் மீளமைக்கும் சந்தர்ப்பங்கள் பல உள்ளன. பயனுறுதி மிக்க நிலப் பயன்பாடு, பயனுறுதி மிக்க பொதுப் போக்குவரத்து, பயனுறுதி மிக்க வளப் பயன்பாடு, குறைந்த மாசு மற்றும் கழிவு, இயற்கை முறைகளை மீளமைத்தல், பெற்றுக் கொள்ளக் கூடிய வீடமைப்பு மற்றும் சுத்தமான வாழ்க்கைச் சூழல், ஆரோக்கியமான சமூகச் சூழல், உறுதியான பொருளாதாரம், சிவில் பங்குபற்றல் மற்றும் உள்ளூர் கலாசாரம் மற்றும் அறிவு பாதுகாப்பு

என்பவற்றின் மூலம் இதனை எட்டலாம். இந்த நிலையில், புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் இலங்கையில் வசிப்பவர்கள் என இரு தரப்பினருக்கும் நிறைவேற்றுவதற்கு பெறுமதி மிக்க மற்றும் ஆக்கப்பூர்வமான வகிபாகம் உள்ளது.

**சமுதாயங்களை ஈடுபடுத்தல்**

தமது இடம் தொடர்பில் மன்னார் மக்கள் மதிப்பது என்ன? பௌதீக ரீதியாக, சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக மற்றும் சுற்றுச் சூழல் ரீதியாக மன்னார் எவ்வாறு இருக்க வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்? கண்டறிவதற்கு, எதிர்காலத்திற்கான பொதுவான தொலைநோக்கினை உருவாக்குவதற்கான பல்வேறு வழிகள் தொடர்பில் குடியிருப்பாளர்களுடன் கலந்தாய்வு செய்யப்பட்டது. இன்றிலிருந்து 10 வருடங்களில் மன்னார் எவ்வாறு இருக்கும் என உள்ளூர் மக்கள் சிந்திப்பதற்கு சமுதாய செயலமர்வுகள், 3 நிமிட வீடியோ தொகுப்புக்கள், சித்திரங்கள், ஆய்வுகள் மற்றும் வேறு ஆக்கப்பூர்வமான கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

**மாதிரி கேள்விகள்:**

- மன்னார் தொடர்பில் நீங்கள் விரும்பும் மூன்று விடயங்கள் எவை?
- மன்னாரில் உள்ள எந்த தனித்துவமான அம்சத்தை பாதுகாக்க நீங்கள் விரும்புகின்றீர்கள்?
- மன்னாரை உண்மையாக முன்னேற்றக் கூடிய மூன்று விடயங்கள் எவை?
- நகருக்கு வரும் விருந்தினர்களிடம் இருந்து அப்புறப்படுத்த நீங்கள் விரும்பும் 3 இடங்களினை பெயரிடுக.
- விருந்தினரை அழைத்துச் செல்வதனை தவிர்க்க விரும்பும் 2 இடங்களினை பெயரிடுக.

**சிவில் பங்களிப்பை தூண்டிவிடல்.**

ஏனைய உலக நாடுகளும் இதேபோன்ற தொலைநோக்கு செயல்முறைகளை முன்னெடுத்துள்ளன. அத்துடன், செயற்றிறன் மிக்க மக்கள், பெறுமதி மிக்க சிவில் பங்களிப்பை வழங்கல் மற்றும் சமுதாயத்தின் ஆதரவுடன் சிறந்த ஒருங்கிணைத்தல் திட்டமிடல் வெளியீடுகளுடன் அதிகாரிகள் ஆகிய இரண்டு வழிகளிலும் பயனையும் பெற்றுள்ளன. இவ்வாறான செயல்முறைகள் தமது நிலம் தொடர்பில் நம்பிக்கை மற்றும் பக்தியை தோற்றுவிக்கக் கூடிய சமுதாய உரையாடலுடன் ஆரம்பிக்கின்றது. குடியிருப்பாளர்களிடம் இருந்து பெறப்பட்ட மதிப்பான மற்றும் சாதகமான தகவல்கள் நகர சபையின் குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் உள்வாங்கப்படும்.

**2011 நிகழ்ச்சி**

| திகதி/நேரம் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 29, நவம்பர்,<br>செவ்வாய்க்கிழமை<br>பி.ப 2.30 – 5.00 | கிராம செயலமர்வு #1<br>பனங்கட்டிக்கொட்டு | புனித செபஸ்தியன் கிறிஸ்தவ தேவலாய மண்டபம் |
| 30, நவம்பர்,<br>புதன்கிழமை<br>பி.ப 2.30 – 5.00 | கிராம செயலமர்வு #2<br>பள்ளிமுனை | மறுமலர்ச்சி சமுதாய மண்டபம், பள்ளிமுனை |
| 01, டிசம்பர்,<br>வியாழக்கிழமை<br>பி.ப 2.30 – 5.00 | கிராம செயலமர்வு #3<br>உப்புக்குளம் | RDS கட்டடம், பள்ளிமுனை வீதி |
| 02, டிசம்பர்,<br>வெள்ளிக்கிழமை<br>பி.ப 3.00 – 5.00 | வளவாளர்களுக்கான விளக்க கூட்டம் | பிரதேச செயலாளர் அலுவலகம் |
| 03, டிசம்பர்,<br>சனிக்கிழமை<br>மு.ப 9.00 – பி.ப 1.30 | மன்னாரின் மறுமலர்ச்சி 2022<br>சமுதாய அரங்கு | நகர மண்டபம் |
| 10, டிசம்பர்,<br>சனிக்கிழமை<br>மு.ப 10.00 – பி.ப 12.00 | கிராம செயலமர்வு #4<br>பெட்டா மற்றும் சின்னக்கடை | பெட்டா சமுதாய நிலையம் |
| 10, டிசம்பர்,<br>சனிக்கிழமை<br>பி.ப 3.00 – 5.00 | மன்னாரின் மறுமலர்ச்சி 2022<br>குழுக் கூட்டம் | நகர சபை மன்னார் |

# கிராம செயலமர்வுகள்

**குறிக்கோள்கள்: :**

1. அடுத்த பத்து வருடங்களுக்கு மன்னாருக்கான மக்களின் நோக்கத்தினை அடையாளம் காணல்
2. நகர சபையின் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு பரந்த வழிகாட்டலை வழங்கல்

| நேரம் | நடவடிக்கை மற்றும் நபர்களின் பொறுப்பு | யார் | வளங்கள் |
|---|---|---|---|
| பி.ப 2.30 | வருகை மற்றும் பதிவு | இளைஞர்கள் | பதிவு தாள்கள்<br>பேனை<br>கமரா |
| பி.ப 2.45 | அறிமுகம்<br>• GS இன் வரவேற்பு<br>• செயலமர்வின் நோக்கம்<br>• டயஸ்போரா லங்கா மற்றும் ஜெரமிக்கான அறிமுகம்<br>• ஜெரமி | GS<br>திரு. குருஸ்<br>கமல்<br>ஜெரமி | மன்னாரின் மறுமலர்ச்சி பதாகை |
| பி.ப 3.00 | கே: அடுத்த பத்து வருடங்களில் மன்னாருக்கு என்ன நடக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?<br>• மன்னாருக்கான மற்றவர்களின் நிகழ்ச்சி நிரல்?<br>• மன்னாருக்கான உங்களுடைய நிகழ்ச்சி நிரல்? | ஜெரமி<br>கமல் - உரைபெயர்ப்பாளர்<br>இளம் நபர் – எழுத்தர் | நகர் விளக்கப்படத் தாள், குறிப்பிகள்<br>புளுடெக் |
| பி.ப 3.30 | கே: அடுத்த பத்து வருடங்களில் மன்னாரில் எது நடப்பதனை பார்ப்பதற்கு நீங்கள் விரும்புகின்றீர்கள்?<br>• அது எவ்வாறிருக்கும்? (பௌதீக)<br>• மக்களின் ஒவ்வொருவருக்கும் இடையிலான உறவு எவ்வாறிருக்கும்? (சமூக)<br>• மக்கள் என்ன செய்வார்கள்? (பொருளாதார)<br>• இயற்கை சூழல் குறித்து மக்கள் என்ன நினைப்பார்கள் (சுற்றுச் சூழல்)<br>• எமக்காக எமது தலைவர்கள் எவ்வாறு செயற்படுவர்? (அரசியல்) | ஜெரமி<br>கமல் - உரைபெயர்ப்பாளர் | |
| பி.ப 3.45 | மன்னாரின் நிழற்பட அச்சுவரைபு<br>• சமுதாயங்களின் குழுச் செயற்பாடு 5 பிரிவுகள் - ஒவ்வொரு பங்குபற்றுநரையும் 1-5 இலக்கமிடல்<br>• நாடகம்: நகர சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொரு குழுவுக்கும் நிகழ்ச்சி பிரிவு வழங்கப்பட்டது (பௌதீக, சமூக, பொருளாதார, சுற்றுச் சூழல் மற்றும் அரசியல்) மற்றும் எதிர்வரும் தேர்தலுக்கான திட்டத்தை வடிவமைத்தல்<br>• மன்னாரின் நிழற்பட அச்சுவரைபை பங்குபற்றுநர்கள் வரைதல் | ஜெரமி<br>கமல் - உரைபெயர்ப்பாளர் | நகர் விளக்கப்படத் தாள்<br>நிற குறிப்பிகள்<br>புளுடெக்<br>சிற்றுண்டி<br>குளிர்பானம்<br>குப்பைத் தொட்டி |
| பி.ப 4.15 | குழு சமர்ப்பணங்கள்<br>• ஒவ்வொரு குழுவும் சமர்ப்பிப்பவரை பிரேரிக்கும்<br>• குழு சமர்ப்பணங்கள் | கமல்<br>சமர்ப்பிப்பவர் | புளுடெக் |
| பி.ப 4.45 | நிறைவு<br>• UC மற்றும் GSஇன் நிறைவு உரைகள்<br>• சனிக்கிழமை சமுதாய அரங்கில் பங்குபற்றுவதற்கான அழைப்பு | UC பிரதிநிதி<br>GS<br>கமல்<br>ஜெரமி | |

**கிராம செயலமர்வு – பனங்கட்டிக்கொட்டு**

**கே 1:** அடுத்த பத்து வருடங்களில் மன்னாருக்கு என்ன நடக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

- மன்னா நகரமாக மாறும்
- எண்ணெய் அகழ்வு மீன்பிடி மற்றும் கடலட்டை வர்த்தகத்தில் தீவிர கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும், அனுமதிப்பத்திரங்களுக்கான பகுதியை சிக்கலாக்கும்
- மன்னாரின் வெளித்தோற்றம் அழகாக காட்சியளிக்கும், ஆனால் மக்கள் பாதிக்கப்பட்டு இருப்பார்கள்
- நான்காயிரம் அடி ஆழத்திற்கு பெற்றோலிய குதங்களின் அகழ்வு மீன்பிடிக்கு பாதிப்பை ஏற்படுத்தும். மன்னார் தீவு மறைந்து போகலாம்
- அதிகரிக்கும் கடல் நீர் மட்டம் நாம் இங்கிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும்.
- பத்து வருடங்களின் பின்னர் நாம் அடிமைகளைப் போல் உணர்வோம். இன்றைப் போலவே இன்னொருவரின் கட்டுப்பாட்டின் கீழ் நாம் இருப்போம். யுத்தம் நிறைவடைந்த போதும் நமக்கு சுதந்திரம் இல்லை.
- மன்னார் நகரம் சிறப்பாக இருக்கும். ஆனால் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அழிந்து போகும்.
- நீர் பற்றாக்குறை மற்றும் மோசமான ஆரோக்கிய முகாமைத்துவம் காணப்படும். வெள்ளநீர், மோசமான வீதிகள் மற்றும் வடிகாலமைப்பு, மின்சாரம் இன்றி நகரம் மோசமாக காட்சியளிக்கும்.
- சுற்றுலாத் துறையின் காரணமாக உள்ளூர் கலாசாரம் மற்றும் பாரம்பரியம் அழியும்.
- சிறந்த ஒழுங்கைகள் மற்றும் வீதிகளை நாம் அமைப்போம். ஆனால், வீதி நாய்கள், கழுதைகள், மாடுகள் குறித்து நாம் அக்கறை செலுத்த மாட்டோம்.
- மன்னார் சுத்தமின்றி, அனைத்தும் சீர்குலைந்த நகரமாக இருக்கும்.
- அதிக இயற்கை அனர்த்தங்கள் இடம்பெறும். வசதிகள் மற்றும் கட்டடங்கள் அமைக்கப்படும் போது இந்த அனர்த்தங்கள் குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை. இயற்கை அனர்த்தங்களுக்கு முன்னாயத்தம் இன்மை.
- இந்த விடயங்கள் சிலவற்றை நாம் கவனத்தில் கொண்டால், ஏதாவது செய்யுங்கள். அப்போது நல்லது நிகழும்.
- தொழிற்சாலைகளில் இருந்து அதிக வேலைவாய்ப்பு என்பது சாதகமான விடயம்.
- நாம் ஏதும் செய்தால் நல்லது நிகழும்.

**கே 2: அடுத்த பத்து வருடங்களில் மன்னாரில் என்ன நடக்க வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

**குழு 1**

- கல் அணைகள் கடல் மட்டம் அதிகரிப்பதனை குறைக்கும். பொருத்தமான இடங்களில் மணல் அகழ்வு. இதன் மூலம் மண்ணரிப்பை தடுக்கலாம்.
- அலையின் வேகத்தை தணிப்பதற்கு கரையோரங்களில் கற்கள் இடல்.
- சவுத் பார், கீரி மற்றும் தாழ்வுப்பாடு பகுதியில் மீன்பிடி துறைமுகங்கள்.
- ரயில்வே நிலையத்திற்கு புதிய பாலத்திலிருந்து படகு பகுதி
- பாலத்திற்கு அருகில் உள்ள நிலத்தில் சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம்
- நவீன அரங்கு
- பனங்கட்டிகொட்டுவில் புதிய மீனவர் வீடமைப்பு தொகுதி, தற்போது கூடாரங்கள் அசுத்தமாக மற்றும் பார்க்க சகிக்க முடியாத நிலையில் உள்ளது.
- கைத்தொழில் பேட்டை
- மாற்று சக்தி நிலையம்
- நவீன அவசர சிகிச்சை வைத்தியசாலை: தற்போது அவசர சிகிச்சைக்கு வவுனியாவுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். சிலர் செல்லும் வழியில் இறந்து விடுகின்றனர்.
- வளர்ச்சியடைந்த கடலுணவு தொழில்
- சுற்றுலாப் பயணிகள் உணவு விடுதி
- நவீன சந்தை கடைத்தொகுதி

**குழு 2**

- வேறுபட்ட நம்பிக்கைகளைக் கொண்ட தேவலாயம்
- மீன்பிடி துறைமுகம்
- ஏற்றுக் கொள்ளக் கூடிய வீடமைப்பு
- ஸ்டார் உணவு விடுதிகள்
- சிறுவர் பூங்காக்கள்
- குளிரூட்டப்பட்ட வசதி மற்றும் சிறந்த ஒலியமைப்புடன் நவீன DTX திரையரங்குகள்
- நவீன வைத்தியசாலை
- கடல் உள்ளே வராது தடுப்பதற்கு கல் சுவர்கள்

- வீதியோரங்களில் மரங்கள்
- வீதி விளக்குகள்
- நிலக்கீழ் மின்சார வயர்கள்
- தொழில்நுட்ப வசதிகளுடன் நவீன ரயில்வே மற்றும் பேருந்து சேவைகள்
- நவீனமய வர்த்தகங்கள்
- விரிவாக்கப்பட்ட, நவீனமயப்படுத்தப்பட்ட பனை தொழில்

குழு 3

- சவுத்பாரில் திருத்தப்பட்ட மன்னார் துறைமுகம் மற்றும் மீன்பிடி துறைமுகம்
- முறையான குளிரூட்டி அறைகள் மற்றும் மீன் சேகரிப்பு நிலையங்களுடன் பாரிய மற்றும் நவீன தொழில்நுட்ப மீன் சந்தை (வாடி வீடுகள்)
- அதிகரிக்கும் கடல் மட்டங்களை தடுப்பதற்கு கல் சுவர்கள்
- மரங்கள் மற்றும் பூச்செடிகளுடன் பூங்காக்கள்
- பாலத்திற்கு அருகில் சுற்றுலா விடுதி
- நவீன தொழில் நுட்ப சந்தை
- குறிப்பிடத்தக்க வர்த்தக எல்லை – வன்பொருள், நகை, மின்சாரம்
- சுற்று வளைவில், மணிக்கூட்டு கோபுரம்
- மூன்று அடுக்கு வைத்தியசாலை
- வளரும் புடவைத் தொழிற்சாலை
- பாரிய நகர சபை கட்டடத் தொகுதி
- தனிப்பட்ட எல்லைக்குள் அரச அலுவலகங்கள் அமைவு
- பரவலாக்கப்பட்ட நவீன பஸ் சேவை மற்றும் நிலையம்
- பாரிய படகுகள் மற்றும் மீன்பிடிக் கப்பல்
- தள்ளாடி இராணுவ முகாமுக்குப் பதிலாக தள்ளாடி விமான நிலையம்

குழு 4

- அனைத்து அரசாங்க அலுவலகங்கள் மற்றும் வசதிகள் ஒரே எல்லைக்குள்
- தனியார் பேருந்துகள், அரச பேருந்துகள், முச்சக்கர வண்டிகள் என்பனவற்றிற்கு பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகில் நவீன போக்குவரத்து மையம்
- சிறந்த உணவு விடுதிகள், கடற்கரை விடுதிகள் மற்றும் உணவு விடுதிகள் உள்ளடங்கலாக கவர்ச்சிகரமாக சுற்றுலா வசதிகள்
- நிலக்கீழ் வடிகாலமைப்பு மற்றும் கழிவுநீர் காணுடன் மீள்வடிவமைக்கப்பட்ட நகரம். புதிய மீன் சந்தை, துறைமுகம், மணிக்கூட்டு கோபுரம், பாரிய விளையாட்டு அரங்கு, சிறுவர் பூங்காக்கள், நவீன பொது வைத்தியசாலை மற்றும் பயனுறுதி மிக்க ரயில் முறை.
- நவீன தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் நன்கு வசதியுடன் விஞ்ஞான ஆய்வுகூடம்

குழு 5

- அதிகளவான மரங்கள் மற்றும் வீதி விளக்குகள்
- அனைவருக்கும் நிரந்த வீடமைப்பு
- நவீன வைத்தியசாலை
- தொழில்நுட்ப பயிற்சி கல்லூரி
- உள்ளூர் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு படகு வசதிகள்
- நவீனமயமான துறைமுகம்
- சிறந்த தரத்தில் தரமான உணவு விடுதிகள்
- சிறுவர் பூங்காக்கள்
- நீச்சல் தடாகம்
- மணிக்கூட்டு கோபுரம்
- நவீனமயமான பேருந்து நிலையம்
- மீன் பண்ணைகள் மற்றும் உப்பில் இருந்து அதிகரித்த ஜிப்சம் உற்பத்தி

**கிராமச் செயலமர்வு – பள்ளிமுனை**

**கே 1:** அடுத்த பத்து வருடங்களில் மன்னாருக்கு என்ன நடக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

- கல்வி மற்றும் கல்வி வசதிகளில் மேம்பாடுகள்
- வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கும், அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கினால் மாத்திரமே வேலைவாய்ப்பு கிடைக்கும்

- பாரிய அபிவிருத்திகள் மற்றும் பாரிய வீடுகளின் கட்டடங்கள்
- கல் வீதிகள் சிறந்த நிலையில், தார் இடப்பட்டிருக்கும்
- இதற்கு முன்னரும் திட்டங்கள் இருந்தன. ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அடுத்த பத்து வருடங்களிலும் இதே நிலையே காணப்படும்.
- பத்து வருடங்களில் மீனவர்கள் மீது மேலும் கட்டுப்பாடுகள்.
- இந்த பகுதியில் 80%ஆனவை மீன்பிடி சமுதாயங்கள். கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளன. எமது பிரதிநிதிகள் தமிழ். பத்து வருடங்களின் சிங்களவர்கள் அல்லது தமிழர்கள் இங்கிருப்பர். அவர்களே எமது தலைவர்களாக இருப்பர்.
- பத்து வருடங்களின் பின்னர் எம்மால் தலையெடுக்க முடியாது.
- மூன்று வருடங்களுக்கு முன்னர் யுத்தம் நிறைவடைந்தது. படையினருக்கு பத்து வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. அவற்றை தொடர்ந்தும் வாடகைக்கு பெற இராணுவம் விரும்புகின்றது. ஆனால் எங்களுக்கு அவை மீண்டும் வேண்டும். அவர்கள் எமது வீட்டை சேதப்படுத்தி விடுவார்கள்.
- இராணுவ முகாமிற்கு அருகில் இருந்த பத்து வீட்டு உரிமையாளர்கள் பயம் காரணமாக தமது வீடுகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளனர். மாதாந்தம் ரூ 600 என்ற வாடகைக்கு அவர்கள் வழங்கியுள்ளனர். ஆனால், இவர்கள் வேறு நபரின் வீடுகளில் வசிப்பதற்கு அதிக வாடகை வழங்குகின்றனர். அவர்கள் அரச அதிபருக்கு தெரிவித்துள்ளனர். உத்தரவுகள் உயர் மட்டத்தில் இருந்து வருவதனால் எதுவுமே நடக்கவில்லை.
- ஏனைய கடலோரப் பகுதிகளில், கடற்படை அதிகாரிகள் மக்களை, தமது இடங்களை விற்குமாறு அழுத்தம் செலுத்துகின்றனர். இவர்களில் சில அதிகாரிகள் மன்னாரில் ஐந்து வருடங்களுக்கு அதிகம் உள்ளனர்.
- இந்த நிலையில் சென்றால் பத்து வருடங்களின் பின்னர், ஒரு மாதத்திற்கான வருமானம், ஒரு நாளுக்கே போதியதாக இருக்கும்.
- பத்து வருடங்களில் மன்னார் நீருக்குள் மூழ்கிவிடும்.

**கே 2: அடுத்த பத்து வருடங்களில் மன்னாரில் என்ன நடக்க வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

குழு 1

- முழு தீவையும் பாதுகாப்பதற்கான அணைகள்
- கடற்கரை உணவு விடுதி மற்றும் தங்குமிட விடுதிகள்
- பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி
- சவுத்பாருக்கு அருகில் மிருகக்காட்சி சாலை
- நீச்சல் தடாகம்
- சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்குமிட விடுதிகள்
- நவீன ரயில்வே நிலையம்
- பல அடுக்கு கட்டடங்கள்

குழு 2

- அனைத்து வீதிகளும் கார்பட் வீதிகள்
- கல் அணைகள் கடலிருந்து நிலத்தை பாதுகாக்கும்
- மீன்பிடி துறைமுகம், சந்தை கட்டடம் மற்றும் சர்வதேச தரத்திலான அரங்கு இருக்கும்
- புதிய வீடமைப்புத் தொகுதிகளும், கட்டடங்களும்
- தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம்
- புடவைக் கைத்தொழில், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் வேறு தொழிற்சாலைகள்
- அனைத்து நீரையும் கடலுக்கு கொண்டு செல்லும் முறையான வடிகாலமைப்பு முறை
- மன்னார் மற்றும் இந்தியாவை இணைக்கும் பாலம்

குழு 3

- தொழில் நுட்ப மீன்பிடி மற்றும் பனைத் தொழில் மற்றும் கடல் உற்பத்தி
- அனைவருக்கும் நிரந்தர வீடமைப்பு
- அனைத்துப் பகுதிகளுக்கும் நீர் விநியோகம்
- அனைத்து வீதிகளுக்கும் வீதி விளக்குகள்
- கணனிமயப்படுத்தப்பட்ட நூலகங்கள்
- கணனிமயப்படுத்தப்பட்ட அனைத்து துறைகள்
- விசேட சந்தை எல்லைகள் மற்றும் சந்தை கட்டடத் தொகுதி
- கடற்கரையை பாதுகாப்பதற்கான கல் அணைகள்

குழு 4

- அனைத்து கலாசாரங்கள் மற்றும் வர்த்தகங்களுக்கு மத்தியில் ஒற்றுமை

- நிலத்தை பாதுகாப்பதற்கான கல் அணை
- மண்ணரிப்பை தடுப்பதற்கான மரம் நடுகை
- குளிரூட்டி சேமித்தல் வசதிகளுடன் மீன்பிடி துறைமுகம்
- ஆழ் கடல் மீன்பிடி வசதிகள்
- தோட்டமிடல் மற்றும் விளைச்சலுக்கான இடம்
- பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்கல்வி நிலையங்கள்
- நவீன வைத்தியசாலை
- வீதி அடையாளங்கள் மற்றும் பாதசாரி கடவைகள்
- சிறந்த உள்ளக வீதிகள் மற்றும் சிறந்த நீர் விநியோகம்
- நிலக்கீழ் மின்சார வயர்கள்
- நவீன நெடுஞ்சாலைகள்
- உள்ளக விமான நிலையம்

குழு 5

- அனைத்து உள்ளூர் மதங்களின் ஒற்றுமை
- அனைத்துப் பகுதிகளிலும் மீன்பிடிப்பதற்கான சுதந்திரம்
- சமுதாய பொழுதுபோக்கு மற்றும் கவர்ச்சிகரமான பூங்காப் பகுதிகள்
- சுத்தமான மற்றும் கவர்ச்சிகரமான கடல்கள்
- நீச்சல் தடாகம்
- சிறுவர் பராமரிப்பு நிலையங்கள்
- கணனிமயப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப நூலகம்
- நவீன ரயில்வே நிலையம்

**கிராமச் செயலமர்வு – உப்புக்குளம்**

**கே 1:** அடுத்த பத்து வருடங்களில் மன்னாருக்கு என்ன நடக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

- பத்து வருடங்களில் உப்புக்குளம் சிறந்த இடமாக இருக்கும்.
- கடல் நீர் நிலத்தை நோக்கி வேகமாக வருவதனால், மன்னாரின் பல பகுதிகள் நீரின் கீழ் சென்றுவிடும்.
- அரசாங்க கட்டடங்களுக்காக குடியிருப்பாளர்கள் வேறு இடங்களுக்கு நகர வேண்டும்.
- மாணவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கொழும்புக்கு இடம்பெயர்வதனால் கல்வி மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளது.
- அதிகரித்த மத முரண்பாடுகள்
- நாளாந்த வருமானம் அதிகரிக்கும் மற்றும் குடும்பங்கள் சிக்கலுக்கு தள்ளப்படும்
- மகளிர் பிரச்சினைகள் எழுப்பப்படும் - அவர்களது வாழ்வாதாரம், துஷ்பிரயோக சம்பவங்கள், இன்னபிற
- தனியார் கல்வி துறை விருத்தியடையும் மற்றும் பொது பாடசாலைகளின் தரம் வீழ்ச்சியடையும்
- மக்களின் பொருளாதார நிலைகள் மோசமாக இருப்பதனால், மன்னாரில் முதலீடு செய்வதற்கான அவர்களுடைய இயலுமை குறைவு. எனவே, வெளிநபர்கள் வந்து, முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.
- குறைவான முதலீடு காரணமாக, பணத் தேவைக்காக மக்கள் தமது பூர்வீக நிலங்களை வெளிநபர்களுக்கு அதிக விலைக்கு விற்கின்றனர்.
- உள்ளூர் மக்கள் தொகை துரிதமாக அதிகரிக்கும். இது மோசமான மருத்துவ சேவைக்கு வழி வகுக்கும்.

**கே 2: அடுத்த பத்து வருடங்களில் மன்னாரில் என்ன நடக்க வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

குழு 1

- டச்சு கோட்டையை மீளமைத்தல்
- பல் அடுக்கு வர்த்தக தொகுதியின் ஊடாக கவனத்தை அதிகரித்தல்
- ஒரே கூரையின் கீழ் அரசாங்க மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள்
- தகவல் தொழில்நுட்ப பூங்கா
- சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம் மற்றும் முறையான கால்பந்து அரங்கு
- நவீன நூலக வசதிகள்
- வீடமைப்புத் திட்டங்கள்
- சம்பந்தப்பட்ட மத அடையாளங்களுடன் சுற்று வளைவுகள்
- சுற்றுலாத் துறை அபிவிருத்தி

- உள்ளக வன்முறை

குழு 2

- வெள்ளப் பாதுகாப்புக்கான அலை முறிகள்
- தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி கல்லூரி
- ஒரே கூரையின் கீழ் அரசாங்கத் திணைக்களங்கள்
- மன்னாருக்கு நான்கு ஒழுங்கை நெடுஞ்சாலை
- சிறுவர் பூங்கா
- பல் அடுக்கு அபிவிருத்தி
- நவீன வைத்தியசாலை தொகுதி

குழு 3

- வெள்ளப்பெருக்கு ஏற்படாது தடுப்பதற்கு முழுமையான வடிகால் முறை

குழு 4

- சராசரி போக்குவரத்துடன், பரந்த வீதிகள்
- அதிகரிக்கும் கடல் மட்டத்திலிருந்து வெள்ளப்பெருக்கை தடுப்பதற்கு அலை முறிகள்
- குளிர் சேமிப்பு உள்ளடங்கலாக மீன்பிடிகள் நவீன வசதிகள்

குழு 5

- துறைமுகம்
- சந்தை
- உள்ளக விமான நிலையம்

**கிராமச் செயலமர்வு – பெட்டா மற்றும் சின்னக்கடை**

**கே 1:** அடுத்த பத்து வருடங்களில் மன்னாருக்கு என்ன நடக்கும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

- பல கட்டடங்களும், உட்கட்டமைப்பும் அதிகரிக்கும்
- வீதிகள் நன்கு பேணப்படும்.
- துரித மக்கள் தொகை வளர்ச்சி காணப்படும். மக்கள், வீதிகள் மற்றும் வசதிகளால் நகரம் நிறைந்திருக்கும்.
- அனைத்தும் கலந்திருக்கும். வீடுகளை அமைப்பதற்கு இடம் இருக்காது, எதுவுமே திட்டமிடப்பட்டிருக்காது.
- அனர்த்த அச்சுறுத்தல்கள் அதிகரிக்கும் - சூறாவளிகள், சுனாமிகள், அதிகரிக்கும் கடல் மட்டங்கள், கடல் வெள்ளங்கள் மற்றும் மழை வெள்ளங்கள் என்பன மண்ணரிப்புக்கு வழி கோலும்.
- பத்து வருடங்களுக்கு முன்னர் பாலம் இல்லை. எனவே, அதனை சிந்திக்க வேண்டும். தற்போது இங்கு பாலம் உள்ளது.
- அனைவரும் அபிவிருத்தி குறித்து கதைக்கின்றனர். ஆனால், எதுவுமே நடக்காது. மன்னாரில் கடந்த 58 வருடங்களாக வசித்த அனுபவத்தின் அடிப்படையலானது இது. எதுவுமே மாறவில்லை.
- பல அரச சார்பற்ற மற்றும் அரசாங்க அதிகாரிகள் பெட்டாவில் வசிக்கின்றனர். ஆனால், வடிகாலமைப்பு இல்லை.
- மக்கள் தொகை அதிகரிக்கும் போது, வாழ்க்கைத் தரங்கள் வீழ்ச்சியடையும்.
- வேலைவாய்ப்பின்மை. எனவே, வாழ்க்கை தரங்களை பேணுவதற்கான போராட்டம்.
- முறையான வடிகாலமைப்பு இன்மையால் ஏற்கனவே டெங்கு தாக்கம் உள்ளது. எனவே, மக்கள் தொகை அதிகரிக்கும் போது நிலைமை மேலும் மோசமடையும்.
- வெளிநாட்டு கலாசாரங்கள் வந்து எமது கலாசாரத்தை அழித்து விடும். மேற்கத்தைய கலாசாரம் எமது நன்னடத்தையை பாதிக்கும். நெட்கபேக்கள், திரைப்படங்கள், இணையத்தளம், தொலைக்காட்சி அலைவரிசைகள், ஆடைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளினால் இது இடம்பெறுகின்றது.

**கே 2: அடுத்த பத்து வருடங்களில் மன்னாரில் என்ன நடக்க வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

குழு 1

- ஆங்கில மொழி கற்றலுக்கு தொழில்நுட்பக் கல்லூரி
- பல்கலைக்கழகம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியின் கிளை
- நவீன வைத்தியசாலை
- நவீனமயப்படுத்தப்பட்ட பேருந்து நிலையம், பேருந்துகள்
- கவர்ச்சிகரமான பூங்காக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள்

- பனி, உப்பு, புடவை உள்ளடங்கலாக, மீன், நண்டுகள் மற்றும் இறால்களின் சேமிப்பு, குளிரூட்டல் என்பவற்றுக்கான பல தொழிற்சாலைகள்
- சர்வதேச மற்றும் உள்ளக விமான நிலையங்கள்
- குளங்களை மீளமைத்தல்
- பொது கட்டடங்கள் மற்றும் நிரந்தர வீடுகள்
- இலங்கை மற்றும் இந்தியாவுக்கான பாலம்
- மரங்களுடன் மன்னார் கரையோரம்

குழு 2

- கடலரிப்பை தடுப்பதற்கான கல் சுவர்கள்
- பாலத்திற்கு அருகில் சுற்றுலாப் பயணிகள் உணவு விடுதி
- மீன்பிடி துறைமுகம் என்ற நோக்கில் நகரத்திற்கு கவர்ச்சிகரமான நுழைவாயில்
- தனித்துவமான எல்லைகளுடன் சிறந்த நகரத் திட்டம் - கலாசார, வர்த்தக, சுகாதாரம், கல்வி, அரசாங்கம்
- சுத்தமான கடற்கரைகள்
- சர்வதேச தரத்தில் விளையாட்டு மைதானம்
- இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான பாலம் சந்தர்ப்பங்களை உருவாக்கும்.

குழு 3

- பாலத்திற்கான நுழைவாயில் ஓய்வெடுத்தலுக்கு உருவாக்கப்பட்டுள்ளது
- தலைமன்னாருக்கான நெடுஞ்சாலை
- தொழில்நுட்பக் கல்லூரி, ஆங்கில மொழி மூல சர்வதேச பாடசாலை
- வீதி விளக்குகள்
- பல அடுக்கு தொடர்மாடி குடியிருப்புக்கள்
- சுற்றுலாப் பயணிகள் தங்குமிடங்கள்
- அனைத்து நாடுகளையும் சேர்ந்த மக்களுக்கான மீள்குடியேற்ற தொகுதிகள்
- நவீன சந்தை
- நவீன ரயில் சேவை
- இந்தியாவுக்கான பாலம்
- கடலிருந்து நிலத்தினை பாதுகாப்பதற்கான அணை

குழு 4

- பாலத்திற்கு அருகில் ஓய்வு வசதிகள்
- கடலிலிருந்து நிலத்தை பாதுகாப்பதற்கான சுவர்கள்
- பேணப்பட்ட தேவாலய கட்டடங்கள்
- நவீன வைத்தியசாலை தொகுதி
- முதியவர் இல்லங்கள்
- சந்தை தொகுதி
- தொழிற்சாலைகள்
- பொழுதுபோக்கு பூங்காக்கள், சிறுவர் பூங்காக்கள், விளையாட்டு அரங்கு
- சுற்றுச் சூழல் பராமரிப்பு மற்றும் பல மரங்கள்
- சுற்றுலாப் பயணிகளுக்கான உணவு விடுதிகள்
- முறையாக திட்டமிடப்பட்ட நகரம்

# சமுதாய அரங்கு

### குறிக்கோள்கள்

1. அடுத்த பத்து வருடங்களுக்கு மன்னார் மக்களின் தொலைநோக்கை அடையாளம் காணல்
2. மன்னார் நகர சபையின் திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு பரந்த வழிகாட்டலை வழங்கல்.

### நடவடிக்கை 1: மன்னாரின் 'பலங்கள்' மற்றும் 'பலவீனங்களை' அடையாளம் காணல்

| | |
|---|---|
| விளக்கம் | **வள வரைபடமானது சமுதாயத்தின் வாழும் சூழலை காண்பிக்கும் - அவை இயற்கை வளங்கள்,** மக்கள் மற்றும் திறன்கள், வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு, முக்கியமான இடங்கள் |
| குறிக்கோள்கள் | • பகுதியின் பலங்கள் தொடர்பில் மேலோட்டைத்தைப் பெறுவதற்கு<br>• மக்களின் வாழ்க்கைச் சூழலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை கண்டறிதல் மற்றும் கலந்துரையாடல்<br>• வளங்களுக்கான பிரவேசம் மற்றும் கட்டுப்பாடுகளை கற்பதற்கு |
| பிரதான கேள்விகள் | **1. இயற்கை வளங்கள் (நிலம், கடல், நீர், சுற்றுச் சூழல்)**<br>• மன்னாரை உறுதியாக்கும் இயற்கை வளங்கள் எவை?<br>• யாரால் இந்த வளங்களை பயன்படுத்த முடியும், யாரால் பயன்படுத்த முடியாது?<br>• இந்த வளங்களை எவ்வாறு சிறந்த வகையில் பயன்படுத்த முடியும்?<br>• அடையாளம் காணப்பட வேண்டிய பிரதான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எவை?<br>**2. மக்கள் மற்றும் திறன் வளங்கள் (உறவுகள், சுற்றுலாத் துறை, கல்வி)**<br>• வேறுபட்ட குழுக்களுக்கு இடையிலான உறவுகள் எவ்வாறானது?<br>• சமுதாயத்தை பிரிக்கும் விடயங்கள் எவை?<br>• மன்னார் மக்கள் எவ்வாறு சிறந்த அமைதியோடு வாழ முடியும்?<br>• வெளிநபர்கள் எவ்வாறு உள்ளூர் மன்னார் மக்களால் நடத்தப்படுகின்றனர்?<br>• மன்னார் மக்கள் எவ்வாறு அவர்களது அறிவு மற்றும் திறன்களை சிறந்த வகையில் மேம்படுத்த முடியும்?<br>**3. வாழ்வாதார வளங்கள் (வருமானம், வேலைவாய்ப்பு, வர்த்தகம்)**<br>• மன்னாரின் தொழில் புரியும் மக்களின் பலங்கள் எவை?<br>• மன்னாரில் வெற்றிகரமான வர்த்தகத்தின் அம்சங்கள் எவை?<br>• யார் முன்னேறிச் செல்கின்றனர், யாரால் இயலவில்லை?<br>• வாழ்வாதாரம் மற்றும் வர்த்தக அபிவிருத்தியை முன்னேற்றுவது எது?<br>**4. கட்டப்பட்ட சுற்றுச்சூழல் வளங்கள் (கட்டடங்கள், வீதிகள், வசதிகள்)**<br>• கட்டப்பட்ட சுற்றுச்சூழலின் சாதகமான அம்சங்கள் எவை?<br>• அவற்றின் தற்போதைய நிலை என்ன?<br>• அவை எவ்வாறு மேம்படுத்தப்பட முடியும்?<br>• எந்த புதிய வசதிகள் தேவை?<br>**5. முக்கிய இடங்கள் வளங்கள் (மன்னாரை தனித்துவமாக்கும் விடயங்கள் மற்றும் இடங்கள்)**<br>• மன்னாரில் உள்ள முக்கியமான இடங்கள் மற்றும் அம்சங்கள் எவை?<br>• தற்போது, அவை தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் உள்ளனவா?<br>• யாருக்கு அதைப் பற்றி தெரியும், யாருக்குத் தெரியாது?<br>• இந்த வளங்களை எவ்வாறு முன்னேற்றுவது?<br>**6. போக்குவரத்து (தனியார் மற்றும் பொதுப் போக்குவரத்து)**<br>• மன்னாரில் மக்கள் எவ்வாறு போக்குவரத்து செய்கின்றனர்? |

| | |
|---|---|
| | • தற்போதைய போக்குவரத்து முறைகளின் சாதகமான அம்சங்கள் எவை?<br>• தற்போதைய போக்குவரத்து வழிகளின் மூலம் மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் எவை?<br>• பொதுப் போக்குவரத்தினை எவ்வாறு மேம்படுத்த முடியும்?<br><br>**7. பொழுதுபோக்கு (ஓய்வு நடவடிக்கை, விளையாட்டு, பொழுது போக்குகள்)**<br><br>• மன்னாரில் உள்ள வேறுபட்ட மக்கள் எவ்வாறு ஓய்வு பெறுவர் மற்றும் மகிழ்ந்திருப்பர்?<br>• மக்கள் தம்மை மகிழச் செய்வதற்கு ஏதேனும் பாதகமான வழிகள் உள்ளனவா?<br>• எந்த புதிய பொழுதுபோக்கு வசதிகள் தேவை?<br>• ஓய்வு எடுத்தல் மற்றும் மகிழ்தலுக்கான செலவு குறைந்த தெரிவுகள் எவை? |
| **குறிப்புக்கள்.'.** | வள வரைபடம் என்பது ஆரம்பிப்பதற்கு சிறந்த இடம். உள்ளூர் மக்களுக்கு அதனை புரிவது மிக இலகுவானது. குழு உறுப்பினர்களுக்கு இடையில் கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு அது உதவும். தகவல் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு தொடர்பான ஒருங்கிணைந்த செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு அப்பால், வள வரைபடமாக்கல் என்பதும், மக்கள் மற்றும் அவர்களது பகுதி தொடர்பில் வெளியாட்கள் பழக்கப்படுத்திக் கொள்வதற்கு பயனுள்ள கருவியாகும். ஏனெனில், அது குழு மற்றும் அவற்றின் வளங்களின் ஒட்டுமொத்த அமைப்பை வழங்குகின்றது. |
| **வசதியளித்தல்** | 1. மன்னாரிற்குள் உள்ள 'பலங்கள்' மற்றும் 'பலவீனங்களை' இந்த நடவடிக்கை கவனம் செலுத்தும்.<br>2. பங்குபற்றுநர்கள் குழுக்களாக கேள்விகளை கலந்துரையாடி 'பலங்கள்' மற்றும் 'பலவீனங்கள்' என்ற தலைப்பின் கீழ் நகர் விளக்கப்படத் தாளில் பதில்களை எழுதுதல்.<br>3. ஒருவர் தமது கருத்தை முன்வைத்த பின்னர், மற்றவர்களிடம் இணங்குகின்றார்களா, இல்லையா அல்லது வேறு எதனையும் சேர்க்க வேண்டுமா என கேட்கவும். மீண்டும், மீண்டும் வந்துள்ள அனைவரினதும் பங்களிப்பினை ஊக்குவிக்கவும்.<br>4. பத்து வருடங்களின் பின்னர் நீங்கள் எதனை பார்க்க விரும்புகின்றீர்கள் என்பதனை ஒரு தாளில் வரையவும்.<br>5. குழு இலக்கம் மற்றும் திகதியினை தாளில் குறிப்பிட மறக்க வேண்டாம்.<br>6. அமர்வு நிறைவடைவதற்கு முன்னர், பங்குபற்றுநர்களின் பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்கவும்.<br>7. மீண்டும் பாரிய குழுவுக்கு அறிக்கையிடல் - பலங்கள், பலவீனங்களை பட்டியலிடல் மற்றும் உங்களுடைய விருப்புக்குரிய எதிர்காலம் குறித்த சித்திரத்தை விளக்கவும். |

## செயற்பாடு ஒன்று பதில்கள்

(உரைபெயர்ப்புக்கான இடையூறின் காரணமாக சில குழுக்களுக்கு தகவல் பூர்த்தியாகவில்லை,)

### குழு 1: இயற்கை வளங்கள்

**வரைபடம்**

- மாலைதீவினைப் போல தீவைச் சுற்றி கற்களை வைத்து, அதிகரிக்கும் நீர் மட்டத்திலிருந்து மன்னாரை பாதுகாத்தல்.

### குழு 2: மக்கள் மற்றும் திறன்கள்

**பலங்கள்**

- பொதுவாக மக்கள் ஒரே காலத்தில் இருத்தல்
- அனைத்து துறைகளிலும் மன்னாரில் கற்றவர்கள் உள்ளனர், எனவே, இளம் தலைமுறையினருக்கு பயிற்சியளிப்பதற்கு அவர்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

**பலவீனங்கள்**

- வேறுபட்ட குழுக்களுக்கு மத்தியில் பல மோதல்கள்
- பல மதங்களுக்கு இடையிலான முரண்பாடுகள்
- அதிகளவிலான மத வெறி

**வரைபடம்**

- நன்கு வசதிகளுடன் வைத்தியசாலை தொகுதி

- இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் வேறிடத்துக்கு மாற்றல்
- மன்னார் தீவினைச் சூழ கரையோர வீதி

## குழு 3: வாழ்வாதாரம்

**பலங்கள்**

- மீன்பிடி
- தச்சுத் தொழில், துணி வெளுத்தல் மற்றும் தையல் போன்ற குடிசை தொழில்
- தேங்காய், பனை மற்றும் கள் தயாரித்தல் போன்ற வளரும் தொழில்கள்
- மன்னாரில் அதிக திறனுடைய தொழிலாளர்கள் உள்ளனர்
- அதிக வாடகை வாகனங்கள்

**பலவீனங்கள்**

- மீனவர்கள் ஆழமற்ற நீரில் அதிகளவு அக்கறை செலுத்துவதால், ஆழ்கடல் மீன்பிடி இல்லை
- வர்த்தக மக்கள் சந்தித்து, கலந்துரையாடுவதற்கு உரிய இடம் இல்லை
- தமது உரிமைத்துவத்தை உறுதி செய்வதற்கு பல கடை உரிமையாளர்களிடம் பத்திரம் இல்லை
- வேறுபட்ட பின்புலங்களை கொண்ட மீனவர்கள் மத்தியில் மோதல்
- மீன்பிடி சம்பந்தப்பட்ட நவீன மற்றும் உறுதியான முறைகள் தொடர்பில் சிறு விழிப்புணர்வு
- தொழில்நுணுக்க மேம்பாடுகள், நடப்பு அணுகுமுறைகளுடன் இணைக்கப்படாமை
- மீன்களுக்கு குளிரூட்டல் முறை இன்மை
- மீன்பிடி தொழிலுக்கு பெறுமதிசேர்வை இன்மை
- மீனவர்கள் மீதான கட்டுப்பாடுகள்
- இலங்கை கடல் பகுதியில் மீன்பிடிக்கும் இந்திய மீன்பிடிக் கப்பல்கள் தொடர்பில் நடவடிக்கைகள் இன்மை
- பல மக்கள் அரச காணிகளில் குடியேறியுள்ளனர். எனவே, இட உரிமை தொடர்பில் பல பிரச்சினைகள் உள்ளன.

**வரைபடம்**

- மன்னார் நகரம் முறையான வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

## குழு 4: கட்டப்பட்ட சூழல்

**பலங்கள்**

- நிர்மாணத் துறையில் திறன் மிக்க மனித வளங்கள்
- அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் உதவிகள்
- உறுதியான மீன்பிடி வளங்கள் மற்றும் உப்பளங்கள்
- மீன்பிடிக்கான பெறுமதி சேர்த்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உ-ம்: பேசாலையில் நண்டிறைச்சி தொழிற்சாலை
- மன்னாருக்கான நீண்ட காலத் திட்டங்கள் கோட்பாட்டில் உள்ளமை

**பலவீனங்கள்**

- புதிய கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு போதிய நிலம் இன்மை
- திட்டமிடலில் பொது மக்கள் பங்களிப்பு இன்மை
- மக்கள் அபிவிருத்தி நடவடிக்கையில் பங்களிப்பது இல்லை. உ-ம்: வீதி அகலமாக்கல்
- போதிய வடிகாலமைப்பு வசதி இன்மை
- குப்பைகளை சேமித்தல் மற்றும் சேகரித்தல் பிரச்சினை
- மீள்சுழற்சி முறை இன்மை
- வேறு இடங்களைச் சேர்ந்த பாரிய ஒப்பந்ததாரர்கள், சிறு உள்ளூர் ஒப்பந்ததாரர்களை புறம் தள்ளல்

**வரைபடம்**

- பல அடுக்கு கட்டடங்கள். உ-ம்: ஒரு மாடிக் கட்டடங்களிற்குப் பதிலாக, இரண்டிலிருந்து நான்கு வரையான மாடிக் கட்டடங்கள்.
- அதிகரிக்கும் கடல் மட்டங்களின் காரணமாக மக்கள் கடற்கரைக்கு அருகில் வசிப்பதில்லை.

.

## குழு 5: விசேட இடங்கள்

**பலங்கள்**

- மடுமாதா தேவாலய கட்டடம், கேதீஸ்வரம் கோவில், டச்சு கோட்டை, அரிப்பு அல்லிராணிக் கோட்டை மற்றும் பெருக்க மரம் என்பன சுற்றுலாப் பயணிகளை கவரும் சிறந்த இடங்கள்
- சிலவாத்துறையின் வரலாற்றுச் சிறப்பு

**பலவீனங்கள்**

- பாரிய திருவிழாக்களின் போது மதத் தலங்களில் போதில் வசதியின்மை
- முத்துக்குளித்தலுக்கு, சிலவாத்துறை வரலாற்று சிறப்பு மிக்க இடம். ஆனால், தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.
- கோட்டை ஒரு சொத்து. ஆனால், இராணுவ கட்டுப்பாடுகள் காரணமாக எவரும் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. மன்னாரின் இளைஞர்கள் அங்கு சென்றதே இல்லை.
- தள்ளாடி அதன் மூலிகை மருந்து தாவரங்களுக்கு பெயர் பெற்ற இடம். ஆனால், தற்போது அதுவும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதி.
- உப்பள விஸ்தரிப்பின் காரணமாக மக்கள் தமது வீடுகளை இழக்கின்றனர்.
- வெள்ளப்பெருக்கு சந்தர்ப்பங்களில், அரசாங்கம் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்குமாயின், ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர நேராது.

**வரைபடம்**

- பகுதியின் பலவீனங்கள் மற்றும் விடயங்கள் தொடர்பில் பதிலளிக்க அரசாங்க அதிகாரிகள் ஒன்று கூடல். தமது தீர்மானம் எடுத்தலில் அரசியல் செல்வாக்கை தவிர்த்தல்.

## குழு 7: பொழுதுபோக்கு

**பலங்கள்**

- மன்னாரில் சர்வதேச மட்டத்தில் பல சிறந்த விளையாட்டு வீரர்களும், விளையாட்டு ஆலோசர்களும் உள்ளனர்.

**பலவீனங்கள்**

- தொழில்சார் விளையாட்டு வீரர்களுக்கு போதிய பயிற்சி வசதிகள் இன்மை
- விளையாட்டு வீரர்களுக்கு போதிய மருத்துவ வசதிகள் இன்மை
- சிறந்த விளையாட்டு மைதானங்கள் இன்மை
- பொது நூலகம் செயலிழந்துள்ளது, வசதிகள் மோசமானவையாக உள்ளன. கிராமப்புறங்களில் நூலகம் இல்லை
- போதிய பூங்காக்கள் இன்மை
- பெண்களுக்கு அதிக தையல் இயந்திரங்கள் தேவை

## குழு 8: இயற்கை வளங்கள்

**பலங்கள்**

- முருகைக்கற்பாறை
- கடல் வளங்கள்

**பலவீனங்கள்**

- மீன்பிடிக்கு உள்ளூர் முறைகள் சிறந்ததாக இல்லை
- வேறிடங்களைச் சேர்ந்த மீனவர்கள் மன்னார் பகுதிக்குள் ஆக்கிரமிக்கின்றனர்
- மீனவ குடும்பங்களுக்கு மத்தியில் வரவுசெலவுத் திட்டமிடல் அல்லது வருமான திட்டமிடல் இல்லை. எனவே, வருமானம் போதியதாக இல்லை
- அதிகரிக்கும் நீர் மட்டமானது, மன்னார் மக்களுக்கும், அவர்களுடைய வாழ்க்கை முறையிலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது
- குடிநீர் பற்றாக்குறை
- மோசமான நீர் வடிகாலமைப்பு காரணமாக நீர் தேங்கல் மற்றும் நுளம்பு பெருகும் பகுதிகள் தொடர்ந்தும் உள்ளன
- மக்கள் எந்த முயற்சியையும் ஆரம்பிப்பதில்லை
- நாய்கள் மற்றும் கழுதைகள் உள்ளடங்கலாக பல வீதி மிருகங்கள், இடத்தை அசுத்தமாகவும், அபாயகரமானதாகவும் மாற்றுகின்றன.

- குப்பை சேகரித்தல் மற்றும் சேமித்தல் சிக்கலாக உள்ளது
- மக்களுக்கு சிறிது சுற்றுச் சூழல் விழிப்புணர்ச்சி உண்டு

**வரைபடம்**

- மன்னார் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி இல்லை
- நுளம்புகள் இல்லை
- அழகான இயற்கை சூழல்

### குழு 9: மக்கள் மற்றும் திறன்கள்

**பலங்கள்**

- ஒரே மொழியென்பதால், தொடர்பாடல் இலகு
- மேல்மட்டத்தில் மதங்கள் மத்தியில் நெருக்கமான தொடர்பு
- தனித்துவமான மற்றும் குறிப்பிடத்தக்க வரலாற்றுத் தளங்கள்
- சிறந்த மதப் பயிற்சி காரணமான நன்னடத்தை
- நகரப் பகுதியில் எழுத்தறிவு வீதம் அதிகம்

**பலவீனங்கள்**

- புதிய விடயங்களை கற்பதில் மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை
- மக்களின் அமைதியான வாழ்க்கையில் அரசியல் குழப்பம் விளைவிக்கின்றது
- வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் குறைவு. எனவே, மக்கள், விசேடமாக கல்வி கற்ற மக்கள் மன்னாரை விட்டு வேறிடங்களுக்கு இடம்பெயர்கின்றனர்
- மத சமுதாயங்களுக்கு இடையில் மோதல்
- சுற்றுலாப் பயணிகளுக்கு போதிய வசதிகள் இன்மை
- சிங்களம், ஆங்கிலம் போன்ற ஏனைய மொழிகளை கற்பதற்கு மக்கள் ஆர்வமின்மை

**வரைபடம்**

- கலாசார ரீதியாக கூருணர்வு மிக்க சுற்றுலா வசதிகள் அறிமுகம்
- வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்கள் மேம்படுத்தப்படல்
- போதிய எண்ணிக்கையில் விருந்தினர் விடுதிகள்
- அனைவரும் ஆங்கிலம் பேசல்
- நவீன நூலக வசதி
- இளைஞர்கள் அர்த்தமுள்ள பணியினை கொண்டுள்ளனர்

### குழு 10: வாழ்வாதாரம்

**பலங்கள்**

- உயர்வான கடல் வளங்கள்
- பனை உற்பத்திக்கான இயலுமைகள்
- மன்னார் நகரத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் அரசாங்க சேவைகள்

**பலவீனங்கள்**

- மீனவர்களுக்கான அனுமதி பத்திர முறை உற்பத்தியின் பயனுறுதித் தன்மை மற்றும் தரத்தினை மட்டுப்படுத்தியுள்ளது
- அரசியல் இடையீடு சமுதாயத்தை பிரித்துள்ளது
- முக்கியமான மீன்பிடி உபகரணங்களை இறக்குமதி செய்வது தொடர்பான கட்டுப்பாடுகள், மீனவர்களுக்கு நியாயமற்ற விளைவை ஏற்படுத்துகின்றது
- மீன்பிடிக்கான உறுதியான அணுகுமுறைகள் தொடர்பில் மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வு குறைவு
- மன்னாரின் உயர்கல்வி இல்லை. எனவே, இளைஞர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புக்குச் செல்கின்றனர்
- தொழில்சார் பயிற்சி நிலையங்களின் பற்றாக்குறை

**வரைபடம்**

- பிரதான வீதியில் முறையான சந்தைத் தொகுதி
- பனை உற்பத்திகளுக்கு பயிற்சி நிலையம்
- விஸ்தரிக்கப்பட்ட உப்பள தொழில்
- கரையோரப் பகுதிகளில் அதிகரித்த எண்ணிக்கையில் பனிக்கட்டி தொழிற்சாலைகள்
- உயர்கல்வி நிறுவனம்

**செயற்பாடு 2: நீங்கள் நகர சபையின் தலைவராக இருப்பின், உங்களுடைய பிரதான மூன்று முன்னுரிமைகள் எவை?**

| | |
|---|---|
| **மொத்த குழுச் செயற்பாடு** | நகர சபை நடவடிக்கைக்கான முன்னுரிமைகள்<br><br>1. நகர சபை பொறுப்புக்கள் 10 அடையாளம் காணப்பட்டு. ஒவ்வொன்றும் தனி அட்டையில் எழுதப்பட்டு சுவரிலே ஒட்டப்பட்டன.<br>2. ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் மூன்று பச்சை புள்ளிகள் வழங்கப்பட்டு, மிகவும் முக்கியமானவை என கருதும் பொறுப்பில் பதிக்குமாறு கோரப்பட்டனர். மூன்று புள்ளிகளை ஒரே பொறுப்பிலும் பதிக்கலாம் அல்லது மூன்று வேறு பொறுப்புக்களில் பதிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டது.<br>3. பங்குபற்றுநர்கள் அனைத்து புள்ளிகளையும் பதித்ததன் பின்னர், ஒவ்வொரு கடமைக்குமான புள்ளிகள் கணிக்கப்பட்டன.<br>4. எந்த பொறுப்பு அதிக புள்ளிகளை பெறும் என பங்குபற்றுநர்களிடம் கேளுங்கள்.<br>5. அவர்களுக்கு பெறுபேற்றை அறிவித்தல். |

**முடிவுகள்**

1. வடிகாலமைப்பு – 79 வாக்குகள்
2. நகரத் திட்டமிடல் - 62 வாக்குகள்
3. வீதிகள் - 40 வாக்குகள்
4. குப்பை – 30 வாக்குகள்
5. சுற்றுச் சூழல் பராமரிப்பு 22 வாக்குகள்
6. நூலகம் - 22 வாக்குகள்
7. பொழுதுபோக்கு பூங்கா – 12 வாக்குகள்
8. சமூகசேவை/தன்னார்வத் தொண்டு – 12 வாக்குகள்
9. சமுதாய ஒற்றுமை – 11 வாக்குகள்
10. சுற்றுலாத் துறை – 11 வாக்குகள்

**செயற்பாடு 3: மன்னாரின் வழியில் வரும் 'சந்தர்ப்பங்களை' அடையாளம் காணல்**

| | |
|---|---|
| **மொத்த குழு நடவடிக்கை** | பொது மற்றும் தனியார் அமைப்புக்களால் திட்டமிடப்பட்ட மன்னார் வலயத்திற்கான 'சந்தர்ப்பங்கள்' குறித்து இந்த நடவடிக்கை இலக்கு வைக்கும்.<br><br>2. மன்னாரை நோக்கி வரும் எதிர்கால 'சந்தர்ப்பங்கள்' தொடர்பில் சிந்திக்குமாறு பங்குபற்றுநர்களிடம் கேளுங்கள்.<br>3. சந்தர்ப்பங்களுக்கு மன்னார் மக்கள் எவ்வாறு தயாராகலாம் என கலந்துரையாடல், எ.கா, புதிய வர்த்தகங்கள், வர்த்தக உதவி சேவைகள், சுற்றுலாத் துறை வசதிகள், பொழுதுபோக்கு எண்ணங்கள், இன்னபிற, இந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்துவதற்கு உருவாக்கப்பட வேண்டும்.<br>4. பதில்களை பதிவு செய்தல். |
| **MM2022இற்கான அர்ப்பணிப்பு** | பங்குபற்றுநர்களின் ஆர்வங்களை ஒன்றிணைத்தல் மற்றும் திரட்டல் இறுதி கடமையாகும்.<br><br>மன்னாரை அபிவிருத்தி செய்வதில் யாரெல்லாம் உறுதியாக இருக்கின்றார்கள் மற்றும் நேரம் மற்றும் அர்ப்பணிப்பினை கொண்டுள்ளார்கள் என கேட்கவும். அவர்களுடைய தொடர்பு விபரங்களை பதிவேட்டில் குறிப்பிடுமாறு கூறவும். |

**நடவடிக்கை மூன்று பதில்கள்**

(போதிய நேரம் இன்மை, இடையூறு என்பன காரணமாக இந்த அமர்வினை முழுமையாக நடத்த முடியவில்லை)

மன்னாருக்கு திட்டமிடப்பட்ட எதிர்கால 'சந்தர்ப்பங்களுக்கு' தயாராவதற்கு, பின்வரும் முயற்சிகளை பங்குபற்றுநர்கள் அறிவுறுத்தினர்:

- சுற்றுலாத் துறை உபாயத்தினை தயாரித்து, சுற்றுலா வழிகாட்டிகளுக்கு பயிற்சியளித்தல்
- ஆங்கில மற்றும் சிங்கள மொழி நிகழ்ச்சிகளை ஸ்தாபித்தல்
- மன்னாரில் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் பயிற்சிக்கும், கணனிமயமாக்கலுக்கும் முக்கியத்துவம் வழங்கல்.

- மீன்பிடித் தொழிலுக்கான தொழில்நுட்ப பயிற்சி வசதிகளை அமைத்தல்
- பெறுமதி சேர் தொழில் துறைகளை உருவாக்கல், விசேடமாக மீன்பிடி மற்றும் விவசாயத் துறைகளுக்கு
- கடதாசி தொழிற்சாலை உள்ளடங்கலாக புதிய தொழில்களை உருவாக்கல்
- மன்னாரின் மறுமலர்ச்சி 2022 குழுவை ஆரம்பித்தல்

பங்குபற்றுநர்களால் முன்வைக்கப்பட்ட சில பொதுவான கருத்துக்கள்:

- 'எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கு நாம் உண்மையாகவே தயாராக உள்ளோமா?'
- 'புதிய பணித் தளங்கள் மற்றும் அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இளைஞர்களை தயார் செய்தல்'
- 'எமது மத மற்றும் கலாசார பண்பாடுகளின் அடிப்படையில் மன்னாரின் எதிர்கால வளர்ச்சிக்கு நாம் ஒன்றிணைய வேண்டும். இல்லையெனில், நாம் பல பிரச்சினைகளை எதிர்கொள்வோம்.'

## மன்னாரின் மறுமலர்ச்சி 2022 குழுக் கூட்டம்

டிசம்பர் மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை, மன்னார் நகர சபையில் இடம்பெற்ற கூட்டத்தில் 40 பேர் கலந்து கொண்டனர். உபதலைவர், உறுப்பினர்கள் மற்றும் நகர குடியிருப்பாளர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். எட்டு MM2022 உப குழுக்களை அமைத்தல் தொடர்பில் நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன. போலி செயற்பாடுகளை தவிர்ப்பதற்கு, நகர சபை சட்டத்திற்கு அமைவாக நகர சபையின் முறைசார் குழுக்களாக சில குழுக்களை நியமிப்பது தொடர்பில் நகர சபை அக்கறை செலுத்தியது. நகர சபை உறுப்பினரின் தலைமையின் கீழ் பின்வரும் ஆறு குழுக்களை உருவாக்குதல் தொடர்பில் மன்னார் நகர சபைக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது:

1. நகரத் திட்டமிடல் (மாநகர சேவைகள் மற்றும் பொது வசதிகள் உள்ளடங்கலாக)
2. சுற்றுச் சூழல் ஸ்திரத் தன்மை
3. சமுதாய நிகழ்ச்சிகள்
4. சுற்றுலாத் துறை அபிவிருத்தி
5. மகளிர் அபிவிருத்தி
6. நிதி

எஞ்சிய கல்வி மற்றும் வர்த்தக அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் இரண்டு குழுக்களுக்குமான தலைவர்கள் நகர சபைக்கு வெளியில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

தமது விருப்பத்தின் அடிப்படையில் பங்குபற்றுநர்கள் குழுக்களை தெரிவு செய்வர். அடையாளம் காணப்பட்ட ஏனையோர் குழுக்களுக்கு அழைக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் நோக்கம் ஒன்றை வடிவமைப்பதற்கு சாதகமான உபாயங்களை கண்டறியத் தொடங்குவர். தொடர் கவனிப்பு கூட்டம் 2012, ஜனவரி ஏழாம் திகதிக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு மன்னாரின் மறுமலர்ச்சி 2022 அறிக்கையின் முடிவுகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

இதன்போது, உருவான பிரதான குறிப்புக்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

**குழு 1: கல்வி**

- தொழில்நுட்பக் கல்லூரி
- ஆங்கிலக் கல்வி பயிற்சி
- தகவல் தொழில்நுட்ப முன்னோடியாக மன்னார்

**குழு 2: சுற்றுலாத்துறை**

- பொழுதுபோக்கு இடங்களின் அபிவிருத்தி. உ-ம்: கடற்கரை தங்குமிடங்கள்
- பறவைகள் சரணாலயம்
- பெருக்க மரத்தினை சுற்றுலாத் துறை கவர்ச்சிகரமான இடமாக பெறுமதி சேர்த்தல்
- மன்னார் கோட்டையை புனரமைத்தல்

**குழு 3: வர்த்தக அபிவிருத்தி**

- எதிர்கால சந்தர்ப்பங்களில் முதலீடு செய்வதற்கான புதிய சிறு வர்த்தக அபிவிருத்தி
- விளைச்சலுக்கான பெறுமதி சேர்த்தல்
- சுயவேலைவாய்ப்பு
- உள்ளூர் வர்த்தகங்களுக்கு தொழிற்பேட்டைகளை உருவாக்கல்
- கடதாசி தொழிற்சாலை

**குழு 4: சமுதாய நிகழ்ச்சிகள்**

- மது மற்றும் போதைப் பொருள் அடிமையாதலை அடையாளம் காணல்

- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்தை அடையாளம் காண்பதற்கான பிரசாரங்கள்
- உறுதியான மத ஒழுக்க விழுமியங்களை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள்
- மதுபானக் கடைகளின் இடத்தை மாற்றல்
- முதியவர்களின் பராமரிப்பு தொடர்பில் அதிக முக்கியத்துவம்

**குழு 5: சுற்றுச் சூழல் பராமரிப்பு**

- மண்ணரிப்பு
- அதிகரிக்கும் கடல் மட்டங்கள்
- எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிலில் சுற்றுச் சூழல் மதிப்பீடுகள்
- குடிநீர் மற்றும் நிலக்கீழ் நீர் வளங்கள்
- பனை வளங்கள்

**குழு 6: மகளிர் அபிவிருத்தி**

- சுயவேலைவாய்ப்புக்கான பயிற்சி
- கணவனை இழந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்
- புதிய தளங்களில் வருமானம் ஈட்டல்
- சிறு தொழில்

**குழு 7: நகரத் திட்டமிடல்**

- மன்னாருக்கான நகர அபிவிருத்தி அதிகார சபையின் நகரத் திட்டமிடல் வரைபை பெறல்
- வீடமைப்பு தொகுதிகள் குறித்து அக்கறை செலுத்தல்
- நவீன மலசலகூடம் மற்றும் கழிவுநீர் முறைகள்
- பாதுகாப்பான குடிநீர் (கல்சியம் குறைத்தல் குறித்து அக்கறை செலுத்தல்)
- நன்கு திட்டமிடப்பட்ட வடிகாலமைப்பு முறை
- கடற்கரை வீதி
- இந்தியாவிலிருந்து குறைந்த செலவில் மின்சாரம்
- அதிக சுற்றுவளைவுகள்

**குழு 8: நிதி**

- உத்தியோகப்பூர்வமாக குழுக்கள் உருவாக்கப்படவில்லை. எனினும், உறுப்புரிமைக்கான மக்கள் அடையாளம் காணப்பட்டனர்.

**நகர சபையின் செயற்பாடுகள்**

5. ஒவ்வொரு நகரத்திற்கும் நியமிக்கப்பட்ட நகர சபையானது, இந்த சட்டத்தின் மூலம் அல்லது வேறு எழுதப்பட்ட சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு உட்பட்டது. உள்ளூராட்சி அதிகாரம் என்ற வகையில் நகரத்தின் நிர்வாக எல்லைக்குள் மக்களின் மற்றும் நகரத்தின் சௌகரியங்களுக்கான பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுவழிகள், மற்றும் பொதுவாக சௌகரியம், வசதி மற்றும் நலன் என்பவற்றின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு என அனைத்து விடயங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் என அனைத்து விடயங்களும், விதிமுறைகளுக்கு உட்பட்டது. (நகர சபை கட்டளைச் சட்டங்கள், அத்தியாயம் 25, பக்கம் 2, 1988)

29. (1) நகர சபையானது, காலத்துக்கு காலம், சபையின் அதிகாரங்கள், கடமைகள் அல்லது பொறுப்புக்கள், அல்லது நகர சபையின் அக்கறைக்குட்பட்ட வேறு விடயங்கள், தொடர்பில் குறிப்புதவிக்கு நகர சபைக்கும் ஆலோசனை வழங்குதல் என்ற நோக்குடன், நகர சபையின் உறுப்பினர்களைக் கொண்ட அல்லது பகுதியளவில் நகர சபையின் உறுப்பினர்களைக் கொண்ட மற்றும் பகுதியளவில் நகரத்தில் வதிபவர்களைக் கொண்ட குழுக்களை நியமிக்கலாம் மற்றும் காலத்துக்கு காலம், தமது அதிகாரங்கள் அல்லது வகிபாகங்களை கடன் பெறுவதற்கு, விகிதம் விதித்து, அல்லது வரி விதிப்பதற்கு பயன்படுத்தும் குழுக்கள் தவிர்ந்த தேவைகளுக்கு அவ்வாறான அறிவுறுத்தல்கள் அல்லது சூழ்நிலைகள் தீர்மானிக்கப்படலாம். (நகர சபை கட்டளைச் சட்டங்கள், அத்தியாயம் 25, பக்கம் 9, 1988)

**ஆய்வு மற்றும் பதில்கள்**

# மன்னாரின் மறுமலர்ச்சி 2022 ஆய்வு
## உங்கள் கருத்தை தெரிவியுங்கள்!

இந்த தனித்துவமான இடத்தின் எதிர்கால அபிவிருத்தியை திட்டமிடலில் மன்னார் நகர சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு நகர சபை விருப்பம் கொண்டுள்ளது. இன்று உங்களுடைய நகரம் தொடர்பில் சிறப்பானதாக எதனை கருதுகின்றீர்கள் மற்றும் அதனை எவ்வாறு எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்ய முடியும் என்பதனை நகர சபை புரிந்து கொள்வதற்கு உங்களுடைய கருத்துக்கள் துணை புரியும். இந்த படிவத்தை பூர்த்தி செய்து, அடுத்த பத்து வருடங்களில் மன்னாரை முன்னேற்றுவதற்கு உதவுங்கள்.

மன்னார் நகரில் நீங்கள் வசிக்கின்றீர்களா? ☐ கற்கின்றீர்களா? ☐ அல்லது பணி புரிகின்றீர்களா? ☐

மன்னாரில் நீங்கள் எவ்வளவு காலம் வசிக்கின்றீர்கள்?

☐ 5 வருட குறைவு ☐ 5-10 ☐ 11-20 ☐ 20 வருடங்களுக்கு அதிகம்

பால்நிலை ☐ ஆண் ☐ பெண்

வயது: ☐ 17குறைவு ☐ 18-29 ☐ 30-39 ☐ 40-49 ☐ 50-59 ☐ 60-69

☐ 70க்கு அதிகம்

### கே 1: மன்னார் தொடர்பில் நீங்கள் விரும்புவது என்ன?

1. நல்ல வசதிகள் (உ-ம்: மின்சாரம், வைத்தியசாலை)
2. அமைதி, பிணைக்கப்பட்ட மக்கள் (உ-ம்: விருந்துபசாரம்)
3. வாழ்க்கை தரங்கள், (உ-ம்: விவசாயம், மீன்பிடி, அதிகரிக்கப்பட்ட தொழில் சந்தர்ப்பங்கள், வர்த்தக அபிவிருத்தி)
4. சமூக பல்வகைத் தன்மை (மக்களின் சிறந்த புரிந்துணர்வு, பெண்களுக்கு மதிப்பு)
5. நன்கு கற்ற மதிப்புக்குரிய மக்கள்
6. இயற்கைச் சூழல் (கடல், கடற்கரைகள்)
7. விசேட கட்டடங்கள் மற்றும் தளங்கள் (வழிபாட்டு தளங்கள், கோட்டை, பெருக்க மரம்)
8. சிறந்த சவால்கள், அபிவிருத்தி மற்றும் உபாயத் தோற்றம் (உ-ம்: வீதி அபிவிருத்தி, கல்வி வசதிகள், பொருளாதார அபிவிருத்தி, தொழில் விரிவாக்கம், அதிகரித்த சமூக சேவைகள், அனாதை விடுதிகள், சுற்றுலாத் துறை, பெற்றோலிய அகழ்வு, அதிக அளவிலான கடைகள்)
9. மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமை
10. யுத்தத்திற்குப் பின்னரான அமைதி
11. தனித்துவம்/கலாசார பாரம்பரியம்/வரலாற்றுச் சிறப்பு
12. வேறு (உ-ம்: அனைவரும் தமிழ் கதைக்கின்றனர், கிறிஸ்தவ பெரும்பான்மை, விளையாட்டு, பாலம், போதிய வதிவிடம்)

கே 2: மன்னாரில் பாதுகாக்கப்பட வேண்டிய விசேட பௌதீக அம்சங்கள் மற்றும் சமூக காட்சிப் பண்புகள் எவை?

| பௌதீக அம்சங்கள் | சமூக காட்சிப் பண்புகள் |
|---|---|
| | |
| | |
| | |

பாதுகாக்கப்பட வேண்டிய பௌதீக அம்சங்கள்:

1. தொல்பொருளியல்/சுற்றுலாத் தளங்கள் (உ-ம்: தொல்பொருளியல் தளங்கள், கோட்டை, அல்லிராணிக் கோட்டை, பெருக்க மரம், பறவை சரணாலயம்)
2. கலாசார மற்றும் வழிபாட்டு இடங்கள் (உ-ம்: மடுத் திருத்தலம், திருக்கேதீஸ்வரம் கோவில்)
3. சுற்றுச் சூழல்/இயற்கை வளங்கள் (உ-ம்: கடல், கடற்கரை, குடிநீர், தாவரங்கள், மர நடுகை, உள்ளூர் குளங்கள், மண்ணரிப்பை தடுத்தல், இயற்கை காடுகள், கனிம மணல், மணல் அகழ்வதனை நிறுத்தல், மணல் குன்றுகள், ஊர்வன, மரங்கள் வெட்டுவதனை நிறுத்தல்)
4. குடிசைத் தொழில் (உ-ம்: பனை, தெங்கு)
5. தனித்துவமான அம்சங்கள் (உ-ம்: கழுதைகள், வரலாற்று சின்னங்கள், மன்னார் அடையாளம்)
6. பொதுவான கட்டடங்கள், வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு (உ-ம்: சுகாதார வசதிகள், சிறந்த வீதிகள், பாலம், துறைமுக வசதிகள், வீடமைப்புத் திட்டங்கள், விளையாட்டு மைதானங்கள்)

**பாதுகாக்கப்பட வேண்டிய சமூக காட்சிப் பண்புகள்**

1. கலாசார பாரம்பரியம் (உ-ம்: வரலாற்று புத்தகங்கள், கிறிஸ்தவ கலாசாரம், பண்பாட்டு பழக்கங்கள், வெளி கலாசாரங்கள் ஊடுருவலை தடுத்தல், கர்நாடக சங்கீதம் மற்றும் கலை, கூத்து நடனம் மற்றும் நாடகம், தமிழ் கலாசாரம், மேற்கத்தைய கலாசார ஆதிக்கத்தை நிறுத்தல்)
2. தன்னார்வத் தொண்டு/சமூக சேவை (உ-ம்: சமூகத்தின் பல்வேறுப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்தல், முதியவர்களை பராமரித்தல், வறியவர்கள் மத்தியில் வாழ்வாதார அபிவிருத்திக்கு கடன்கள் மற்றும் ஆலோசனை வழங்கல், குறைந்த வருமான குழுக்களை அடையாளம் காணல், நிர்க்கத்தியானவர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் அக்கறை செலுத்தல்)
3. சமுதாய ஒத்துழைப்பு மற்றும் பங்குபற்றல் (உ-ம்: நாங்கள் சகோதரர்கள் என்ற அங்கீகாரம், மக்களை நடவடிக்கையில் ஈடுபடுத்தல், சமூக உணர்வுகள், மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்கல்)
4. சமுதாய ஒற்றுமை (உ-ம்: சமுதாயங்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை உருவாக்கல், இனங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை நீக்கல், கிராம இணக்கம், மீனவர்களுக்கு மத்தியில் ஒற்றுமை, சமூக மற்றும் மத ஒன்று கூடல்கள், சமுதாயங்களுக்கு மத்தியில் சிறந்த உறவுகள்)
5. எதிர்காலம் குறித்த நம்பிக்கை (உ-ம்: இளைஞர்கள் எதிர்நோக்கும் விரக்தியை ஒழித்தல், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, மன்னாரின் எதிர்காலம் நம் கையில், மக்கள் மன்னாரை விரும்பச் செய்தல், இளைஞர்களின் எண்ணங்களை மதித்தல், எதிர்கால பொருளாதார அபிவிருத்தி, மக்களின் சுதந்திரம், அமைதியான சூழலை பேணல், புதிய எண்ணங்களின் முன்னுரிமை வழங்கல், தலைமைத்துவ பண்புகளை ஊக்குவித்தல்.
6. நன்னடத்தை, விழுமியம், உரிமைகள் (உ-ம்: ஒழுக்கமான சிறுவர்கள், மதுபானக் கடைகளை விட்டு ஒதுங்கியிருத்தல், கடவுளுக்குப் பயந்த வாழ்க்கையை உள்வாங்கல், சிறுவர் சுரண்டல் மற்றும் சிறுவருக்கு எதிரான வன்முறையை நிறுத்தல், கணவனை இழந்தவர்கள் மீதான துஷ்பிரயோகத்தை நிறுத்தல், மது மற்றும் போதைப் பொருள் பயன்பாடு நிறுத்தப்படல், சிறந்த சமூகத்தை உருவாக்கல், சமூகத்திற்கு எதிரான நடத்தையை நிறுத்தல், சட்ட ஒழுங்கை நிலைநாட்டல், முதியவர்களை மதித்தல், பால்நிலை சமத்துவம், மதுபானக் கடையின் இடத்தை மாற்றல், மத அவதானிப்புக்கள், மக்களுக்கான உரிமைகள், தனியான உரிமைகள்)
7. சுற்றுச் சூழலுக்கான பராமரிப்பு (உ-ம்: கடற்கரைகளில் இருந்து மணலை அப்புறப்படுத்துவதனை நிறுத்தல், முருகைகற்பாறைகளை பாதுகாத்தல், மரங்கள் வெட்டுவதனை நிறுத்தல், உள்ளூர் குளங்களை மீளமைத்தல், மரங்கள் நடல், குப்பைகள் வீசுவதனை நிறுத்தல், மீள்சுழற்சி)
8. பெறுமதி மிக்க மனித வளங்கள் (ஒருங்கிணைந்த வகை 8 மற்றும் 9) (உ-ம்: மொழி கற்றலை முன்னுரிமைப்படுத்தல், விசேடமாக ஆங்கிலம் மற்றும் சிங்களம், இரு பாலாருக்கும் சமமான கல்வி, மாணவர்களுக்கு சிறந்த கல்வி)

9. வேறு (வகை 10) (உ-ம்: சமூக நடவடிக்கைகள், குடும்ப உறவுகள்)

ஆங்கிலத்திலிருந்து, தமிழுக்கு மொழிபெயர்த்தமையில், அர்த்தம் மாறியமையின் காரணமாக, இந்த கேள்விக்கு மோசமான பதில்கள் கிடைத்தன. எந்த பௌதீக மற்றும் சமூக அம்சங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கு விடையளிப்பதற்கு பதிலாக, மன்னாரில் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு பங்குபற்றுநர்கள் விடையளித்திருந்தனர்.

### கே 3: மன்னாரை சிறந்த இடமாக மாற்றுவதற்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவது தொடர்பில் உங்களுடைய ஆலோசனைகள் எவை?

1. போக்குவரத்து (உ-ம்: ரயில்பாதையை விரைவாக கட்டுதல், பேருந்து நிலையத்தில் மலசலகூட வசதிகள், நவீன பேருந்துகள்)
2. வாழ்வாதார மற்றும் பொருளாதார அபிவிருத்தி (உ-ம்: ஏற்றுக் கொள்ளக் கூடிய வாழ்க்கைச் செலவு, வர்த்தக துறை நவீனமயமாக்கப்படல், உற்பத்திக்கு உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தல், வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், பெண்களுக்கான வேலைவாய்ப்பு, இந்தியா, இலங்கை இணைப்பு, கடலுணவு தொழில் அபிவிருத்தி, கணனித் துறை அபிவிருத்தி, தன்னிறைவான மன்னார், பொது-தனியார் பங்காளித்துவம், பாரியளவிலான தொழிற்சாலைகளை அறிமுகப்படுத்தல், கடதாசி தொழிற்சாலைகள், அதிக ஏற்றுமதிகள், பெண்களுக்கான குடிசைக் கைத்தொழில்)
3. சுத்தமான நகரம் (உ-ம்: மயானங்களில் குப்பை சேகரித்தலை நிறுத்தல், வழமையான குப்பை சேமித்தல், நகரை சுத்தமாக வைத்திருத்தல்)
4. சமூக ஒற்றுமை (உ-ம்: மக்கள் மத்தியில் பாரபட்சம் இன்மை, நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்தல், தேசப்பற்றுடன் இருத்தல், தேசிய ஆர்வத்திற்கு ஆதரவளித்தல், அனைவரது கருத்தையும் மதித்தல், சிங்கள/தமிழ்/முஸ்லீம் ஒற்றுமை, சுயநலமின்றி இருத்தல், பொதுநலனில் அக்கறை செலுத்தல், மன்னாரில் வாழும் மக்கள் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும், இது எமது இடம் என நாம் எண்ண வேண்டும், அனைத்து மத மக்களும் ஒன்றிணைந்து, மன்னாரின் மறுமலர்ச்சி 2022இற்கு ஆதரவளிக்க வேண்டும்)
5. மேலதிக கல்வி (உ-ம்: ஆங்கில, சிங்கள மொழி பயிற்சி, தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் அமைத்தல், சமுதாயக் கல்வி வழங்கல், நவீன தொழில் நுணுக்க கல்வி, புதிய ஆய்வு மற்றும் இடையீடுகளுக்கு நிதியிடல், உயர்தரக்கல்வியை நிறைவு செய்வதற்கு மாணவர்களை ஊக்குவித்தல், மேலதிக கல்விக்கு புலமைப்பரிசில் வழங்கல்)
6. சுற்றுச் சூழல் பராமரிப்பு (உ-ம்: மரம் நடல், இயற்கை வளங்கள் அபிவிருத்தி, கடலரிப்பை நிறுத்தல், சட்டவிரோத மண் அகழ்வை நிறுத்தல், கடற்கரை அணைகளை அமைத்தல், அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை வடிவமைத்தல்)
7. சுகாதார வசதிகள் மற்றும் சேவைகள் (உ-ம்: சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தல், சிறந்த வைத்தியசாலை வசதிகள், டெங்கு தடுப்பு நிகழ்ச்சிகளை, ஒழிப்பு நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தல்)
8. நகரத் திட்டமிடல் மற்றும் வசதிகள் (உ-ம்: வீதி விளக்குகள் மற்றும் பழையவற்றை பேணல், சிறுவர் பூங்காக்கள், பொது இடங்கள் விருத்தி செய்யப்படல், மன்னாரை அழகாக்கல், நீன நூலகம் மற்றும் சேவைகள், வீதி சமிக்ஞைகளை அறிமுகப்படுத்தல், புதிய நகரை கட்டியெழுப்பல், உறுதியான அபிவிருத்தி, கடற்கரை பூங்காவை அமைத்தல், நகர இடத்தை விஸ்தரித்தல், விளையாட்டு மைதானம் அமைத்தல், கலாசார நிலையம் அமைத்தல், மன்னாரை உலகில் பிரபலமான இடமாக மாற்றல், சந்தைத் தொகுதி அமைத்தல், மன்னார் நகரை எவ்வாறு வடிவமைத்தல் என்பது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கல்)
9. வீதி அபிவிருத்தி (உ-ம்: தீவைச் சுற்றி கடற்கரை வீதி, உள்ளக வீதிகளுடன் இணைத்தல், பழைய வீதிகளை புனரமைத்தல் மற்றும் புதியவற்றை அமைத்தல், வீதிகளை பரவலாக்கல்)
10. வடிகாலமைப்பு (உ-ம்: குளங்களை மீளமைத்தல், வடிகாலமைப்பை நவீனமயமாக்கல்)
11. பயன்பாடுகள் - மின்சாரம் மற்றும் நீர் (உ-ம்: கீரியிலிருந்து நீர் எடுப்பதனை நிறுத்தி, முருங்கனிலிருந்து எடுக்கவும், போதியளவு சக்தி விநியோகத்தை உறுதி செய்தல், குடிநீருக்கான குழாய்களை அமைத்தல்)
12. நன்னடத்தை/உரிமைகள்/சட்ட விதிகள் (உ-ம்: இளம் தலைமுறையினர் மாற வேண்டும், அனைவருக்கும் சட்டம் பிரயோகிக்கப்படல், அரசியல் செல்வாக்கை குறைத்தல், பொறுப்பான, நேர்மையான அலுவலகங்களை உறுதி செய்தல், அனைத்தும் நீதியாக, சமமாக பகிரப்படல், உதவி விநியோகத்தில் பாரபட்சமின்மை, நல்லாட்சி, சம உரிமைகளை உறுதி செய்தல்)
13. சுற்றுலாத்துறை (உ-ம்: கோட்டையை மீளமைத்தல், கடற்கரையை அழகாக்கல், சுற்றுலாத்துறை தங்குமிடங்களை வழங்கல், கீரி மற்றும் சவுத்பார் கடற்கரையை அபிவிருத்தி செய்தல், மத தளங்களை பாதுகாத்தல், சுற்றுலா விடுதிகளை அமைத்தல், தலைமன்னார் மணிக்கூட்டு கோபுரத்தை மீளமைத்தல், தலைமன்னர் சுற்றுலா அபிவிருத்தி, பாலத்திற்கு அருகில் ஓய்வெடுத்தல் இடத்தை அமைத்தல்)

14. வேறு (உ-ம்: வீதி விலங்குகளை பராமரித்தல். நவீன இறுதிக் கிரியை முறைகளை அறிமுகப்படுத்தல், வரி வசூலித்தல், சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்தல், நகர சபை வருமானத்தை அதிகரித்தல், நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கல். மக்களை தவறாக நடத்தாமை, மன்னார் மற்றும் ஏனைய மாவட்டங்களுக்கு இடையிலான உறவை மேம்படுத்தல், நவீன தொலைத்தொடர்பு முறைகளை அறிமுகப்படுத்தல், திருப்பி வழங்காது அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகளை முழுமையாக பயன்படுத்தல், மன்னாரின் வளங்களை நிலைத்திருக்கக் கூடிய வகையில் பயன்படுத்தல்)
15. மக்களின் பங்களிப்பு (உ-ம்: மன்னாரின் அபிவிருத்தி தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், உள்ளூர் குழுக்கள் மற்றும் சமூக சார்பான நிறுவனங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தல், பிரதேச மக்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படல் வேண்டும், தொலைநோக்கு மற்றும் பணிகளுக்கு அனைவரும் உதவவேண்டும், உள்ளூர் மக்களின் கருத்தை கேளுங்கள், அபிவிருத்திக்கான அர்ப்பணிப்பு, இளைஞர் சிரமதானங்களை விருத்தி செய்தல், இளைஞர்களின் அபிவிருத்தியின் ஊடாக மன்னார் சிறந்த இடமாக மாறும், எமது எதிர்காலத்தை நாம் தீர்மானிக்க வேண்டும், மன்னாரின் மறுமலர்ச்சி 2022 தொடர்பில் அனைவருக்கும் விழிப்புணர்வு வழங்கல்)
16. கலை/கலாசாரம்/பொழுதுபோக்கு (நீக்கப்பட்ட பகுதி)
17. நில உரிமைகள் மற்றும் வீடமைப்பு (உ-ம்: நில உரிமைத்துவம் தொடர்பான சிக்கல்களை தீர்த்தல், மீள்குடியேறியவர்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்கல்)

**கே 4: நகர சபைக்கு நீங்கள் சொல்ல விரும்பும் மூன்று முக்கியமான இலக்குகள் எவை?**

கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் உங்களுக்கு மூன்று முக்கியமான இலக்குகளை 1, 2, 3 என குறிப்பிடுங்கள்.

- ☐ இயற்கை சூழலை பாதுகாத்தல்
- ☐ மக்களின் கலாசார பாரம்பரியத்தை கொண்டாடல்
- ☐ மிகவும் பலவீனமான மக்களை பராமரித்தல்
- ☐ நிலைத்திருக்கும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல்
- ☐ வீதிகள், வடிகாலமைப்பு, குப்பை போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வழங்கல்
- ☐ நகர சபை நிகழ்ச்சிகளில் சமுதாய ஆர்வம் மற்றும் பொது ஈடுபாட்டை விருத்தி செய்தல்
- ☐ புதிய பொழுது போக்கு வசதிகளை அறிமுகப்படுத்தல்
- ☐ தோற்றத்தில் அழகிய நகரை உருவாக்கல்
- ☐ சமுதாய தன்னார்வத் தொண்டினை மேம்படுத்தல் மற்றும் வளமளித்தல்
- ☐ சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் வகிபாகத்தை மதித்தல்

**உங்களுக்கு முக்கியமான வேறு இலக்குகள் எவை?**

- ☐ ..............................................................................................................
- ☐ ..............................................................................................................
- ☐ ..............................................................................................................

C4 அரசியல் தலையீடு இன்மையை உறுதி செய்தல்
C19 கலாசார நடவடிக்கைகள்
C19 பொழுதுபோக்கு வசதிகள்
C20 நகரத் திட்டமிடல் - அழகிய மன்னார்

C20 மீள்சுழற்சி
C20 சமூக மற்றும் சுற்றுச் சூழல் ரீதியாக நாம் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும்
C26 வாசகர் வட்டம்
C26 ஊடக இணையத்தளம்
C30 வீதி சமிக்ஞைகள்
C30 பொது வசதிகளின் பராமரிப்பு
C30 வீதி விலங்குகள் முகாமைத்துவம்
C31 குடியிருப்புக்கான தாழ் நிலங்களின் பண்படுத்தல்
C38 பாடசாலைகளுக்குள் உருவாக்கப்பட்ட கற்பித்தல் சேவைகள்
C38 அனைத்து மத மாணவர்களுக்குமான பாடசாலை விடுதிகள்
C39 புதிய முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகள்
C40 மீன்பிடி அனுமதி முறையை நீக்கல்
C42 பொது சந்தை அறிமுகம்
C46 சிறுவர்கள் மற்றும் இளம் பெண்கள் பாதுகாப்பு
C48 அழகிய மன்னார் நகரம்
C50 அரிப்பிலிருந்து பாதுகாக்கப்பட்ட கடற்கரை
C50 புதிய கலாசாரத்தின் மோசமான விளைவுகளை குறைத்தல்
C62 மக்களின் விருப்பங்களை அறிந்து கொண்டு செயற்படல்
C72 அனைத்து வீதி விளக்குகளும் செயற்படுவதனை உறுதி செய்தல்
C74 மன்னாருக்கு சேவை செய்த மக்களை அங்கீகரித்தல்
C76 வழமையாக வீதிகளை பேணல், எனவே, அவற்றை திருத்த வேண்டி நேராது
C77 எவ்வாறு சிறந்த பிரஜையாக நடந்து கொள்வது என்பது தொடர்பில் கருத்தரங்குகளை நடத்தல்
C77 வாடகைக்கு அமர்த்தப்பட்ட சுத்திகரிப்பாளர்கள் முறையாக செயற்படல்
C78 அதிகரித்த வீட்டுத் தோட்டத்தை ஊக்குவித்தல்
C78 கடற்கரைகள் சுத்தம் செய்யப்பட்டு, இருக்கை வசதிகள் செய்யப்படல் வேண்டும்
C81 சிறுவர் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை விருத்தி செய்தல்
C88 சராசரி மனிதரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்
C92 தன்னார்வத் தொண்டு மேம்படுத்தப்படல் மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு ஆதரவளித்தல்
C96 அபிவிருத்தியை நோக்கி மன்னாரை வழிநடத்தல்
C103 மற்றைய மாவட்டங்களிடம் இருந்து கற்றல்
C106 கணனி அறிவு மக்களுக்கு அளிக்கப்படல் வேண்டும்.
C114 மயானத்தை சுத்தமாக வைத்திருத்தல், பிணங்களை எரிக்கும் இடத்தை பேணல்
C116 நகரை சுத்தம் செய்தலுக்கு அதிக முன்னுரிமை வழங்கல்
C129 சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை கண்டறிவதற்கு கலை நடவடிக்கைகள் மற்றும் வேறு புத்தாக்க வழிகளை பயன்படுத்தல்
C132 அனைத்து சமுதாயங்களும் அபிவிருத்திக்காக ஒன்றிணைக்கப்படல் வேண்டும்
C135 இளைஞர்களும், மாணவர்களும் பாதுகாக்கப்படுவதுடன், வேலைவாய்ப்பு வழங்கப்படல் வேண்டும்.
C140 இலஞ்சம் மூலம் அல்லாது, பொது அதிகாரிகளில் இயற்கை ஊக்கத்தை ஏற்படுத்தல்
C143 வர்த்தக நிலைகளை பரவலாக்கல் மற்றும் புதிய தொழில் நுணுக்கத்தை அறிமுகப்படுத்தல்
C145 நூலகம் மற்றும் அதன் சேவைகளை மேம்படுத்தல்
C147 நகர மண்டபத்தை புதுப்பித்தல்
C149 முதியவர்களை பராமரித்தல்
C150 விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தும் பயிற்சிகளை வழங்கல்
C151 பெண்களின் கல்வி மற்றும் வாழ்க்கையை மேம்படுத்தல்

C152 வீட்டு இலக்கங்கள் தெளிவாக அடையாளம் காணப்படல் வேண்டும்.
C153 அரங்கினை மீள்வடிவமைத்தல்
C157 சனநெருக்கடியான பகுதிகளில் வீதி எல்லைகளை ஸ்தாபித்தல்
C172 பரவலான வீதிகள்
C172 திட்டமிடப்பட்ட வகையில் கடைகள் மற்றும் வர்த்தக எல்லைகளை உருவாக்கல்
C172 முறையான நகரத் திட்டமிடலை ஒன்றிணைத்தல்
W1 டச்சு கோட்டை மற்றும் அல்லிராணிக் கோட்டையை மீளமைத்தல்
W4 மன்னார் பொது வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்
W6 கட்டட குறியீடுகள் அனைத்தும் புதிய நிர்மாணத்துடன் பொருந்தியிருத்தல் வேண்டும்
W7 நுளம்பு பெருகும் இடங்கள் அனைத்தையும் அடையாளம் கண்டு, டெங்கு பரவலை கட்டுப்படுத்தல்
W8 நகரின் மத்தியிலிருந்து, பிரதான வீதியை மாற்றல்
W10 அனைத்து சமுதாய செயற்றிட்டங்களுக்கும் 'உதவும் கரம்' முன்னணியை உருவாக்கல்
W12 யுத்தத்தின் காரணமாக மன்னாரை விட்டு வெளியேறிய புலமையாளர்களை தொடர்பு கொள்ளல்
W12 இரு பாலினருக்கும் தொழில் பயிற்சி மற்றும் விளையாட்டு வசதிகளை உருவாக்கல்
W12 குப்பை மற்றும் தேவையற்ற பொருட்களின் மீள்சுழற்சி
W13 நவீன பொதுப் போக்குவரத்து
W14 உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இடையில் சாதகமான உறவுகளுடன் ஒரே நோக்கத்தை எட்டுவதற்கு நகர சபை உறுப்பினர்கள் ஒன்றிணைதல்
W22 மன்னாரில் நவீன மாடிகளுடன் கட்டடங்களை அமைத்தல்
W32 அழகான வீதிகளை நிர்மாணித்தல்
W37 மற்ற மக்களின் நிலங்களில் சட்டவிரோத ஆக்கிரமிப்பை நிறுத்தல்
W38 நகரின் மத்தியில் மணிக்கூட்டு கோபுரத்தை அமைத்தல்
W41 சமாதான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தல்
W41 முஸ்லீம் மக்களை பயனுறுதி மிக்க வகையில் மீள்குடியேற்றல்
W44 மின்சாரம்! மின்சாரம்! மின்சாரம்! பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்
W47 நிலத்தின் பயனுறுதிமிக்க பயன்பாட்டிற்கு நவீன வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணித்தல்
W53 அதிகரிக்கும் கடல் மட்டங்களை கண்டறிந்து சீர்படுத்தல்
W55 பாரிய குறுக்குப்பாதைகளுக்கு இடையில் சுற்றுவளைவுகள் அமைத்தல்

**கே 6: நீங்கள் மன்னார் நகர சபை தலைவராக இருப்பின் நடவடிக்கைக்கான மூன்று பிரதான முன்னுரிமைகள் எவையாக இருக்கும்?**

1. ....................................................................................................

2. ....................................................................................................

3. ....................................................................................................

1. வீதிகள்
2. வடிகாலமைப்பு
3. சுற்றுச் சூழல் பராமரிப்பு
4. குப்பை
5. சுற்றுலாத் துறை
6. நகரத் திட்டமிடல்
7. நூலகம் மற்றும் நூலக சேவைகள்
8. பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் கலாசார நடவடிக்கைகள்
9. தன்னார்வத் தொண்டு/சமூக சேவைகள்

10. சமுதாய ஒற்றுமை
11. சுகாதாரம் (உ-ம்: சுகாதாரம், வீதி விலங்குகள், போதைப் பொருள் துஷ்பிரயோகம்)
12. வேறு (உ-ம்: வரி சேகரித்தல்)

ஆய்வினை உருவாக்கியவர், உள்ளூர் அரசாங்கத்தின் பொறுப்புக்கள் தொடர்பில் பங்குபற்றுநர்கள் பரிச்சயமாக இருத்தல் வேண்டும் என்ற தவறான கருதுகோளை முன்வைத்தார். சில மக்கள் மாத்திரமே நகர சபையின் வகிபாகங்கள் மற்றும் கடமைகள் தொடர்பில் பரிச்சயம் கொண்டிருந்தனர். இந்த கேள்வி பயனுறுதி மிக்க வகையில், நகர சபை பொறுப்புக்களின் தற்போதைய பட்டியலில் இருந்து, அவர்களுடைய முன்னுரிமைகளை தரப்படுத்துவதற்கு பங்குபற்றுநர்கள் கோரப்பட்ட பாரிய சமுதாய செயலமர்வில் பதிலளிக்கப்பட்டது.

**கே 6: மன்னார் நகரின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கையில் நீங்கள் எவ்வாறு ஈடுபட விரும்புகின்றீர்கள்?**

- ☐ நகர சபையின் சுற்றுச் சூழல் செயற்றிட்டங்களில் ஈடுபடல்
- ☐ நகர சபையின் ஆலோசனைக் குழு ஒன்றில் உறுப்பினராக இருத்தல்
- ☐ சமூக சேவை தன்னார்வ ஊழியராக இருத்தல்
- ☐ வீதி விலங்குகளை (நாய்கள், கழுதைகள், மாடுகள்) முகாமை செய்வதற்கு உதவுதல்
- ☐ ……………………..பிரிவில் தொழில் நுணுக்க நிபுணத்துவம் வழங்கல்
- ☐ நகரத்திற்கு கலாசார நிகழ்வு நிகழ்ச்சிகளை வடிவமைக்க உதவுதல்
- ☐ சிரமதான நிகழ்ச்சிகளில் ஈடுபடல்
- ☐ வேறு: ………………………………………………………………………………………

கீழுள்ள தகவல்களை பூர்த்தி செய்தல்:

பெயர்:…………………………………………………………… கைபேசி: ………………………………………………

தொலைபேசி:…………………………………………………மின்னஞ்சல்:………………………………………………

**நன்றி!**

நொக்கியா கைபேசிகள் மற்றும் குடைகள் உள்ளடங்கலாக பரிசுகளை வென்றெடுப்பதற்கு, பூர்த்தி செய்யப்பட்ட ஆய்வு படிவத்தை மன்னார் நகர சபையிடம் ஒப்படையுங்கள்.